5 முக்கிய கூறுகள்
10 வாக்குறுதிகள் 100 நாட்கள்
60 வாக்குறுதிகள் 5 வருடம்
5 சிறப்பு அர்ப்பணிப்பு

# நம்பிக்கை புத்தகம்

## நாட்டை உருவாக்கி நம்பிக்கையை நிறைவு செய்தல்

PAKATAN HARAPAN

Amanah

**முன்மொழிதல்**

**முன்னுரை**

**அம்னோ தேசிய முன்னணி கீழ் நாட்டின் தற்பொழுதைய நிலை**

**பக்காத்தான் ஹாராப்பானின் அடிப்படை கொள்கை**

**நூறு நாட்கள், பத்து திட்டங்கள்**

**மக்களின் வாழ்வாதார சுமையை குறைப்பது**

**படிநிலை 1 : ஜிஎஸ்டி வரியை ஒழித்தல்**

**வாக்குறுதி 2 : பொருட்களின் விலையேற்றத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை**

**வாக்குறுதி 3 : நாட்டின் வளத்தை முறையாக பங்கிடப்படுவதை உறுதி செய்தல்**

**வாக்குறுதி 4 : வாங்கும் சக்திகுட்பட்ட வீடுகள், நியாய வாடகை வீடுகள் திட்டங்களை அதிகரித்தல்**

**வாக்குறுதி 5 : இளையோரின் வாழ்க்கை சுமையை குறைத்தல்**

**வாக்குறுதி 6: டோல் கட்டணமுறையை ஒழித்தல்**

**வாக்குறுதி 7 : பெட்ரோல் எரிபொருள் விலையை சீராக்குதல்**

**வாக்குறுதி 8 : பொதுப்போக்குவரத்து சேவை தரத்தை மேம்படுத்துதல்**

**வாக்குறுதி 9 :பொது சுகாதார துறையின் சேவை தரத்தை மேம்படுத்துதல்**

**வாக்குறுதி10 : மக்களின் உணவுத்தேவை பூர்த்தி செய்தல் மற்றும் விவசாயிகளின் நலன்களை பாதுகாத்தல்**

**படிநிலை** 2: **நிறுவன நிர்வாகம் மற்றும் அரசியல் சீர்திருத்தம்**

**வாக்குறுதி** 11: **மலாய்க்காரர்கள் மற்றும் அதன் நிறுவனங்களின் கௌரவத்தை மீட்டெடுத்தல்**

12. **பிரதமர் பதவிக் காலம் கட்டுப்படுத்தப்படுவதோடு பிரதமர் துறையும் மறுசீரமைக்கப்படும்.**

வாக்குறுதி 13: 1எம்டிபி, பெல்டா, மாரா மற்றும் தாபோங் ஹாஜி போன்ற ஊழல்களுக்குத் தீர்வு காணுதல்

வாக்குறுதி 13: 1எம்டிபி, பெல்டா, மாரா மற்றும் தாபோங் ஹாஜி போன்ற ஊழல்களுக்குத் தீர்வு காணுதல்

வாக்குறுதி 15: அரச சட்டத்துறை தலைமையகத்திலிருந்து பொது வழக்கறிஞர் தலைமையகம் பிரித்து செயல்படும்

வாக்குறுதி 16: நாடாளுமன்ற நிறுவனத்தின் அதிகாரத்தை மீட்டெடுத்தல்

வாக்குறுதி 17: தேர்தல் முறையின் வெளிப்படைத்தன்மை மற்றும் நவீனத்தை உறுதிப்படுத்துதல்

வாக்குறுதி 18: அரசியல் நிதியியல் ஒருமைப்பாட்டை நிலைநிறுத்தல்

வாக்குறுதி 19: நீதித்துறை மற்றும் சட்டத்துறையின் மீதுள்ள நம்பகத்தன்மையை மீட்டெடுத்தல்

வாக்குறுதி 20: மலேசிய ஆயுதப் படை மற்றும் அரச மலேசிய போலீஸ் படைக்கு மதிப்பளிக்க வேண்டும்

வாக்குறுதி 21: பொதுச் சேவை துறைகளை மேம்படுத்துதல்

வாக்குறுதி 22: அனைத்து அரசு நிறுவனங்களும் (ஜி.எல்.சி) சர்வதேச தரத்திற்கு சமமாக்கப்பட வேண்டும்

வாக்குறுதி 23: அரசாங்க நிதி வருவாயின் கையிருப்புக்குக் கூடுமான அளவு அதிக லாப ஈவுக்கு உறுதி செய்யும்

வாக்குறுதி 24: உண்மையான மத்திய கூட்டாட்சி முறையைப் புதுப்பித்தல்

வாக்குறுதி 25: உள்ளூர் அதிகாரிகளின் பங்களிப்பு மற்றும் அதிகாரம் பலப்படுத்தப்படும்

வாக்குறுதி 26: உலகளாவிய நிலையில் மனித உரிமைக்கு முக்கியத்துவம் வழங்கும் நாடாக மலேசியா உருவெடுக்கும்

வாக்குறுதி 27: அநியாயமான சட்டங்களை அழித்தல்

வாக்குறுதி 28: அக்கிரமங்களின் பிடியில் சிக்கியிருக்கும் இளைஞர்களை ஆக்கப்பூர்வமாகவும் சுதந்திரமாகவும் உருவாக்குதல்

வாக்குறுதி 29: வரவு செலவுத் திட்டத்தின் முறையும் வெளிப்படைத்தன்மையும் மேம்படுத்தப்படும்

படிநிலை 3: நியாயமான பொதுவான பொருளாதார வளர்ச்சிக்கு வித்திடல்

**வாக்குறுதி** 30: **பூமிபுத்ரா மற்றும் மக்களின் பொருளாதாரத்தை உயர்த்துதல்.**

**வாக்குறுதி** 31: **முதலீட்டை வளப்படுத்தல் மற்றும் வணிக**, **வர்த்தக செயல்முறைகளை எளிமைப்படுத்தல்.**

**வாக்குறுதி** 32: **மக்களுக்கும் தொழில் முனைவர்களுக்கும் வர்த்தக வரியை சாதகமான அறிமுகப்படுத்தல்.**

**வாக்குறுதி** 33 : **அனைவருக்கும் சமத்துவ வேலை வாய்ப்பினை உருவாக்கும் ஆணையத்தை அமைப்போம்.**

**வாக்குறுதி** 34: **மக்களின் வருமானத்தை கூட்டுதல்.**

**வாக்குறுதி** 35: **தொழிலாளர் மாண்பை நிலைநிறுத்துவதுடன்**, **தகுதி மிக்க வேலை வாய்ப்பினை உருவாக்குதல்.**

**வாக்குறுதி 36: இல்லத்தரசிகளுக்கு இபிஎஃப் செயல்படுத்துதல்**

வாக்குறுதி **37:** மக்கள் நல்வாழ்வின் சுபீட்சத்தை தொடர்ந்து பேணி காத்தல்.

வாக்குறுதி **38:** தீபகற்ப பூர்வக்குடிகளின் உரிமைகளை நிலைநாட்டுவோம்.

**வாக்குறுதி** 39: **சமத்துவமான பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் வளர்ச்சி.**

**படிநிலை** 4: 1963 **வாக்குறுதியின் அடிப்படையில் சபா மற்றும் சரவா மாநில உரிமைகளை மீட்டெடுத்தல்.**

**வாக்குறுதி** 40: 1963 **மலேசியா ஒப்பந்தத்தை அமல்படுத்த அரச ஆணையம் அமைக்கப்படும்.**

**வாக்குறுதி** 41: **சபா**, **சரவா மாநிலங்களின் பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்தல்.**

**வாக்குறுதி** 42: **சபா**,**சரவா மாநில மக்களுக்கு ஊதிய உயர்வுடன் கூடிய வேலை வாய்ப்பை ஏற்படுத்தி கொடுத்தல்.**

**வாக்குறுதி** 43: **சபா**,**சரவா மாநிலங்களை நல்லிணக்கம் திகழும் சமுதாயமாக உருவாக்கம் காணப்படும்.**

**வாக்குறுதி** 44: **கல்வி மற்றும் சுகாதாரத்தை சீர்திருத்தம் செய்தல்.**

**வாக்குறுதி** 45: **கிராமம் மற்றும் நகர்புற மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.**

**வாக்குறுதி** 46: **சபா மாநிலத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் மற்றும் இறையாண்மையை மீட்டெடுத்தல்.**

**வாக்குறுதி** 47: **பரவலாக்கப்பட்ட சபா, சரவாக் ஆட்சி அதிகாரம்.**

**வாக்குறுதி** 48: **பூர்வீக நிலங்களை வழங்குவதுடன் பாதுகாப்போம்.**

வாக்குறுதி 49: அரசாங்க பள்ளிகளை மக்களின் தேர்வாக உருமாற்றுவோம்.

வாக்குறுதி 50: பல்கலைக்கழகம் மற்றும் உயர்கல்வி கூடங்களின் மாண்பை மீட்டெடுத்தல்.

வாக்குறுதி 51: உடற்பேறு குறைந்தவர்களின் சமூக நலனை காக்குதல்

வாக்குறுதி 52: குற்றச்செயல் மற்றும் சமூக அவலங்களை ஒழித்தல்

**வாக்குறுதி** 53: **குடும்பம் மற்றும் சமூக உறவை வலுப்படுத்தல்**

**வாக்குறுதி** 54: **சமுதாய கட்டமைப்பு, சிவில் சமூக மற்றும் சமூக தொழில்முனைவோர் ஆகியவற்றை மேம்படுத்துதல்.**

**வாக்குறுதி** 55: **இளையோருக்கான பல்வகை நடவடிக்கைகள்**

**வாக்குறுதி** 56: **மக்கள் நல்லிணக்க ஆலோசனை மன்றம் துவக்கப்படும்.**

**வாக்குறுதி** 57: **மலேசியாவை அதன் நேர்மை அடையாளத்தின் வழி அடையாளம் காணுதல், மாறாக ஊழலின் வழியல்ல.**

**வாக்குறுதி** 58: **எல்லை அச்சுறுத்தல், அத்துமீறல், பொருட்கள் மற்றும் மனித கடத்தலுக்கு எதிராக நம்பிக்கை கூட்டணி**

**வாக்குறுதி** 59: **ரோஹிங்கிய மற்றும் பாலஸ்தீன பிரச்சனைகளை களைய முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.**

**வாக்குறுதி** 60: **அனைத்துலக கட்டமைப்பின் செயல்பாட்டின் மாண்பை நிலைநிறுத்துவோம்.**

ஃபெல்டா குடியேற்றவாசிகளுக்கான சிறப்பு திட்டங்கள்

வாக்குறுதி 1 : ஃபெல்டாவில் நிகழும் முறைகேடுகளை நிறுத்துதல்

வாக்குறுதி 2 : ஃபெல்டா நிர்வாகத்தை சீர்படுத்துதல்

வாக்குறுதி3: ஃபெல்டா நிலகுடியேற்றவாசிகளி கடன்சுமையை குறைத்தல்

வாக்குறுதி 5 : ஃபெல்டா குடியேற்றவாசிகளின் பிள்ளைகளுக்கு சிறந்த கல்வி வாய்ப்பு

இந்திய சமுதாயத்துக்கான சிறப்பு திட்டங்கள்

மகளிருக்கான சிறப்பு திட்டங்கள்

வாக்குறுதி 1 :மகளிருடைய தேவைகளை உணர்ந்த நாட்டின் பொருளாதாரம்

வாக்குறுதி 2 : மகளிர் சமூக பாதுகாப்பு, சுகாதார பேணலை உறுதிபடுத்துதல்

வாக்குறுதி 3 : நாட்டின் கல்வித்துறையில் மகளிரின் மேம்பாட்டை முன்னிறுத்துதல்

வாக்குறுதி 4 : பெண்களின் உரிமைகளை, உணர்வுகளை மதிக்கும் சட்டங்கள்

வாக்குறுதி 5 : அரசியல் அரங்கில் அதிகமான மகளிர் ஈடுபட வாய்ப்புக்கள்

இளையோருக்கான சிறப்பு திட்டங்கள்

செயல்திட்டம் 1 : நியாயமான ஊதியத்தைக் கொண்ட அதிகமான வேலைவாய்ப்புகளை உருவாக்குதல்

செயல்திட்டம் 2 : வாழ்க்கைச்சுமை செலவீனத்தை குறைத்தல்

செயல்திட்டம் 3 : இளையோர் வாங்கும் சக்திக்குட்பட்ட, தங்குவதற்கு வசதியான வீடமைப்பு திட்டங்களை செயல்படுத்துதல்

செயல்திட்டம் 5 : தொழில் மற்றும் வாழ்க்கைத்தரன் ஆகியவற்றை மிதமாக்க, விளையாட்டு, கேளிக்கைகளுக்கான வாய்ப்புகளை அதிகரித்தல்

மூத்த குடிமக்களுக்கான சிறப்பு திட்டங்கள்

**முன்மொழிதல்**

வணக்கம்

நம்பிக்கை கூட்டணி ஆட்சியை அமைத்தப் பிறகு மக்களுக்காக நாங்கள் நிறைவேற்றப் போகும் வாக்குறுதிகளின் பட்டியலை தாங்கி நிற்கும் புத்தகம் உங்கள் கையில் இருப்பது. தாய் நாட்டை மறுசீரமைக்கும் முகாமை நோக்கத்தில் நம்பிக்கை கூட்டணி அமல்படுத்தும் மிக முக்கிய திட்டங்களை மக்களின் பார்வைக்கு வழங்கியிருக்கிறோம் எழுத்துப்பூர்வமாக.

நம்பிக்கை கூட்டணியின் ஒட்டுமொத்த பிரதிநிதியாய் எல்லாம் வல்ல அந்த இறைவனின் அருளால் இந்த மாபெரும் மக்கள் பணியை நான் கையில் எடுக்கிறேன். வீழ்ச்சியில் இருக்கும் தாய் நாட்டை காக்கவும், மக்களை இவ்வீழ்ச்சியிலிருந்து மீட்கவும் வாக்காளர் பெருமக்கள் எங்களுக்கு வற்றாத வெற்றி வாய்ப்பை வழங்க வேண்டி இத்தருணத்தில் கேட்டுக் கொள்கிறேன். இந்நூலின் வெளியிடுவதின் வழி, எங்களின் கொள்கைகளை எவ்வாறு நாங்கள் திட்டமிட்டு அமலாக்கம் செய்வதனை சீர்தூக்கி பார்க்கலாம் மலேசியர்கள். ஒரு வேலை நாங்கள் எங்கள் வாக்குறுதியை நிறைவேற்றத் தவறினால் ஜனநாயக முறையில் மக்களாகிய நீங்கள் வீழ்த்தலாம்.

எல்லா தரப்பு மக்களுக்கும் நிறைவான சேவைத் திட்டங்கள் அடங்கியது தான் எங்கள் வாக்குறுதிகள், அவ்வகையில் எங்களின் சேவையினை விமர்சிக்கவோ அல்லது மக்களிடன் கருத்துக்கள் கேட்டு அறியவோ நாங்கள் தயாராகவே இருக்கின்றோம். எங்கள் வாக்குறுதிகளை தயாரிக்க நாங்கள் பல்வேறு தரப்பு மக்களிடம் கருத்துக்களை கேட்டு அறிந்தப் பிறகே இந்நூலின் உள்ளடக்கம் அடங்கியிருக்கிறது. இதற்கு உறுதுணையாக இருந்து சிறந்த திட்டங்களையும், கருத்துக்களையும் வழங்கியவர்களுக்கு எங்களது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்.

மக்களின் எதிர்ப்பார்ப்பை பூர்த்தி செய்யும் நம்பிக்கை மிகுந்த வாக்குறுதிகளே இவைகள் அனைத்தும், முழுக்க முழுக்க மக்கள் குரலின் அடிப்படையில் அமைந்தவைகள், மக்களின் எண்ணங்களை கேட்டு அறிந்தப்பிறகு. நாட்டின் நிலைமை தற்போதைய அரசாங்கத்தினால் படுமோசமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. இந்த அரசினால் ஏற்பட்டுள்ள மோசமான நிலைமையை சீரமைக்கவும் முடியாது. நம்பிக்கை கூட்டணியால் மட்டுமே இந்த நிலையை மறுசீரமைத்து, நல்லதொரு மக்கள் அரசாங்கத்தை நிறுவ முடியும். அரசாங்க ஆட்சி மாற்றமே, அனைத்துக்குமான நிரந்திர தீர்வு, இந்த ஆட்சி தொடருமானால் அழிவு நிச்சயம், இனி முடிவு உங்கள் கையில்.

**டாக்டர் மகாதீர் பின் முகமட்.**

**புத்ராஜெயா**

**8 மார்ச் 2018**

## முன்னுரை

31 ஆகஸ்ட் 1957-இல், தேசத்தந்தை துங்கு அப்துல் ரஹ்மான், "மெர்டேக்கா" என்ற குரலெழுப்பியதெலிருந்து, நம் நாடு, பல்லின, பல்சமய மக்களை மக்களை கொண்ட ஒரு நற்பேறு கொண்ட நாடாக வளர்ச்சி கண்டுள்ளது.

அந்த தீர்க்கதரிசனத்தில்தான் தேசத்தந்தை துங்கு, நமது சுதந்திர பிரகடனத்தில் "நமது நாடு, சுதந்திரமும், இறையாண்மையும் மிகுந்த, நீதியை முன்னிறுத்தும், இன,மத பேதங்களை கடந்து மக்களின் ஒற்றுமை மிகுந்த நலனை முன்னெடுக்கும் ஒரு நாடாக மலேசியா திகழும்" என குறிப்பிடப்பட்டுள்ளது.

சுதந்திரம், நீதி, பொதுநலம், பாதுகாப்பு மற்றும் அமைதியை முன்னிறுத்தித்தான் கடந்தகாலங்களில் இந்நாட்டின் தலைவர்கள் செயல்பட்டு வந்துள்ளனர்.

நாட்டின் சுதந்திரத்திற்காக போராட்டம் தொடங்கிய காலத்தில் இருந்து, சுதந்திர அடைந்து துங்கு அப்துல் ரஹ்மான், துன் ராசாக், துன் ஹூசேன் ஓன் மற்றும் துன் மகாதீரின் காலம் வரை, இந்த நாடு சுதந்திரம், வளர்ச்சி அடைந்து, அனைத்துலக அரங்கில் மதிக்கப்படும் ஒரு நாடாக திகழ வேண்டும் என்பதே குறிக்கோளாக இருந்து வந்துள்ளது.

ஆனால், தற்பொழுது நாடு ஊழல் மற்றும் திருட்டுத்தனம் மிகுந்த தலைமைத்துவமும் அளவுக்கதிமாக தலைதூக்கி, உலக அரங்கில் நாட்டிற்கு அவப்பெயர் மிகுந்துள்ள நேரத்தில், மலேசிய திருநாட்டை இந்த பிரச்சனைகளில் இருந்து மீட்டெடுத்து, மலேசியாவை மீண்டும் சரியான பாதைக்கு கொண்டு செல்வதற்கு பாக்காத்தான் ஹாராப்பான் ஒரு புதிய நம்பிக்கையை கொடுக்கின்றது.

மலேசிய மக்கள் அனைவரும் விரும்பும்படி, நாட்டின் பெருமைமிகு காலத்தை மீட்டெடுக்க பாக்கத்தான் ஹாராப்பான் தீர்மானம் கொண்டுள்ளது.

அம்னோ, தேசிய முன்னணி அடகுவைத்த மலேசிய மக்களின் தன்மானத்தை மீட்டெடுக்க பாக்கத்தான் ஹாராப்பான் தீர்மானம் கொண்டுள்ளது.

பாக்கத்தான் ஹாராப்பான் ஒரு தொலைநோக்கை முன்னெடுத்து, மீண்டும் ஒரு புகழ்மிக்க நாடாக மாற்றும்.

நம் நாட்டின் வளர்ச்சியில் பின்தங்கி போயுள்ள பிரிவினர்களான, புறநகர் மக்கள், இந்தியர்கள், பூர்வக்குடியினர் மற்றும் நடுத்தர வர்க்கத்தினரின் நலன்களை காக்க தவறிய அம்னோ தேசிய முன்னணி தலைமைத்துவத்தின் கையாளாகதத்தனத்தை பக்காத்தான் ஹாராப்பான் மாற்றியமைக்கும். எங்களது அரசியல் போராட்டமானது, நாட்டின் 99% மக்களுக்கான

போராட்டமே அன்றி, பாரிசன் நேஷனலை போல, 1% சுற்றத்தை முன்னிறுத்தும் போராட்டம் அல்ல.

பக்காத்தான் ஹாராப்பான் போராட்டாமானது, இன, மத பேதங்களை கடந்து அனைத்து மலேசியர்களுக்குமான போராட்டம்.

நாட்டின் அரசுதுறைகள் கண்டுள்ள பழுதுகளை சரிசெய்து, சட்ட இறையாண்மையை நிலைநாட்டி, முக்கிய அரசுதுறைகளை சுயேட்சைத்தன்மை உறுதி செய்யப்படும்.

நாட்டில் நிலவும் ஊழல் மிகுந்த நிலையை மாற்றுதல், மற்றும் சிறந்த பொருளாதார வளர்ச்சி வித்திட்டல், ஆகிய  இரட்டை அணுகுமுறையை பக்காத்தான் ஹாராப்பான் கையாளும். நாட்டின் பொருளாதார வளர்ச்சியின்வழி ஈட்டப்படும் வளத்தை, ஒரு சிலர் மட்டுமே கொள்ளையடிக்காமல், அனைத்து மலேசியர்களுக்கும் பயனுறும் விதமாக நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

நாட்டின் வளர்ச்சியையும், பொருளாதார வளப்பத்தையும், ஒரு சில ஊழல் கூட்டம் மட்டும் கொள்ளையடிக்காமல், நாட்டின் பூர்வக்குடிமக்களும், இனபேதம் கடந்த அனைத்து மலேசிய மக்களும் சரிசமமாக பங்கிட்டு கொள்வதை உறுதி செய்வோம்.

நமது நாட்டின் தன்மானத்தை மீட்டெடுத்து, நாட்டை வளர்ச்சியின் பாதைக்கு திரும்ப வேண்டும் என்ற மக்களின் நம்பிக்கையை நனவாக்கும் கடமை பக்காத்தான் ஹாராப்பானுக்கு உள்ளது.

**அம்னோ தேசிய முன்னணி கீழ் நாட்டின் தற்பொழுதைய நிலை**

1957-ஆம் ஆண்டு நாடு சுதந்திரம் அடைந்த பொழுதும், 1963-இல் மலேசியா உருவான பொழுதும், சுதந்திரம் மற்றும் நீதியின் வழி செயல்படும் ஒரு இறையாண்மை மிகுந்த நாடாக மலேசிய திருநாடு திகழும் என்ற தேசத்தந்தை துங்கு அப்துல் ரஹ்மானின் கனவிலிருந்து வெகுதூரம் விலகி சென்று விட்டது தற்பொழுதைய மலேசியா.

இன்று, சுயநலனை முன்னிறுத்தி நாட்டு வளத்தை கொள்ளையடிக்கும் ஊழல் தலைவர்கள், இந்நாட்டின் இறையாண்மையை அடகு வைத்துவிட்டனர். ஆட்சியிலிருந்து இறங்கினால், நீதித்துறையினால் தண்டிக்கப்படுவோம் என்ற அச்சத்தினால், ஆட்சியை தக்கவைத்துக்கொள்ள எதையும் செய்ய துணிந்துவிட்டனர். இந்த ஊழல் பேர்வழிகளையும், அவர்களின் குடும்பத்தினரையும் உலகின் பல்வேறு நாடுகளிலும் விசாரணை நடப்பது குறித்து இவர்களுக்கு கவலையில்லை. மலேசியாவை அனைத்துலக ஊடகங்களில் கேலி செய்வது குறித்து அக்கறையில்லை. முந்தைய தலைமைத்துவங்களின் பொழுது, மலேசியாவை கண்டு உலகம் ஆச்சரியமடைந்தது. ஆனால், அந்த ஆச்சரியம், இப்பொழுதுள்ள தலைமைத்துவத்தின் நடவடிக்கைகளால், ஏளனமாக மாறியுள்ளது. இப்பொழுது, 1எம்டிபி நிதி கையாடல், ஊழல், அதிகார தவறுபயோகம் குறித்துதான் அனைத்துலக ஊடகங்கள் செய்திகளை வெளியிடுகின்றன.

நாட்டு மக்கள், அன்றாட வாழ்க்கை செலவீன அதிகரிப்பால், கடின நிலையை எதிர்நோக்கி வரும் வேளையில், நாட்டின் தலைவர், அவரின் மனைவி, குடும்ப உறுப்பினர்கள் சுகபோக ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர்.

இந்த தலைவர்கள், உலகம் முழுவது ஆடம்பர விமானத்தில் சுற்றி வருவதற்கு, மக்கள் மீது ஜிஎஸ்டி போன்ற வரிச்சுமைகள் சுமத்தப்படுகின்றன.

இனவாத அரசியலை முன்னிறுத்தும் அரசியல்வாதிகள், ஆட்சியை தக்கவைத்துக் கொள்வதற்கு, இனங்களுக்கு இடையேயான் மோதலை உருவாக்கும் விதமான கூற்றுகள், நமக்குள் பிளவை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர்.

நாட்டின் அரசுத்துறைகள் தங்களுடைய கடமைகளில் சுயேட்சையாக செயல்பட முடியவில்லை.

நாட்டின் அரசுத்துறைகளின் தலைமை பொறுப்புகளுக்கான நியமனங்கள் செய்யப்பட்ட விதம் பல்வேறு விதமான கேள்விகளை எழுப்புகின்றன. ஊடகங்கள் தொடங்கி, சட்டத்துறை, நீதித்துறை வரை, உயர்கல்விக்கூடங்கள் கூட தற்பொழுது சுயேட்சையாக செயல்பட முடியவில்லை.

மலாய் மன்னர்களின் கருத்துகளுக்கு கூட மதிப்பளிக்கப்படவில்லை; சில நேரங்களில் அது விளையாட்டாக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

அதனால், பிரதமர் ஒரு வரம்பற்ற அதிகாரத்தை கையில் வைத்துள்ளார்; அது ஒரு அதிகாரகுவியல் சூழ்நிலையை உருவாக்கியுள்ளது.

இன்று மலேசிய மக்கள், பொருளாதார நீதியையோ, சமூக நீதியையோ அனுபவிக்கவில்லை. மக்களின் கருத்து சுதந்திரம் பறிக்கப்பட்டுள்ளது. நாட்டின் பொருளாதார வளர்ச்சியை மக்கள் அனுபவிக்க முடியாமல், ஆதிக்கங்கள் தலைதூக்கியுள்ளன. மக்களுக்கு, அடிப்படை கல்வி, அடிப்படை மருத்துவம் கூட எட்டாக்கனியாக உள்ளது.

அம்னோ-தேசிய முன்னணி தலைவர்களின் தவறான பொருளாதார கொள்கைகளினாலும், ஊழல் மிகுதியாலும், நாட்டின் கடன்சுமை அதிகரித்துள்ளது. அதில் கொடுமை என்னவென்றால், சாதாரண மக்கள், இந்த கடன்சுமையை மக்கள் பல்வேறு வரிகளின் வழி ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.

நாட்டின் வளங்கள், ஒரு சில தரப்பினரால் கொள்ளையடிக்கப்பட்டு, மக்கள் இரு தொழில் செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

அம்னோ-தேசிய முன்னணியின் தற்கால தலைமைத்துவம், நாட்டின் முந்தைய தலைவர்கள், சுதந்திர போராளிகளின் தூரநோக்கு சிந்தனையை குழித்தோண்டி புதைத்துவிட்டது.

ஒரு மேம்பாடு அடையும் நாடாக, மலேசியாவின் தன்மானம் மீட்கப்பட வேண்டும். உலக நாடுகள் வியப்படையும் விதமாக மலேசிய திருநாடு திகழ்வதை பக்காத்தான் ஹாராப்பான் உறுதிசெய்யும்.

அதிலும் முக்கியமாக, இந்நாட்டின் பல்லின, பல்சமய மக்கள் நாட்டின் வளர்ச்சியையும், வளத்தையும் பங்கிட்டு கொள்வதை நாங்கள் உறுதி செய்வோம்.

**நம்பிக்கை கூட்டணி ஆட்சியின் தத்துவமும் நோக்கமும்**

நம்பிக்கை கூட்டணியின் ஆட்சியின் தத்துவமும் நோக்கமும் இன்றைய நவீன காலத்தின் சவால்களை எதிர்கொள்ளுதலுக்கேற்ப மாற்று நடவடிக்கைகளும் மற்றும் நாட்டின் முந்தைய தலைவர்கள் கொண்ட லட்சியக் கொள்கைகளுடன், நாட்டின் இறையாண்மை மற்றும் அரசியலமைப்பு தத்துவத்தின் வழிகளிலும் பின்பற்றி செல்வதே.

அனைத்து மக்களுக்கும் சமமான நீதி, வளமை, பொருளாதாரம், அமைதி மற்றும் சுபீட்சம் நிறைந்த நாடாக மலேசியாவை உருவாக்குதல். நாட்டின் அன்றைய தேசத்தலைவர்களின் கனவை மெய்ப்படுத்தி, மேம்படுத்தி, உத்வேகப்படுத்தி சிறந்த மலேசியாவை உருவாக்குதலே நம்பிக்கை கூட்டணியின் கனவாகும்.

மலேசியர்களின் அடிப்படை பண்பாட்டு அறிவு, சுதந்திரம், சமூக நீதி, பொருளாதாரம், சுயமரியாதை, நாகரிகம், அமைதி, ஒற்றுமை, சிபீட்சம், ஜனநாயகம் மற்றும் தகுதியுடைவோருக்கான வாய்ப்பை அனைவரும் சமமாக பங்கீட்டு கொள்ளுதலே நம்பிக்கை கூட்டணியின் ஆட்சி தத்துவமாகும்.

2020 தூரநோக்கு சிந்தனையின் அடிப்படையில் லட்சியம், மாண்பு மற்றும் தோழமை மிக்க ஒரே மலேசியர் என்கிற மக்களை உருவாக்குதலே.

9 ஜனவரி 2016 இல் நம்பிக்கை கூட்டணியின் வாக்குறுதியில் குறிப்பிட்டப்படி:

அரசியலமைப்பு விதியை தற்காப்பதுடன், இஸ்லாத்தை கூட்டமைப்பு மதமாகவும், மற்ற மதங்களை அமைதியுடன் பின்பற்றுவதை 3 விதியின் படி ஏற்றுக்கொள்வதாகவும்; விதி 153 வழி மலாய் பூமிபுத்ரா மற்றும் சபா, சரவாக் பூமிபுத்ரா மற்றும் பிற மக்களின் சிறப்பு தகுதியை பாதுகாத்தல்.

அரசமைப்பு பொறுப்பினை அரசியலமைப்பில் தற்காத்தல்.

விதி 152 அரசியலமைப்பு வலியுறுத்தும் தேசிய மொழியான மலாய் மொழியின் மாண்பை நாடு தழுவிய அளவில் நிலைநிறுத்துவதுடன், பிற தாய்மொழிகளை வலிமைப்படுத்துவதுடன்; உலகமயமாக்களின் சவாலை எதிர்கொள்ள ஆங்கிலத்தை மேம்படுத்துதல்.

1963 ஒப்பந்தப்படி சபா மற்றும் சரவாக்கின் தகுதியை ஒன்றுப்பட்ட மலேசியாவின் கீழ் ஒருங்கிணைந்து ஏற்றுக்கொண்டு அங்கீகரித்தல்.

## பக்காத்தான் ஹாராப்பானின் அடிப்படை கொள்கை

நமது நண்பர்களும், பகைவர்களும் கண்டு ஆச்சரியப்படும் அளவுக்கு, மக்களின் நம்பிக்கையை காத்து, நாட்டை கட்டியெழுப்புவதுதான் மலேசிய மக்களுக்கு நாங்கள் வழங்கும் உறுதிமொழியாகும்.

இந்த புத்தகத்தில் அந்த நோக்கத்தின் நடைமுறைத்திட்டங்கள் விளக்கப்பட்டுள்ளது.

எங்களுடைய உறுதிமொழிகளானது, 5 செயல்வடிவ திட்டங்களை அடிப்படையாகக் கொண்டது. அந்த 5 செயல்வடிவ திட்டங்கள், தனித்தனி நடைமுறை திட்டங்களை கொண்டதாகும். அவற்றின் கருதுகோள் கீழ்காணுமாறு :-

**செயல்வடிவ திட்டம் 1 :**

**மக்களின் வாழ்வாதார சுமையை குறைப்பது**

**செயல்வடிவ திட்டம் 2 :**

**அரசுநிர்வாகம், அரசியல் நிர்வாகங்களை மறுசீரமைப்பது**

**செயல்வடிவ திட்டம் 3 :**

**சமத்துவ, நீதியான பொருளாதார வளர்ச்சியை முன்னெடுத்தல்**

**செயல்வடிவ திட்டம் 4 :**

**1963 மலேசிய ஒப்பந்தத்தின் படி சபா, சராவாக் மாநிலங்களுடைய நிலையை மீட்டுக்கொடுத்தல்**

**செயல்வடிவ திட்டம் 5 :**

**அனைத்துலக மட்டத்தில் புகழோடு விளங்கும் ஒரு சிறந்த மலேசியாவை கட்டியெழுப்புதல்**

அதோடு மட்டுமல்லாமல், ஃபெல்டா நிலக்குடியேற்றவாசிகள், இந்தியர்கள், பெண்கள், இளைஞர்கள் மற்றும் மூத்த குடிமக்கள் என ஐந்து தரப்பு மக்களுக்கு என்று சிறப்பு திட்டங்களையும் முன்வைக்கின்றோம்.

எங்களுடைய உறுதிமொழிகளை உடனடியாக நடைமுறைப்படுத்தும் வண்ணம், புத்ராஜெயாவில் ஆட்சியை கைப்பற்றிய 100 நாட்களுக்குள், 10 திட்டங்களை நடைமுறைப்படுத்தவும் கடப்பாடு கொண்டுள்ளோம்

**நூறு நாட்கள், பத்து திட்டங்கள்**

பக்காத்தான் ஹாராப்பான் ஆட்சியமைத்து நூறு நாட்களுக்குள், கீழ்காணும் 10 திட்டங்களை நிறைவேற்ற உறுதிமொழி பூணுகின்றது :-

1. ஜிஎஸ்டி வரியின் நடைமுறையை மீட்டுக்கொண்டு, மக்களின் வாழ்வாதார சுமையை குறைக்கும், மக்கள்நல செயல்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்

2. வாகன எரிபொருள் விலையை நிலைப்படுத்துவதுடன், எரிபொருள் உதவித்தொகையை மீண்டும் அறிமுகப்படுத்தப்படும்.

3. ஃபெல்டா நில குடியேற்றவாசிகள் மீது திணிக்கப்பட்டுள்ள அனாவசியமான கடன்சுமை நீக்கப்படும்

4. குடும்பமாதர்களுக்கு ஊழியர் சேமநிதி அறிமுகப்படுத்தப்படும்

5. நாடு முழுவதும் குறைந்தபட்ச ஊதியத்தொகையை ஒருமுகப்படுத்துவதோடு, குறைந்தபட்ச ஊதியத்தை உயர்த்தவும் நடவடிக்கை எடுக்கப்படும்

6. மாதத்துக்கு 4000 ரிங்கிட்டுக்கும் குறைவான வருமானம் பெறுவோரின் PTPTN கடனை செலுத்துவதற்கான கால அவகாசத்தை நீட்டிப்பதோடு, கடன்பெற்றொரை கருப்பு பட்டியலிடும் நடைமுறை நிறுத்தப்படும்

7. 1எம்டிபி, ஃபெல்டா, மாரா மற்றும் தாபுங் ஹாஜி ஆகியவற்றில் நிகழ்ந்த முறைகேடுகளை விசாரிக்க அரச விசாரணை ஆணையம் அமைக்கப்படும்.

8. மலேசிய ஒப்பந்தம் 1963-ஐ செயல்படுத்துவதற்கு, சிறப்பு அமைச்சரவைக்குழு அமைக்கப்படும்

9. B40 எனப்படும் குறைந்த வருமானம் பெறுவோருக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட தனியார் மருத்துவமனைகளில் இலவச சிகிச்சை பெறும் வண்ணம், 500 ரிங்கிட் மருத்துவ உதவித்தொகை திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.

10. அன்னிய நாடுகளுக்கு வழங்கப்பட்டுள்ள பெரிய திட்டங்களுக்கான குத்தகை குறித்து ஆய்வு நடத்தப்படும்

## படிநிலை 1 : மக்களின் வாழ்வாதார சுமையை குறைப்பது

வாழ்க்கை செலவீன அதிகரிப்பு மக்கள் வாழ்க்கை சுமை அதிகரித்து, துன்பப்படுகின்றனர். இந்த வாழ்க்கை சுமை அதிகரிப்பால், மக்கள் இரு தொழில் புரிய வேண்டிய கட்டாயத்துக்கு தள்ளப்பட்டுள்ளனர். இதன் காரணமாக, 35 வயதுக்குட்பட்ட சுமார் 20,000-க்கும் மேற்பட்ட இளைஞர்கள், திவாலாகியுள்ளனர்.

உயர்கல்வி கூடங்களில் பயிலும் மாணவர்களோ, தங்களது படிப்பை முடித்தவுடனேயே, கடனாளிகளாகி விடுகின்றனர். புறநகர்களிலும், ஃபெல்டா குடியிருப்புகளிலும் உள்ள மக்கள் கூட வாழ்க்கை சுமை அதிகரித்து திண்டாடுகின்றனர்.

ஊழல் மிகுந்த அரசியல்வாதிகளின் சுகபோக வாழ்க்கை வாழ, சாதாரண மலேசியர்கள் சொந்த நாட்டில் சுதந்திரமாக வாழ முடியாமல், துன்ப படுகின்றனர்.

மக்களின் வாழ்க்கை செலவீன சுமையை குறைக்க, இந்த புத்தகத்தில் உள்ள வாக்குறுதிகளை நிறைவேற்றும் கடப்பாட்டை பக்காத்தான் ஹாராப்பான் கொண்டுள்ளது.

### வாக்குறுதி 1 : ஜிஎஸ்டி வரியை ஒழித்தல்

குறைந்த, நடுத்தர வருமானம் பெறும் குடும்பங்களை ஜிஎஸ்டி எனப்படும் பொருள்,சேவை வரி பெரிதும் பாதித்துள்ளது. அம்னோ, தேசிய முன்னணி, நாட்டின் பொருளாதாரத்தை சரியாக நிர்வாகிக்காத நிலையில், எளிய மக்களும் இந்த சுமைதரும் வரியை செலுத்த வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். அம்னோ, தேசிய முன்னணி அரசாங்கத்தின் நிதி நிர்வாக முறைகேட்டை ஈடுசெய்ய இப்பொழுது மக்கள் இந்த வரியை செலுத்த வேண்டியுள்ளது.

பக்காத்தான் ஹாராப்பான் அரசாங்கம் ஆட்சியமைத்த 100 நாட்களுக்குள் ஜிஎஸ்டி வரியை மீட்டுக்கொள்ளும். இதன்வழி மக்களின் வாழ்க்கைச்சுமை குறையும்.

எளிய மக்கள் உதவப்பட வேண்டுமே தவிர, அவர்கள் மீது சுமையை திணிக்கக்கூடாது என்பதுதான் பக்காத்தான் ஹாராப்பானின் நிலைப்பாடு. ஜிஎஸ்டி மீட்டுக்கொள்ளப்படுகையில், மக்களின் செலவீனம் குறைக்கப்பட்டு, வரியாக செலுத்தும் பணத்தை மக்கள் வேறு செலவுகளுக்கு பயன்படுத்தலாம்.

குறுகிய காலத்தில். பக்காத்தான் ஹாராப்பான் ஜிஎஸ்டி வரியை மீட்டுக்கொண்டு, மக்களுக்கும், வியாபாரிகளுக்கும் சுமையளிக்காத நியாயமான விற்பனை, சேவை வரியை பக்காத்தான் ஹாராப்பான் அரசாங்கம் அறிமுகப்படுத்தும்.

**வாக்குறுதி 2 : பொருட்களின் விலையேற்றத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை**

மக்களுக்கு பெரும் சுமையை ஏற்படுத்தும் வண்ணம் தற்பொழுது பொருட்களின் விலையேற்றம் கட்டுக்கடங்காமல் போகின்றது. 2015-இல், ஜிஎஸ்டி அறிமுகத்துக்கு முன்பு, 1%-ஆக இருந்த பணவீக்கம் தற்பொழுது 4-ஆக உயர்ந்துள்ளது. அம்னோ-தேசிய முன்னணி தலைவர்கள் தங்களது செல்வ வளத்தை பெருக்கிக்கொண்டே போகும் வேளையில், மக்களின் சுமையை கண்டு கொள்ளவில்லை. அவர்கள் சொகுசு விமானங்களிலும், சொகுசு வண்டிகளிலும் வலம் வரும் வேளையில் மக்கள் பொருட்கள் விலையேற்ற்றத்தாலும், பெட்ரேல் விலையேற்றத்தாலும் படும் அல்லள்களை புரிந்துக்கொள்ளவில்லை.

இந்த நிலையை உணர்ந்துக்கொண்டுள்ள பக்காத்தான் ஹாராப்பான், பொருட்களின் விலையேற்றத்தை கட்டுப்படுத்த நடவடிக்கைகளை செயல்படுத்த திட்டங்களை கொண்டுள்ளது.

அரிசி வெளியிட்டில் பெர்னாஸ், ஒளி, ஒலிபரப்பு துறையில் ஆஸ்ட்ரோ போன்ற பெரிய நிறுவனங்களின் ஆதிக்கத்தை கட்டுப்படுத்தும் நடவடிக்கையை பக்காத்தான் ஹாராப்பான் அரசாங்கம் மேற்கொள்ளும். மருந்து பொருட்களின் விலையும் மக்கள் வாங்கும் சக்திக்குட்பட்ட விலையில் இருப்பதோடு, விநியோகிப்பாளர்க்ளுக்குள் போட்டித்தன்மை இருப்பதும் உறுதி செய்யப்படும்.

பெருநாள் காலங்களில், அத்தியாவசியப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படாமல் இருக்க, விநியோகப்பாளர்களுடன் ஒரு அனுக்கமான ஒத்துழைப்பையும் பக்காத்தான் ஹாராப்பான் அரசாங்கம் கொண்டிருக்கும். மக்களின் பயனீட்டுத்தேவைகளுக்கு ஏற்ப பொருட்களின் சீரான விநியோகம் இருப்பதை உறுதி செய்வதன் வழி, பொருட்களின் விலையேற்றத்தை கட்டுபடுத்த முடியும்.

அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றத்தை கட்டுப்படுத்த, தேவையான அளவு நிதியுதவியும் வழங்கப்படும்.

1600CC-க்கும் உட்பட்ட மகிழுந்துகளுக்கான (மோட்டார்கார்களுக்கான) சுங்க வரியை பக்காத்தான் ஹாராப்பான் அரசாங்கம் குறைக்கும். இதன்வழி, முதல் மகிழுந்து வாங்குபவர்களின் சுமை குறைக்கப்படும், இந்த திட்டத்தை தவறாக உபயோகப்படுத்தாமல் இருக்க, மாதம் 8000 ரிங்கிட்டுக்கு குறைந்த வருமானம் பெறும் குடும்பத்தில் ஒரு மகிழுந்துக்கு மட்டுமே இந்த சலுகை வழங்கப்படும்.

பக்காத்தான் ஹாராப்பான் அரசாங்கம் நாடு முழுவதுமுள்ள டோல் கட்டண சாவடிகளில் கட்டண வசூலை படிப்படியாக நிறுத்தும்.

பொருட்களின் விலையேற்றத்துக்கு மற்றொரு காரணம், ரிங்கிட்டின் மதிப்பிழப்பாகும். உலகின் முக்கிய நாணயங்கள் பலவற்றுடன் ஒப்பிடுகையில் ரிங்கிட்டின் மதிப்பு வெகுவாக குறைந்துள்ளது; குறிப்பாக தாய்லாந்தின் பாட் மற்றும் வங்காளதேசத்தின் தாக்கா ஆகியவற்றுடன் ஒப்பிட்டால் கூட ரிங்கிட் மதிப்பிழந்து கிடக்கின்றது. மலேசியா, 90% பால், 70% இறைச்சி பொருட்கள், 50% காய்கறிகளை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்கின்றது. ரிங்கிட்டின் மதிப்பிழப்பு, இந்த பொருட்களின் விலையேற்றத்துக்கு காரணமாகியுள்ளது. பக்காத்தான் ஹாராப்பான் அரசாங்கம், மூன்று ஆண்டுகளுக்குள் ரிங்கிட் தனது வலுவான நிலைக்கு திரும்புவதை ஆவண செய்யும்.

**வாக்குறுதி 3 : நாட்டின் வளத்தை முறையாக பங்கிடப்படுவதை உறுதி செய்தல்**

மலேசியாவின் பொருளாதார வளர்ச்சி, மக்களுக்கு சரிசமமான பயன்களை கொண்டுவரவில்லை. பணக்காரர்கள் மேலும் பணக்காரர்களாக, நடுத்தர, குறைந்த வருமானம் பெறுவோரின் வாழ்க்கைநிலை மோசமடைந்து வருகின்றது. மலேசியர்களின் வருமான வரம்பும் மிக குறைவாகவே உள்ளது. மாதத்துக்கு 2000 ரிங்கிட்டுக்கும் குறைவான வருமானம் பெறுவோரின் எண்ணிக்கை மிக அதிகமாகும். இது உடனடியாக சரிசெய்யப்பட வேண்டும்.

தற்பொழுது நாட்டின் வளம், சில பேராசை பிடித்த தலைவர்கள், அவர் மனைவி, மற்றும் அவர்தம் குடும்பத்தினரால் சூரையாடப்படுகின்றது. அவர்கள் செல்வம் செழிக்க வாழும் வேளையில், மக்கள் அன்றாட செலவுகளுக்கே திண்டாடுகின்றனர். பக்காத்தான் ஹாராப்பான் அரசாங்கம், மலேசியாவின் பல்லின மக்களும், ஓராங் அஸ்லி மற்றும் இந்தியர்கள் உட்பட அனைவருக்கும் நாட்டின் வளம் பங்கிடப்படுவதை உறுதி செய்யப்படும்.

**வாக்குறுதி 4 : வாங்கும் சக்திகுட்பட்ட வீடுகள், நியாய வாடகை வீடுகள் திட்டங்களை அதிகரித்தல்**

வாங்கும் சக்திகுட்பட்ட வீடுகள் கட்டும் திட்டத்தில் அம்னோ-தேசிய முன்னணி தோல்வியடைந்துள்ளது. 2020-க்குள் 1 மில்லியன் வாங்கும் சக்திகுட்பட்ட வீடுகள் கட்டும் திட்டம், அந்த குறிக்கோளில் பாதியை கூட எட்டாமல், கைவிடப்பட்டுள்ளது.

இன்று எத்தனையோ மலேசியர்கள், குறிப்பாக இளைஞர்கள் சொந்த வீடு வாங்க முடியாமல் உள்ளனர். அம்னோ-தேசிய முன்னணி சரியான மேம்பாட்டு திட்டமிடலை கொண்டிராததால், தற்பொழுது 5 இலட்சம் ரிங்கிட்டுக்கு மேலான வீடுகள் அதிக எண்ணிக்கையில் வாங்கப்படாமல் இருக்கும் வேளையில், இரண்டரை இலட்சம் ரிங்கிட்டுக்கு குறைவான வீடுகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்த குறைபாட்டை கலையும் வண்ணம், நாங்கள் உடனடியாக வாங்கும் சக்திக்குட்பட்ட வீடுகள் நிர்மாணிக்கும் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிப்போம்.

பக்காத்தான் ஹாராப்பான் அரசாங்கம், வாடகை-உரிமை வீடுகள் திட்டத்தை நாடு முழுவதிற்கும் விரிவடைய செய்யும். வங்கிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி தனியார் வீடமைப்பு மேம்பாட்டளர்களுடனான் ஒத்துழைப்புடன், வாடகை-உரிமை வீடுகள் திட்டத்தை நாங்கள் செயல்படுத்துவோம். தற்பொழுது வாடகை வீடுகளில் தங்குவோர், தகுதி பெற்றிருந்தால், இந்த திட்டத்தின் வழி வீடுகள் பெறுவதை உறுதி செய்வோம்.

வீடுகளின் விலைகள் வானாளவிய நிலையில் உயர்ந்துள்ளதற்கு காரணம், சில வீடமைப்பு மேம்பாட்டளர்கள், சில அரசுசார் நிறுவனங்கள் உட்பட, நிலங்களை வாங்கி, அதன் விலை உயரும் வரை காத்திருந்து வீடமைப்பு திட்டங்களை நடைமுறை படுத்துவதால்தான். அதனால் நிலத்தின் விலை, அதிகரித்து, அந்நிலத்தில் நிர்மாணிக்கப்படும் வீடுகளின் விலைகள் அளவுக்கதிகமாக ஏறிப்போகின்றன. பெரிய மேம்பாட்டு நிறுவனங்கள் ஆதிக்கம் செலுத்தும் இத்துறையில் சிறிய மேம்பாட்டு நிறுவனங்கள் நுழையவே முடிவதில்லை.

பக்காத்தான் ஹாராப்பான் அரசாங்கம், நில மேம்பாட்டு திட்டங்கள் ஒரு குறிப்பிட்ட கால வரம்புக்குள் நிர்மாணிக்கப்பட வேண்டும் என்ற கால அளவை நிர்ணயம் செய்யும். இதன் வழி, நிலங்களை விலை உயர்வதற்காக வைத்திருக்கும் நடைமுறை கலையப்படும். சிறிய மற்றும் நடுத்தர மேம்பாட்டு நிறுவனங்கள், பெரிய மேம்பாட்டு நிறுவனங்களுடன் போட்டியிடும் வண்ணம் அவர்களுக்கு ஊக்குவிப்பும் வழங்கப்படும்.

நிலங்களை குறைந்த விலையில் வாங்கி, வீடுகளை அதிக விலைக்கு விற்கும் பினாமி நில மேம்பாட்டளர்களின் நடவடிக்கைகளை முடக்க, பிரிமா வீடமைப்பு திட்டத்தை பக்காத்தான் ஹாராப்பான் அரசாங்கம் மறுசீரமைப்பு செய்யும்.

இஸ்லாமியர்களின் வாக்காஃப் நிலங்களில் வீடமைப்பு திட்டங்கள் அமைக்க ஊக்குவிக்கப்படும்; அதேவேளையில் மாநில இஸ்லாமிய சமய் நிறுவனங்கள், அதுப்போன்ற நில மேம்பாட்டு திட்டங்களில், நில மேம்பாட்டு நிறுவனங்களுடன் ஒத்துழைப்பு நல்குமாறும் அறிவுறுத்தப்படும். அந்த வீடுகள் இஸ்லாமியர்களுக்கு மட்டுமே விற்கப்படும். இதன்வழி, இஸ்லாமியர்களின் வீட்டுடமை உயரும்.

தனியார் நில மேம்பாட்டு நிறுவனங்கள், வாங்கும் சக்திக்குட்பட்ட வீடுகளை நிர்மாணிக்க முன்வருமானால், நில உபயோக மாற்றத்தை எளிதாக்குவதற்கு மாநில அரசாங்கங்களுடன், பக்காத்தான் ஹாராப்பான் மத்திய அரசாங்கம் ஒத்துழைப்பு நல்கும். வாங்கும் சக்திக்குட்பட்ட வீடுகளை நிர்மாணிக்கும் மேம்பாட்டு நிறுவனங்களுக்கு வரிச்சலுகைகள் வழங்கப்படுவதோடு, நிர்மாணிப்பு செலவுகளை குறைக்கு தொழில்நுட்பத்தை பயன்படுத்தும் மேம்பாட்டு நிறுவனங்களும் ஊக்குவிக்கப்படும்.

வீடமைப்பு திட்டங்களின் செயல்பாடுகளை ஒருமுகப்படுத்தும் விதமாக, பிரதமரின் தலைமையில் ஒரு “தேசிய வாங்கும் சக்திக்குட்ப்பட்ட வீடமைப்பு திட்ட மன்றம்” ஒன்று அமைக்கப்படும். இந்நிறுவனத்தின் செயல்பாடுகள் கீழ்கண்டவாறு அமையும் :-

- **இரண்டு ஆட்சி தவணைக்குள் ஒரு மில்லியன் வாங்கும் சக்திக்குட்பட்ட வீடுகளை நிர்மாணித்தல்**
- **விற்கப்படாமல் இருக்கும் வாங்கும் சக்திக்குட்பட்ட வீடுகள் குறித்த விவரங்களை, தனியார் மேம்பாட்டாளர்கள் மறைத்து கொள்ளை இலாபம் சம்பாதிப்பதை தடுக்க, மக்கள் பார்வையிடக்கூடிய வெளிப்பாட்டுத்தன்மையுடனான ஒரு தரவுத்தளம் அமைக்கப்படும்**
- **வாங்கும் சக்திக்குட்ப்பட்ட வீடுகளை, குறைந்த, நடுத்தர வருமனம் பிரிவினர் வாங்குவதற்கு ஏதுவாக, வாடகை-உரிமை திட்டங்கள் செய்ல்படுத்தப்படும். அதேவேளையில், “நியாய வாடகை” வீடமைப்பு திட்டங்களும் செயல்படுத்தப்படும்.**
- **அதிகமானோருக்கு வீட்டுடமை வாய்ப்புகளை ஏற்படுத்த, வீடுகள் வாங்குவதற்கு வங்கி கடனுதவிக்கான விதிமுறைகள் தளர்த்தப்படுவதற்கு, வங்கிகள், நிதிநிறுவனங்களுடன் உடன்பாடு ஏற்படுத்தப்படும்.**
- **எளிய மக்களின் சுமைகளை குறைக்கும் வண்ணம், மலிவு வீடமைப்பு திட்டங்களில், பராமரிப்புகளை அரசாங்கமே ஏற்றுக்கொள்ளுதல்**

**வாக்குறுதி 5 : இளையோரின் வாழ்க்கை சுமையை குறைத்தல்**

நாட்டின் வளர்ச்சிக்கும், எதிர்காலத்துக்கும் தங்களது பங்கை ஆற்ற இளையோர்களுக்கு, அவர்களின் வாழ்க்கையை தொடங்க உதவிப்புரியப்பட வேண்டும். ஆனால், தற்பொழுது வாழ்க்கை செலவீன அதிகரிப்பால், இளைஞர்கள், குறிப்பாக புதிதாக வேலைக்கு செல்வோர் பெரும் அழுத்தத்துக்குள்ளாகியுள்ளனர்.

பக்காத்தான் ஹாராப்பான் அரசாங்கம், மலேசியா முழுவதிலும் வாங்கும் சக்திக்குட்பட்ட வீடுகளை இளையோர் வாங்குவதற்கும், வாடகை-உரிமை முறையில் வாங்குவதற்கும் முன்னுரிமை அளிக்கும்.

இளையோர் வாகனம் வாங்குவதற்கு ஏதுவாக, ஒருவர் வாங்கும் முதல் 1600 CC-க்கு குறைவான மகிழுந்துக்கான சுங்க வரிவிலக்கு சலுகையை பக்காத்தான் ஹாராப்பான் அரசாங்கம் வழங்கும்.

PTPTN கடன்பெற்று கல்வி பயின்ற இளையோர், 4000 ரிங்கிட் ஊதியம் பெறும் வரை கல்விக்கடன் கட்டண விலக்கு அளிக்கப்படும். குறைந்த வருமானம் பெறும் குடும்பத்தை சேர்ந்த மாணவர்கள், சிறப்பான தேர்ச்சிப்பெற்ற மாணவர்களின் கல்விக்கடன், கழிப்பீடு வழங்கப்படும், அல்லது கடன் தள்ளுபடி செய்யப்படும்.

பக்காத்தான் ஹாராப்பான் அரசாங்கம், எங்களது சிலாங்கூர் மாநில அரசில் வழங்கப்படும் திருமண உதவித்தொகை திட்டம் போன்ற திட்டத்தை நாடு முழுவதுமுள்ள 35 வயதுக்கு கீழ்பட்ட இளையோரின் முதல் திருமணத்துக்கு உதவித்தொகை வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தும்.

நல்ல முதலாளிகள், தங்களது தொழிலாளர்களின் கல்விக்கடனை திருப்பி செலுத்த உதவுவார்கள் என பக்காத்தான் ஹாராப்பான் கருதுகின்றது. ஆகவே, ஊதியத்தை பிடித்தம் செய்யாமல், தொழிலாளர்களின் கல்விக்கடனை செலுத்தும் நிறுவனங்களுக்கு, வரிச்சலுகை அளிக்கப்படும்.

அதிகமான வேலைவாய்ப்புகளை உருவாக்கும் நோக்கில், மலேசியாவின் வளர்ச்சியை அதிகரிக்கும் வகையில், உலகமய, பிராந்திய அளவிலான பொருளாதார முன்னெடுப்புகளில் பக்காத்தான் ஹாராப்பான் தலைமையிலான மலேசிய அரசாங்கம் முனைப்புக்காட்டும்.

அதேவேளையில், ஆசியான் நாடுகளுகளின் ஒருமித்த பொருளாதார கொள்கையில், பட்டதாரிகளின் பரவல்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதை பக்காத்தான் ஹாராப்பான் தலைமையிலான மலேசிய அரசாங்கம் உறுதி செய்யும். இதன்வழி, மற்ற ஆசியான் நாடுகளிலும் வேலை வாய்ப்புகளை மலேசிய பட்டதாரிகள் பெறமுடியும்.

மின்னியல் பொருளாதாரம் மற்றும் புத்தாக்க பொருளாதாரம் தற்பொழுது இளையோர்களின் மத்தியில் பிரபலமடைந்துள்ளது. இதனை பக்காத்தான் ஹாராப்பான் அரசாங்கம் ஆதரிக்கும். அதேவேளை, அத்துறைகளின் வளர்ச்சிக்கு உந்துதலாக அமையும் வண்ணம், இணைய பயன்பாட்டு விலையை தற்பொழுதுள்ள விலையில் பாதியாக குறைப்பதுடன், இணைய சேவையின் வேகத்தை இரண்டு மடங்காக அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

**வாக்குறுதி 6: டோல் கட்டணமுறையை ஒழித்தல்**

அரசாங்கத்தால், நெடுஞ்சாலை டோல் கட்டண சாவடிகளை இயக்கும் குத்தகைகளை பெற்றுள்ள நிறுவனங்கள் கொள்ளை இலாபம் சம்பாதிக்கின்றன. எடுத்துக்காட்டுக்கு, மாஜூ ஹோல்டிங்ஸ் என்ற நிறுவனம், PLUS நெடுஞ்சாலை குத்தகையை எடுத்துக்கொள்வதற்கு நிபந்தனையாக, 20 ஆண்டுகளுக்கு டோல் கட்டணத்தை உயர்த்தாமல் இருப்பதாக அரசாங்கத்துக்கு முன்மொழிகின்றது. டோல் கட்டண நிறுவனங்களுக்கு இலாபமில்லை என்றால், 20 ஆண்டுகளுக்கு விலையேற்றம்

இல்லாமல், டோல் கட்டண சாவடியை நடத்த மாஜூ ஹோல்டிங்ஸ் எப்படி முன்வரும்?

ஆனால், அம்னோ தேசிய முன்னணி, தொடர்ந்து PLUS போன்ற நிறுவனங்கள், அரசு நிறுவனங்களாக இருந்தும், மக்களிடமிருந்து பணம் சுரண்டுவதை தடுக்க முன்வரவில்லை. டோல் கட்டண உயர்வை நிறுத்துவதற்கு அம்னோ தேசிய முன்னணி தயாராக இல்லை. ஆனால், அரசாங்கம் அந்நிறுவனங்களுடன் கையெழுத்திட்டுள்ள ஒப்பந்தங்களின் படி, பில்லியன் கணக்கில் குறிப்பிட்ட சில நிறுவனங்களுக்கு இழப்பீடாக வழங்குகின்றது. டோல் கட்டணம் உயர்த்தப்படாவிட்டாலும், அழிக்கப்படாவிட்டாலும், இந்த நிறுவனங்கள் சமநீதியற்ற ஒப்பந்தகளால், கொள்ளை இலாபம் பெறுகின்றன.

அரசாங்கத்துடன் அனுக்கமான தொடர்பை கொண்டுள்ள நிறுவனங்கள் இந்த டோல் சாவடிகளில் செலுத்தும் ஆதிக்கத்தை முடிவுக்கு கொண்டு வரவேண்டும் என்பது பக்காத்தான் ஹாராப்பானின் கொள்கையாகும்.

அனைத்து டோல் கட்டண சாவடிகளின் ஒப்பந்தகளை பக்காத்தான் ஹாராப்பான் அரசாங்கம் மறுபரிசீலனைக்கு உட்படுத்தும். டோல் கட்டண சாவடிகளை படிப்படியாக ஒழிக்கும் நோக்கத்தில், ஒவ்வொரு ஒப்பந்த குத்தகைகளையும் தன்வசப்படுத்தி, முதலில் கட்டணங்களை குறைக்கும் நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படும். போக்குவரத்து கட்டுமான நிர்மாணிப்புகளான சாலைகள், நெடுஞ்சாலைகள் ஆகியவை ஒரு அரசாங்கத்தின் அடிப்படை கடமை என பக்காத்தான் ஹாராப்பான் கருதுகின்றது.

பக்காத்தான் ஹாராப்பான் அரசாங்கம், நியாயமான இழப்பீடு செலுத்தி டோல் கட்டண சாவடிகளின் ஒப்பந்தங்களை கையகப்படுத்தும்.

**வாக்குறுதி 7 : பெட்ரோல் எரிபொருள் விலையை சீராக்குதல்**

2014-ஆம் ஆண்டின் இறுதியில், எரிபொருள் உதவித்தொகையை, அம்னோ தேசிய முன்னணி அரசாங்கம் மீட்டுக்கொண்டதால், 2016-இல் 2.1%-ஆக இருந்த பணவீக்கம், தற்பொழுது 3.9%-ஆக அதிகரித்துள்ளது. இதனால் வாழ்க்கை செலவீனம் அதிகரித்து மக்கள் துன்பப்படுகின்றனர்.

பெட்ரோல் எரிபொருள் விலையேற்றம் என்பது மக்களின் வாழ்க்கை செலவீன அதிகரிப்பில் பெரும் பங்குள்ளது. எடுத்துக்காட்டுக்கு, வேலையிடத்துக்கு சென்று வரும் செலவு அதிகரித்துள்ளது. அதிலும் அதிகம் பாதிக்கப்பட்டோர், குறைந்த மட்டும் நடுத்தர வருமானம் பெறுவோர் அகிய பிரிவினரே.

மக்களின் வாழ்க்கை செலவீன அதிகரிப்பை எதிர்கொள்ள போதிய திட்டமிடல் இல்லாமல், பெட்ரோல் எரிபொருள் உதவித்தொகையை மீட்டுக்கொண்ட அம்னோ தேசிய முன்னணி அரசாங்கத்தின் நடவடிக்கையானது, கொடுங்கோலானது. 125 CC-க்கு குறைவான

மோட்டார்சைக்கிள்கள் மற்றும் 1300 CC-க்கு குறைவான மகிழுந்துகளின் பயன்பாட்டுக்காக, மாதந்தோறும் ஒரு குறிப்பிட்ட அளவிலான எரிபொருள் பயன்பாட்டுக்கு, பக்காத்தான் ஹாராப்பான் அரசாங்கம் உதவித்தொகை வழங்கும்.

தற்கால சூழ்நிலையில், எரிபொருள் விற்பனை மையங்களில் மை-கார்டை பயன்படுத்தும் முறைகள் வந்துவிட்டன. மாதந்தோறும் தரப்படும் பெட்ரோல் எரிபொருள் உதவித்தொகை குறித்த தகவல்களை அடையாள அட்டையில் பதிவுசெய்யும் முறையை பயன்படுத்த முடியும். இதன்வழி, தேவைப்படுவோர் மட்டுமே அந்த உதவித்தொகை பெறுவதை உறுதி செய்ய முடியும்.

இருப்பினும், உதவித்தொகை வழங்குவதால், நாட்டில் தனியார் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்து சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்தாமல் இருப்பதையும், பக்காத்தான் ஹாராப்பான் அரசாங்கம் கவனத்தில் கொள்ளும். வாகன உரிமை ஒரு அத்தியவாசியம் என்ற நிலையில் இல்லாத அளவிற்கு பொதுப்போக்குவரத்தின் தரத்தை உயர்த்த பக்காத்தான் ஹாராப்பான் அரசு கடப்பாடு கொண்டுள்ளது.

**வாக்குறுதி 8 : பொதுப்போக்குவரத்து சேவை தரத்தை மேம்படுத்துதல்**

தற்பொழுது பொதுப்போக்குவரத்தின் மையமாக கோலாலம்பூர் உள்ளது. நாட்டின் மற்ற நகர்ப்புற பகுதிகளிலும், புறநகர் பகுதிகளிலும் பொதுப்போக்குவரத்து சேவைத்தரம் மோசமாக உள்ளது. புறநகர் பகுதிகளில் வாழ்வோர், குறைந்த வருமானம் பெற்ற பொழுதிலும், தங்களது சொந்த போக்குவரத்தை உபயோகித்து அதிக செலவு செய்ய வேண்டியுள்ளது.

பக்காத்தான் ஹாராப்பான் அரசாங்கம், நகர்ப்புறம், புறநகர் பகுதிகளில் பொதுப்போக்குவரத்து பேருந்துகள் இயக்கப்படுவதை ஊக்குவிக்கும். இலாபம் தரும் வழிகளில் பேருந்துகள் இயக்க உரிமம் பெறும் நிறுவனங்கள், மக்கள்தொகை குறைவாக உள்ள பகுதிகளிலும் பேருந்து சேவையை அளிப்பது கட்டாயமாக்கப்படும். இதுநாள் வரை நிலவி வரும் இந்த பலவீனத்தை சரிசெய்ய, இந்த வழிமுறைகளை மீறும் நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

மின்-அழைப்பு சேவைகளின் பயன்பாடுகள் அதிகரித்திருப்பதை பக்காத்தான் ஹாராப்பான் அரசாங்கம், சாதகமாக கருதுகின்றது. இந்த மின்-அழைப்பு செயலிகளை தற்பொழுது மோட்டார்சைக்கிள் மற்றும் பேருந்துகளுக்கு விரிவுப்படுத்துவதையும் சில நாடுகள் ஆய்வு செய்து வருகின்றன.

பேருந்து நிறுவனங்கள், பேருந்து உரிமையாளர்களுடன் இணைந்து இந்த திட்டம் மக்களுக்கு பயனளிக்கும் அதேவேளையில், தொழில் முனைவர்களுக்கு நட்டம் ஏற்படுத்தாமல் இருக்கும் வகையில்,

பொதுப்போக்குவரத்து தேவைப்படும், சபா, சரவா போன்ற புறநகர் பகுதிகளுக்கு இத்திட்டம் விரிவுப்படுத்தப்படும்.

பள்ளி பேருந்துகளுக்கான உரிமக்கட்டணம் குறைக்கப்படும்

பொதுப்போக்குவரத்து சேவையின் தேவை அதிகரித்துள்ள வேளையில், மின்-அழைப்பு சேவைகளின் வழி, புறநகர்களில் வேலைவாய்ப்பு அதிகரிப்பதையும் பக்காத்தான் ஹாராப்பான் வரவேற்கின்றது. மின்-அழைப்பு சேவைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் உரிமைகளை தற்காப்பதோடு, வாடகைக்கார் ஓட்டுனர்களின் நலனும் பாதுகாக்கப்படுவது உறுதி செய்யப்படும்.

அரசாங்கத்திடமிருந்து குத்தகைகளைப்பெற பொதுப்போக்குவரத்து நிறுவனங்களுக்கு மத்தியில் ஆரோக்கியமான போட்டி சூழல் உருவாக்கப்படும். அதன்வழி, பொதுப்போக்குவரத்து சேவையின் விலை குறையும்.

நாடு முழுவதுமுள்ள நகர்ப்புறங்களில், மாதம் வெறும் 100 ரிங்கிட் மட்டும் செலுத்தி பல பொதுப்போக்குவரத்து சேவைகளை அளவின்றி பயன்படுத்தும் திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.

பக்காத்தான் ஹாராப்பான் முதல் தவணை ஆட்சியில், நாடு முழுவதும் பொதுப்போக்குவரத்து சேவையை மேம்படுத்த 10,000 புதிய பேருந்துகள் சேவைக்கு கொண்டுவரப்படும்.

### வாக்குறுதி 9 : பொது சுகாதார துறையின் சேவை தரத்தை மேம்படுத்துதல்

அடிப்படை மருத்துவ சேவைகள் பெறுவது ஒரு சமத்துவ சமூகத்தின் தேவையாகும். ஆனால், இப்பொழுது சிறந்த மருத்துவ சேவை என்பது பணக்காரர்களுக்கு சொந்தமாகி போன ஒன்றாக ஆகிவிட்டது. சில பொது மருத்துவமனைகளில் தொழில்நுட்பம் மிகுந்த கருவிகளும், தலைசிறந்த மருத்துவர்களையும் கொண்டுள்ளன. ஆனால், அந்த மருத்துவமனைகளின் தங்களின் சக்திக்கு மீறிய அளவில் நோயாளிகளை கையாள வேண்டிய சூழ்நிலையில் இருக்கின்றனர். இதற்கு காரணம், அம்னோ தேசிய முன்னணி அரசாங்கம், பொது சுகாதாரத்திற்கு போதிய நிதியை ஒதுக்காததே ஆகும். அனைத்துலக தரக்கோடான 7% நாம் இன்றுவரை அடையவில்லை.

பக்காத்தான் ஹாராப்பான் அரசாங்கம், தனது முதல் தவணை ஆட்சியிலேயே, நாட்டின் வருமானத்தில் இருந்து 4%-த்தை சுகாதார அமைச்சுக்கு ஒதுக்கும். இது தற்போதைய அம்னோ-தேசிய முன்னணி அரசாங்கம் ஒதுக்கியுள்ள 2%-த்தை விட ஒரு மடங்கு அதிகமாகும்.

அதிகரித்து வரும் மருத்துவ செலவுகள் குறித்த மக்களின் கவலைகளை பக்காத்தான் ஹாராப்பான் உணர்ந்துள்ளது. அதிகமான மலேசியர்கள் இன்னும் மருத்துவ காப்பிடுகளை வாங்க முடியாத நிலையிலேயே உள்ளனர்.

தற்பொழுது சிலாங்கூர் மாநிலத்தில் நடைமுறையில் உள்ள “மருத்துவ அக்கறை” திட்டத்தை நாடு முழுமைக்கும் பக்காத்தான் ஹாராப்பான் அரசு விரிவுப்படுத்தும். குறைந்த வருமானம் பெறும் ஒவ்வொரு குடும்பத்துக்கும், ஆண்டுக்கு 500 ரிங்கிட்டை, தனியார் கிளினிக்குகளில் உபயோகப்படுத்தக்கூடிய வண்ணம் வழங்கும். இதனால், காய்ச்சல் போன்ற சிறு,சிறு நோய்களுக்கு அவர்களது வீட்டிலிருந்து தூரம் உள்ள பொது மருத்துவமனையை அவர்கள் நாடி சென்று, நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியதில்லை. இது மருத்துவ அதிகாரிகளின் நேரத்தையும் மிச்சப்படுத்தும்.

பக்காத்தான் ஹாராப்பான் அரசாங்கம், மருத்துவ சேவையை தரமுயர்த்தும் வண்ணம், பொது மருத்துவமனைகள் மற்றும் தனியார் கிளினிக்குகளுக்கு இடையேயான ஒத்துழைப்பை அதிகரிக்கும்.

குறைந்த வருமானம் பெறும் பிரிவினருக்கு ஏற்படும், அபூர்வ நோய்களுக்கு மருத்துவம் வழங்க, தனியார் துறையினருக்கும், பொதுநால அமைப்புகளுக்கும், பக்காத்தான் ஹாராப்பான் அரசாங்கம் நிதி ஒதுக்கீடை அதிகரிக்கும். குறிப்பாக குறைந்த வருமானம் பெறும் பிரிவினருக்கும், மாற்று திறனாளிகளை கொண்டுள்ள குடும்பங்களுக்கும், இது பெரும் உதவியாக இருக்கும்.

பக்காத்தான் ஹாராப்பான் அரசாங்கம், தொற்றாத நோய்களை கலைவதற்கு முக்கியத்துவம் அளிக்கும். இது, புற்றுநோய் போன்ற நோய்களை, ஆரம்பத்திலேயே கண்டறிந்து தடுப்பு, மற்றும் முறையான மருத்துவமும் வழங்க முக்கியத்துவம் வழங்கும். இதற்கு, நகர்ப்புற திட்டமிடல், பொதுப்போக்குவரத்து, உணவு தயாரிப்பு துறை மீதான சட்டங்கள் என பல துறைகளின் ஒத்துழைப்பு அவசியமாகின்றது.

மனநோய்களுக்கான மருத்துவ ஒதுக்கீடுகளை பொது மருத்துவமனைகளிலும் அதிகரிக்கப்படும். குறிப்பாக மனிதவளத்துக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

பெரும்பாலான நாடுகளில் அமல்படுத்தப்படுவதைப் போல. நியூமோகோக்கல் தடுப்பூசியை இரண்டு வயதுக்கு கீழ்பட்ட குழந்தைகளுக்கு கட்டாயமாக்கப்படும்.

கடும் நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளோருக்கான, வலிநிவாரண மருத்துவ மையங்கள் நாடு முழுவதும் அமைக்கப்படும்.

பயிற்சி மருத்துவர்களை அதிக நாட்கள் காத்திருப்பு பட்டியலில் வைத்திருக்கும் முறையை மாற்ற சுகாதார அமைச்சுக்கு பக்காத்தான் ஹாராப்பான் அரசாங்கம் கட்டளையிடும். நாட்டின் தேவைக்கேற்பவே, மருத்துவ கல்வித்துறையை பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை, மற்றும் அவர்களுக்கு வழங்கப்படும் உபகார சம்பளம் ஆகியவற்றை ஆய்வு செய்யும். அயல்நாட்டு கல்விக்கூடங்களில் பயில்வதற்கான உதவிநிதி,

அக்கல்விக்கூடங்களின் தரக்குறியீட்டை அடிப்படையாக வைத்தே முடிவு செய்யப்படும்.

**வாக்குறுதி 10 : மக்களின் உணவுத்தேவை பூர்த்தி செய்தல் மற்றும் விவசாயிகளின் நலன்களை பாதுகாத்தல்**

உணவு விநியோகம் என்பது மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு அத்தியவாசியமான ஒன்று. நமது உணவு விநியோகம் பாதிப்புக்குள்ளாகமல் இருக்க, நமது உணவுத்தேவைக்கேற்ப, உணவு பொருட்களின் உற்பத்தி இருப்பதோடு, உள்நாட்டில் உணவு உற்பத்தி அதிகரிக்க வேண்டிய தேவையும் இருக்கின்றது.

அம்னோ தேசிய முன்னணி அரசாங்கம், தொழிற்சாலைகளிலும், சேவைத்துறைகளிலும் அன்னிய முதலீட்டை ஈர்ப்பதில் கவனத்தை காட்டிய வேளையில், நாட்டின் விவசாயத்துறை நவீனமயப்படுத்தப்படவேண்டிய அவசியத்தை உணரவில்லை. இது நாட்டின் உணவுத்தேவை பாதுகாப்பை அச்சுறுத்தலாக மாறியுள்ளது.

பக்காத்தான் ஹாராப்பான் அரசாங்கம், தேசிய உணவு பாதுகாப்பு கொள்கைவரவை மறுபரிசீலனை செய்து, நாட்டின் விவசாயத்துறை நவீனமயமாக்கப்படுவதை புதிய கொள்கைவரவு பிரதிபலிப்பதாக செய்யும். நெல், காய்கறி விவசாயம், மூலப்பொருட்கள் உற்பத்தி, கால்நடை வளர்ப்பு, மீன் வளர்ப்பு துறைகளில் ஈடுபட்டுள்ள விவசாயம் சார்ந்துள்ள தொழில்முனைவர்கள், அண்மைய தொழில்நுட்பங்களை அறிந்து பயன்படுத்துவதை ஊக்குவிக்க உதவிகள் வழங்கப்படும்.

இக்கட்டான சூழ்நிலைகளிலும் மலேசியாவின் உணவு கையிருப்பு போதுமான அளவில் இருப்பதை உறுதி செய்வதே எங்களின் நோக்கமாகும்.

இந்த வியூகமானது, விவசாயம் சார்ந்தவர்களின் வருமானத்தை பெருக்கவும் உதவும். விவசாயம் பெருகும் விலையில், அன்னிய நாடுகளில் இருந்து இறக்குமதி அளவை குறைத்து பொருட்களின் விலையையும் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியும்.

பக்காத்தான் ஹாராப்பானின் ஆட்சியில் முதல் இரண்டு ஆண்டுகளில், நாட்டின் அத்தியவாசிய தானியமான அரிசி உற்பத்திக்கு முக்கியத்துவம் வழங்கப்படும். நெல் உற்பத்தி துறையை காப்பாற்றும் செயற்குழுவின் கோரிக்கைகளுக்கு பக்காத்தான் ஹாராப்பான் அரசாங்கம் செவிசாய்த்து, நாட்டின் நெல் உற்பத்தியை அதிகரிக்கவும், நெல் விவசாயிகளின் நலன் பாதுகாக்கப்படுவதையும் உறுதிசெய்யும்.

அரிசி உற்பத்தி துறையில், பெர்னாஸ் நிறுவனத்தின் ஆதிக்கத்தை பக்காத்தான் ஹாராப்பான் அரசாங்கம் முடிவுக்கு கொண்டு வந்து, அனைத்து நிலைகளிலும் அரிசி உற்பத்தி, விநியோகம் முறையாக நடத்தப்படுவதை உறுதி செய்யும்.

நாட்டின் அரிசி உற்பத்தி தேவைக்கேற்ப அதிகரிக்கப்படுவதோடு, தரமுயர்ந்த அரிசி உள்நாட்டில் உற்பத்தி ஆவதையும் பக்காத்தான் ஹாராப்பான் அரசாங்கம் உறுதி செய்யும்.

நாட்டின் நெல் விவசாயிகளின் நலனை பேணும் விதத்தில், அரிசி இறக்குமதியை பக்காத்தான் ஹாராப்பான் அரசாங்கம் கட்டுப்படுத்தும். நாட்டிற்குள் அரிசியை கடத்தி வருவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். நாட்டின் எல்லைக்காவல் அரிசி கடத்தலுக்கு எதிராக விழிப்புநிலையில் வைத்திருக்கப்படும். அப்படி எல்லைக்காவலர்கள், அரிசி கடத்தலுக்கு உடந்தையாக இருப்பது தெரியவருமானால், சம்பந்தப்பட்ட நபர்களின் மீது கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

தங்களுக்கு எந்தவொரு தரப்பாலும் அநீதி ஏற்படுகின்றது என்று நினைக்கும் விவசாயிகள் தங்களது புகார்களை நேரடியாக தெரிவிக்கும் வண்ணம், விவசாயத்துறை பொதுப்புகார் பிரிவு ஏற்படுத்தப்படும்.

நாட்டு மக்களுக்கு உணவளிக்கும் விவசாயிகள், நாட்டின் வீரர்களாக கொண்டாடப்பட வேண்டியவர்கள் என்பது பக்காத்தான் ஹாராப்பானின் நிலைப்பாடு. அவர்களுக்கு போதுமான உதவிகளை புரியாமல், தேர்தல் காலங்களில் சிறு-சிறு பரிசுக்களை வழங்கும் அம்னோ-தேசிய முன்னணி, விவசாயிகளை சிறுமைப்படுத்துகின்றது.

விவசாயிகள், கால்நடை வளர்ப்போர், மற்றும் மீனவர்களின் நலனை பேண, பக்காத்தான் ஹாராப்பான் அரசாங்கம் ஒரு காப்பீடு திட்டத்தை அறிமுகப்படுத்தும்.

இயற்கை சீற்றங்களின் போது, விவசாயம் சார்ந்த தொழில் புரிவோரின் வருமானம் கடுமையாக பாதிக்கப்படுகின்றது. இவ்வாறான இயற்கை சீற்றங்களின் போது விவசாயம் சார்ந்த தொழில் புரிவோரின் வருமானம் பாதிக்கப்படாமல் இருக்க, பக்காத்தான் ஹாராப்பான் அரசாங்கம் ஒரு சிறப்பு உதவிநிதியை ஏற்படுத்தும்.

பல்வேறு காரணங்களால், இரப்பர் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. இதனால் பாதிக்கப்பட்டுள்ள பால்மர தொழில் புரிவோரின் நிலையும் கருத்தில் கொள்ளப்படும் இரப்பர் விலையை சீர்செய்ய, சிறப்பு திட்டம் ஒன்றும் நடைமுறைப்படுத்தப்படும்.

விவசாயிகள், கால்நடை வளர்ப்போர் மற்றும் மீனவர்களை ஏமாற்றும் இடைத்தரகர் நடவடிக்கைகளை பக்காத்தான் ஹாராப்பான் அரசாங்கம் கலையும்.

## படிநிலை 2: நிறுவன நிர்வாகம் மற்றும் அரசியல் சீர்திருத்தம்

அம்னோ மற்றும் தேசிய முன்னணி தலைவர்களால் ஏற்பட்டுள்ள விளைவுகளால் நாட்டின் மிக முக்கிய நிறுவனங்களின் மீதுள்ள நம்பகத்தன்மை தற்போது சரிந்துள்ளது. நாட்டின் முக்கிய நிறுவனங்களின் ஒருமைப்பாடு குறித்து பலர் கேள்வியெழுப்பி வருகின்றனர். குறிப்பாக, நாட்டின் முக்கிய பதவிகளுக்கான நியமனங்களும் சந்தேகத்திற்குறியதகின்றன.

2016-ஆம் ஆண்டு, ஊழல் அமலாக்கத்தில் உலகிலேயே மிக மோசமான நாடுகளின் பட்டியலில் ரஷ்யாவிற்கு அடுத்து இரண்டாவது நிலையில் மலேசியா விளங்குவதாக 'தி எகனாமிஸ்ட்' எனும் சர்வதேச அளவில் முன்னணி பொருளாதார பத்திரிக்கை வெளியிட்டுள்ளது. இதன் விளைவால் மலாய்க்காரர் மற்றும் பூமிபுத்ரா குத்தகைக்காரர்கள் அரசாங்கத்திடமிருந்து குத்தகைகளை பெற முடியவில்லை.

2017-யில் உலக ஊழல் புலனாய்வு குறியீட்டில் 62 இடத்திற்கு மலேசியா வீழ்ந்தது. 2016-யைக் காட்டிலும் 7 புள்ளிகள் சரிந்தது. இதனால் 1995-இல் இருந்து தொடங்கப்பட்ட சர்வதேச வெளிப்படைத்தன்மை குறியீட்டில் பின்னடைவை எதிர்நோக்கியது. பொதுத்துறை நிறுவனங்களின் ஊழல்களால் நாடு இதே வீழ்ச்சியை தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக பெறும் என சர்வதேச ஊழல் தடுப்பு ஆணையத்தின் ஆய்வு தெரிவித்தது.

நாட்டின் நிறுவன நிர்வாகத்தின் நம்பகத்தன்மையை மீட்டெடுப்பதோடு, கீழ்கண்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுவதன் வழி நமது நிர்வாகத்தின் கௌரவத்தை நம்பிக்கை கூட்டணி மீட்டெடுக்கும்.

### வாக்குறுதி 11: மலாய்க்காரர்கள் மற்றும் அதன் நிறுவனங்களின் கௌரவத்தை மீட்டெடுத்தல்

அரசியலமைப்பு ஆட்சியாளர்களின் அறிவுரைகளையும் அறிவுக்கூர்மையையும் அம்னோ மற்றும் தேசிய முன்னணியினர் பொருட்படுத்துவதில்லை. மாறாக, அவர்களுக்குச் சாதகமான அரசியல் கருத்துகளை மட்டுமே எடுத்துக் கொண்டு, அவர்களுக்கு சாதகமில்லாத கருத்துகளை புறக்கணிக்கின்றனர்.

1எம்டிபி ஊழல் விவகாரத்திற்கு உடனடி தீர்வுக் காண வேண்டுமென்று மலாய் அரச மன்றம் கட்டளையிட்டிருந்தது. ஆனால், இதுவரையிலும் அம்னோ மற்றும் தேசிய முன்னணியினர் அந்தக் கட்டளையைப் பொருட்படுத்தவில்லை. நாட்டின் ஒழுங்குமுறை நிறுவனங்கள் பாதுக்காப்பட வேண்டுமென்று மலாய் அரச மன்றம் கட்டளையிட்டது. ஆனால், அம்னோ மற்றும் தேசிய முன்னணியினர் அரச மலேசிய போலீஸ் படை, மலேசிய ஊழல் தடுப்பு ஆணையம், பேங்க் நெகாரா, நீதித்துறை ஆகிய நிறுவனங்களை அவர்களின் அரசியல் நோக்கத்திற்காக கையாளுகின்றனர். நாட்டில் இன ஒற்றுமை பாதுகாக்கப்பட வேண்டுமென்று அரசியலமைப்பு

ஆட்சியாளர்கள் நினைவூட்டினார். ஆனால், அம்னோ மற்றும் தேசிய முன்னணியினர் இனவாத அரசியலை பின்பற்றுகின்றனர்.

நம்பிக்கை கூட்டணி அரசாங்கத்தில் அரசியலமைப்பு ஆட்சியாளர்களின் கருத்துகளும் அறிவுரைகளும் முன்னிலைப்படுத்தப்படும் என்பது நிதர்சனமான ஒன்று.

மலாய் ஆட்சியாளர்களின் அதிகாரம் மாநில ரீதியில் மதத்தை நிர்வகிப்பதிலும், மலாய்க் கலாச்சாரத்தை மீட்டெடுக்கப்படுவதோடு இதில் மத்திய அரசாங்கத்தின் தலையீடு நிறுத்தப்படும்.

மலேசியா ஒரு நல்லிணக்கமான நாடாகவும் மலாய்க்காரர்களுக்கு சிறப்பு உரிமை வழங்கப்படுவதை உறுதி செய்யும் வகையில், நம்பிக்கை கூட்டணி அரசாங்கம் மக்கள் நல்லிணக்க ஆலோசனை மன்றம் அதாவது காலஞ்சென்ற துன் அப்துல் ரசாக் காலத்தின் போதிலிருந்த மன்றம் மீண்டும் அமைக்கப்படும். இதன் வழி, கூட்டாட்சி அரசியலமைப்பில் இருப்பது போல் நாட்டில் மக்கள் இனபேதமின்றி நல்லிணக்கத்துடன் வாழ வழிவகுக்கும்.

பொது பல்கலைக்கழகங்களில் மலேசிய சுல்தான்களைப் பற்றியும் மலாய் நாகரிக வரலாறு பல ஆய்வுகள் நடத்தவும் நாடு தழுவிய ரீதியில் பகிர்ந்துக் கொள்ள ஊக்குவிக்கப்படும். இஸ்தானா நெகாரவிலுள்ள நாட்டின் பழைய அரச அருங்காட்சியகத்தை தேசிய கல்வி அருங்காட்சியமாக மேம்படுத்தப்படும்.

அம்னோ மற்றும் தேசிய முன்னணியினர் மலாய் பாதுகாப்பு நிலங்களைப் பாதுகாக்க தவறிவிட்டனர். நம்பிக்கை கூட்டணி அரசாங்கம் மலாய் பாதுகாப்பு நிலங்களை பாதுகாப்பது உறுதி.

மலாய் மற்றும் பூமிப்புத்ராவினருக்கு சமபங்கு சதவிகிதம் அதிகரிக்க தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்திற்கு சொந்தமான நிறுவனங்கள் நிர்வகிக்கப்படும்.

மக்களின் மீது அக்கறை கொண்டுள்ள அரசாங்கமாக, மலாய்க்காரர்கள் மற்றும் இஸ்லாமியர்களுக்கான கௌரவத்தை நிலைநிறுத்துவதற்கு அதன் அடைவுநிலை மற்றும் சாதனைகள் குறித்து ஒவ்வொரு ஆண்டும் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படும். வெளிப்படையான அரசாங்கமாக, மலாய்க்காரர்களின் பொருளாதார நிலையை ஒவ்வொரு ஆண்டும் பட்ஜெட் உரையில் தாக்கல் செய்யப்படும்.

**12. பிரதமர் பதவிக் காலம் கட்டுப்படுத்தப்படுவதோடு பிரதமர் துறையும் மறுசீரமைக்கப்படும்**.

அம்னோ மற்றும் தேசிய முன்னணியின் ஆட்சியில், டத்தோ ஸ்ரீ நஜீப் துன் ரசாக் அனைத்து முக்கிய அதிகாரங்களையும் அமைச்சரவை உறுப்பினர்களையும்  தம் வசம் வைத்துள்ளார். மலேசியாவில் அமைச்சரவை மற்றும் பிரதமர் துறையின் பங்களிப்பை மறுசீரமைத்து அமைச்சரவை நிர்வாகத்தின் அமைப்பை மீட்டெடுத்து நம்பிக்கை கூட்டணி நிலைநாட்டும்.

பிரதமர் பிற அமைச்சரவை பதவியை வகிக்கக் கூடாது, குறிப்பாக நிதி அமைச்சர் பதவியை வகிக்கக் கூடாது.

தற்போது பிரதமர் துறையில் அமைச்சர்கள் மற்றும் துணை அமைச்சர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. பிரதமர் துறையில் 10 அமைச்சர்களும் 3 துணை அமைச்சர்களும் உள்ளனர். உண்மையிலேயே, இவர்களின் பங்களிப்பு என்னவென்று கேள்வியெழுப்ப தோன்றுகிறது.

நம்பிக்கை கூட்டணி அரசாங்கம் பிரதமர் துறையின் அமைச்சர்களின் எண்ணிக்கையைக் குறைத்து 3 அமைச்சர்களை மட்டும் நியமனம் செய்யும். மற்ற அமைச்சர்களின் பொறுப்புகளை பிற பொருத்தமான அமைச்சுகளுக்கு கொடுக்கப்படும்.

பிரதமர் துறைக்கு வழங்கப்படும் அதிகபடியான மானியங்களால் உயர்மட்ட அளவில் பல தவறான செயல்கள் நிகழ்கின்றன. நம்பிக்கை கூட்டணி ஆட்சியின் முதல் ஆண்டில், பிரதமர் துறைக்கு வழங்கப்படும் ரிம17 பில்லியன் மானியம் ரிம8 பில்லியனாக குறைக்கப்படும்.

தற்போது மற்ற அமைச்சகங்களின் கீழுள்ள நிறுவனங்களைக் காட்டிலும் பிரதமர் துறையின் கீழுள்ள நிறுவனங்கள் தான் அதிகமாக உள்ளன. நம்பிக்கை கூட்டணி அரசாங்கத்தில் இதுபோன்ற நிறுவனங்களின் எண்ணிக்கை குறைக்கப்படும்.

நாட்டின் மிக முக்கிய தேசிய நிறுவனங்களை ஆக்கிரமிக்கும் பிரதமரின் அதிகாரங்களை ஒழித்து, அதிகாரங்களை சம்பந்தப்பட்ட இயக்கங்களுக்கு வழங்கப்படும். நாடாளுமன்றமும் இதில் அடங்கும்.

**வாக்குறுதி 13: 1எம்டிபி, பெல்டா, மாரா மற்றும் தாபோங் ஹாஜி போன்ற ஊழல்களுக்குத் தீர்வு காணுதல்**

டத்தோ ஶ்ரீ நஜீப் துன் ரசாக் ஆட்சியின் கீழ் நிகழ்ந்துள்ள அதிகபடியான அத்துமீறல்களாலும், ஊழல்களாலும் அம்னோ மற்றும் தேசிய முன்னணி அரசாங்கம் உலகளாவிய நிலையில் ஊழல் மிகுந்த அரசாங்கமாக காணப்படுகிறது.

இந்த ஊழல்களிலும் அத்துமீறல்களிலும் சம்பந்தப்பட்டவர்களை நம்பிக்கை கூட்டணி அரசாங்கம் நிச்சயமாக அடையாளங்கண்டு, தீவிர விசாரணை மேற்கொண்டு சட்டத்தின் முன் நிறுத்துவது உறுதி.

1எம்டிபி, பெல்டா, மாரா மற்றும் தாபோங் ஹாஜி ஊழல்களை விசாரிக்க சிறப்பு விசாரணைக் குழு அமைத்து இதில் சம்பந்தப்பட்டவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்படும். இந்த விசாரணைக் குழுவில் திறன் வாய்ந்தவர்களும் அரசியல் நோக்கமில்லாதவர்களாகவும் நியமிக்கப்படுவர்.

இந்த ஊழல்களில் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் வெளிநாட்டு முதலீடுகளை ரத்து செய்து, நமது நாட்டின் செல்வ செழிப்பை மீண்டும் கொண்டுவர நம்பிக்கை கூட்டணி செயல்படும்.

**வாக்குறுதி 14: 1எம்டிபி, பெல்டா, மாரா மற்றும் தாபோங் ஹாஜி போன்ற ஊழல்களுக்குத் தீர்வு காணுதல்**

மலேசியாவில் ஊழலை ஒழிக்கும் மிக முக்கியமான ஒரு இயக்கம் தான் ஊழல் தடுப்பு ஆணையம் (எம்ஏசிசி). ஊழல் தடுப்பு ஆணையத்தின் நேர்மையும் பொறுப்புணர்வும் தான் மக்களின் மத்தியில் நம்பகத்தன்மையை உருவாக்கும்.

அவ்வகையில் நம்பிக்கை கூட்டணி ஊழல் தடுப்பு ஆணையம் (எம்ஏசிசி) அதன் கடமைகளைச் சரிவர மேற்கொள்ள தமது முழு அதிகாரத்தையும் நம்பிக்கையையும் வழங்குவது திண்ணம்.

கூட்டாட்சி அரசியலமைப்பில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது போல் ஊழல் தடுப்பு ஆணையத்தின் தகுதியை மலேசிய தேர்தல் ஆணையத்திற்கு சமமாக தரம் உயர்த்தப்படும். இந்த மேம்பாட்டினால் ஊழல் தடுப்பு ஆணையத்திற்கு சுய அதிகாரம் வழங்கப்படும். அதன் பிறகு, ஊழல் தடுப்பு ஆணையம் பிரதமரிடம் எதையும் அறிவிக்க வேண்டியதில்லை. மாறாக, நேரடியாக நாடாளுமன்றத்தில் அறிவிக்க வேண்டும்.

இவற்றை உறுதிப்படுத்த, ஊழல் தடுப்பு (எம்ஏசிசி) ஆணையர்களின் எண்ணிக்கை ஒதுக்கீட்டின் மூலம் அதிகரிக்கப்படும். அதில் ஒருவர் ஊழல் தடுப்பு ஆணையத்தின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு, மற்ற ஆணையாளர்களின் நிரந்தர பதவி நியமன உத்தரவாதம் வழங்கப்படும். ஊழல் தடுப்பு ஆணையத்தின் (எம்ஏசிசி) தேர்ந்தெடுக்கப்பட்ட ஆணையாளர்கள் ஜனநாயக முறைப்படி நாடாளுமன்றத்தில் உறுதிப்படுத்தப்படுவர்.

நம்பிக்கை கூட்டணி அரசாங்கம் தகவல் வழங்குபவர் பாதுகாப்புச் சட்டம் 2010, அதிகாரப்பூர்வ இரகசிய சட்டம் 1972 மற்றும் சாட்சிகளின் பாதுகாப்புச் சட்டம் 2009 போன்ற சட்டங்கள் குறித்து மறுஆய்வு செய்து தேவையான மேம்பாடுகள் செய்யும். மேலும், தகவல் சுதந்திர சட்டம் அமலாக்கம் செய்வதோடு இப்புதிய சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு மானியங்கள் ஒதுக்கப்படும்.

அனைத்து மக்களவை உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள் மற்றும் ஜுசா சி (JUSA C) எனும் அரசாங்க உயர் அதிகாரிகள் தங்களின் சொத்துக்களையும் வருமானத்தையும் கட்டாயம் அறிவிக்க வேண்டும்.

வெளிப்படைத்தன்மைமிக்க கொள்கையை நம்பிக்கை கூட்டணி அரசாங்கத்தை உறுதிப்படுத்தும் வகையில், உலகளவில் 70 நாடுகள் பங்கேற்ற சர்வதேச இயக்கமான வெளிப்படையான பங்குரிமை அரசாங்கத்தில்(Open Government Partnership-) கலந்து கொள்ளும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**வாக்குறுதி 15: அரச சட்டத்துறை தலைமையகத்திலிருந்து பொது வழக்கறிஞர் தலைமையகம் பிரித்து செயல்படும்**

சட்டத்துறை தலைவர் என்பவர் அரசாங்கத்தின் முக்கிய சட்ட ஆலோசகராகவும் இவரின் பங்களிப்பு நிலைநிறுத்தப்படுவது மிகவும் அவசியமாகும். ஆனால் இந்தச் சட்டத்துறை அதிகாரத்தை ஒருவருக்கு சாதகமாகவே பயன்படுத்துவது முற்றிலும் தவறான ஒன்று.

ஆகையால், நம்பிக்கை கூட்டணி அரச சட்டத்துறை தலைமையகத்திலிருந்து அரசாங்க வழக்கறிஞர் தலைமையகத்தைப் பிரித்து செயல்பட வைப்பது சிறந்த வழியாக அமையும் என கருதுகின்றது. இதன் வழி, மலேசியாவில் முன் மாதிரியாக கொண்ட வெஸ்ட்மின்ஸ்டர் (Westminster) எனும் மக்களாட்சி முறை அமல்படுத்தப்படும்.

நம்பிக்கை கூட்டணி அரசாங்கம் விரைவில் அரச சட்டத்துறை தலைமையகத்திலிருந்து அரசாங்க வழக்கறிஞர் தலைமையகத்தைப் பிரித்து செயல்பட ஆக்கப்பூர்வ நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

சட்டத்துறை தலைவர் பதவிக்கு தகுதிப் பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை தேர்ந்தெடுத்து ,பின்னர் அவரை அமைச்சராக  நியமித்தல்,அவர் அரசாங்கத்தின் சட்ட ஆலோசகராக பங்களிப்பை வழங்கலாம்.

அரசாங்க வழக்கறிஞர் பதவியை அரசியல் கட்சி சார்ந்தில்லாத,அரசியல் நோக்கமில்லாத, சுயமாக செயல் படக்கூடிய மற்றொருவரை தேர்ந்தெடுத்து வழிநடத்தப்படும். இதன் வழி, ஜனநாயகத்தை பின்பற்றும் மற்ற நாடுகள் போன்று நாமும் ஜனநாயகத்தைக் காக்க முடியும்.

**வாக்குறுதி 16: நாடாளுமன்ற நிறுவனத்தின் அதிகாரத்தை மீட்டெடுத்தல்**

நாடாளுமன்ற நிறுவனம் என்பது நிர்வாக அதிகாரத்தை சரிப்பார்க்க மிக முக்கியமான ஒன்று. எனவே, நாடாளுமன்ற நிறுவனத்திற்கு உள்கட்டமைப்பு வசதிகளும் போதுமான மானியமும் வழங்கப்பட வேண்டும்.

நம்பிக்கை கூட்டணி அரசாங்கம் மீண்டும் நாடாளுமன்ற சேவைச் சட்டம் 1963-யை அறிமுகப்படுத்தி, தற்போதைய நவீன காலத்திற்கு ஏற்றார்போல் மேம்பாடு செய்யப்படும்.

நேர்மை மற்றும் நம்பகத்தன்மை கொண்ட சபாநாயகரும் மேலவை தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினர்களிலிருந்து நியமிக்கப்படுவர். சபாநாயகர் மற்றும் மேலவை தலைவர் பதவிகளை ஏற்றுக் கொண்ட பிறகு, அவர்கள் அரசியல் கட்சியிலிருந்து வெளியேற வேண்டும். மேலவை உறுப்பினர்கள் தங்களின் கடமைகளைச் சரியாக செய்கின்றார்களா என்பதை அறிவதற்கு சிறப்புக் குழு அமைக்கப்படும்.

ஒரு மத்திய அமைச்சருக்கு வழங்கப்படும் அதே தகுதியும் மானியமும் எதிர்க்கட்சித் தலைவருக்கும் வழங்கப்படும்.

நாடாளுமன்றம் அவசியமான ஒரு பங்களிப்பை வழங்கின்றது என்பதை உறுதிப்படுத்த, ஒவ்வொரு ஆண்டும் குறைந்தது 100 முறை நாடாளுமன்ற கூட்டத் தொடர் நடைபெற வேண்டும்.

ஒவ்வொரு அமைச்சையும் கண்காணிக்கவும், சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளை அழைத்து விளக்கமளிக்க வேண்டும் என்ற அதிகாரத்தை வழங்கி தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற குழு ஒன்றை உருவாக்க வேண்டும்.

நாட்டில் முக்கிய பதவிகளான மனித உரிமை ஆணையம், மலேசிய தேர்தல் ஆணையம், மலேசிய ஊழல் தடுப்பு ஆணையம், மலேசிய நீதித் துறை நியமனம் ஆணையம் ஆகியவை நாடாளுமன்ற செயற்குழுவால் உறுதிச் செய்யப்பட வேண்டும். இதன் வழி, இதுபோன்ற நியமனங்களில் பிரதமரின் தலையீட்டைக் குறைத்துக் கொள்ள முடியும்.

நாட்டின் முக்கிய கட்டுப்பாட்டு அமைப்புகளான அரசு நீதித்திறை, எம்ஏசிசி, தேசிய வங்கி, பத்திரங்கள் ஆணைக் குழு மற்றும் தேசிய தணிக்கைத் துறை ஆகியவை நாடாளுமன்றக் குழுவால் அழைக்கப்படலாம்.

நாடாளுமன்றத்தில் உருவாக்கப்பட்ட அதிகாரப்பூர்வமற்ற குழுக்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கருத்துகளைப் பரிமாறிக் கொள்ளலாம்.

தேசிய கணக்குத் தணிக்கை குழுத் தலைவர் பதவி எதிர்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருக்கு ஒதுக்கப்படும்.

நாடாளுமன்றத்தில் புதிய சட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு முன்னதாக, மக்களுடன் விவாதித்து பச்சை அறிக்கை ஒன்றை தயார் செய்தவுடன் அரசாங்கத்தின் பல கொள்கைகளை வெள்ளை அறிக்கையில் வெளியிட வேண்டும்.

ஒவ்வொரு வாரமும், நாடாளுமன்றத்தில் பிரதமரிடம் சிறப்பு கேள்விகள் கேட்பதற்கு சுமார் 30 நிமிடம் ஒதுக்கப்படும்.

மேலவையானது மிக முக்கிய பங்களிப்பை வழங்குவதோடு நாடாளுமன்றத்திற்கு எடுத்துக்காட்டாக அமையக் கூடிய ஒன்று.

மத்திய அரசாங்கம் தேர்ந்தெடுப்பதைக் காட்டிலும் மாநிலங்களில் தேர்ந்தெடுக்கப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகமாகயிருப்பதன் மூலம் மாநிலத்தின் உரிமைகள் காக்கப்படுகின்றன.

**இவ்விரண்டிற்கும் குறிப்பிட்ட நேரம் ஒதுக்கப்படும்:**

- **எதிர்க்கட்சியின் கேள்வி நிரல்**

- **ஒவ்வொரு அமைச்சகங்களின் அமைச்சர்களிடம் அமைச்சர்கள் கட்டாயம் கேள்வியெழுப்ப வேண்டும்.**

- **மனித உரிமைகள் ஆணையம் (சுஹாகாம்), தேசிய கணக்காய்வாளர் தலைவர், தேசிய தணிக்கை கணக்குக் குழு, அரசாங்க முதலீட்டு நிறுவனம் மற்றும் பெட்ரோனாஸ் ஆகிய அறிக்கைகளின் தொடர்பாக செயற்குழுவுடன் விவாதிக்க வேண்டும்.**

நம்பிக்கை கூட்டணியின் வெளிப்படைத்தன்மையையும் நேர்மையையும் வெளிப்படுத்தும் வண்ணம் ஒவ்வொரு ஆண்டும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்க நிறுவனங்களில் பதவிவாகிக்கும் முழு பட்டியலை வெளியிடுவது உறுதி.

## வாக்குறுதி 17: தேர்தல் முறையின் வெளிப்படைத்தன்மை மற்றும் நவீனத்தை உறுதிப்படுத்துதல்

மலேசியாவில் ஜனநாயக முறையின் மீது மக்கள் நம்பிக்கைக் கொள்ள தேர்தல் ஆணையம் வெளிப்படைத்தன்மையுடனும், நியாயமாகவும் நடந்துக் கொள்ள வேண்டும். இதற்கு முன்னதாக நாட்டில் நடைபெற்ற தேர்தல் முறைகளில் நடந்த குளறுபடிகள் குறித்து கருத்துரைக்க நம்பிக்கை கூட்டணி தயாராகவுள்ளது. நமது நாட்டில் தேர்தல் முறையின் மீது மீண்டும் மக்கள் மத்தியில் நம்பகத்தன்மையை ஏற்படுத்த நம்பிக்கை கூட்டணி அரசாங்கம் உறுதியான நடவடிக்கையை மேற்கொள்ளும்.

பிரதமர் மற்றும் மற்ற அரசியல்வாதிகள் தலையீடு இன்றி, நாடாளுமன்றத்தின் பார்வையில் தேர்தல் ஆணையம் செயல்பட நம்பிக்கை கூட்டணி அரசாங்கம் தேர்தல் ஆணையத்திற்கு முழு சுதந்திரத்தை வழங்கும்.

மேலும், மலேசிய தேர்தல் ஆணைய உறுப்பினர்களின் நியமனம் நாடாளுமன்ற செயல்முறையின் வழி நிறைவேற்றப்பட வேண்டும்.

சிறப்புச் செயற்குழு ஒன்றை அமைத்து துணைப் பிரதமர் பார்வையின் கீழ், சிவில் சமூகத்துடன் தற்காலிக அரசாங்க வழிகாட்டுதல்களை (Caretaker Government) உருவாக்குவதன் வழி, அடுத்த 15-வது பொதுத் தேர்தலில் அரசாங்க சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்வதை தடுக்க முடியும்.

தேர்தல் செயலாக்க மேம்பாட்டுக்கான நாடாளுமன்ற சிறப்பு தேர்வுக் குழு, பெர்சே இயக்கம், Institute for Democracy & Economic Affairs (IDEAS)-யின் 13வது பொதுத் தேர்தலுக்கான கண்காணிப்பு அறிக்கை ஆகியவை நமது நாட்டின் தேர்தல் முறையை மறுசீரமைக்க கோரிக்கை விடுத்தது குறிப்பிடத்தக்கது.

வாக்காளர் பட்டியலை புதுமைப்படுத்துதல், தபால் வாக்கு முறையை மேம்படுத்துதல், பிரச்சாரத்திற்கு குறைந்தபட்சம் 21 நாட்கள், போட்டியிடும் அனைத்து கட்சிகளுக்கும் நியாயமான ஊடக வசதி ஆகிய கோரிக்கைகள் இதில் அடங்கும்.

தொடர்ந்து, நம்பிக்கை கூட்டணி அரசாங்கம் வாக்களிக்கும் வயது வரம்பை 18-ஆக குறைத்து, தேசிய பதிவு துறையில் இயல்பான வாக்காளர் பதிவு அமல்படுத்தப்படும்.

நம்பிக்கை கூட்டணி அரசாங்கம் ஒரு ஆரோக்கியமான போட்டியை உருவாக்க, பொதுத் தேர்தலில் போட்டியிடும் அனைத்து பதிவுப்பெற்ற கட்சிகளும் ஆர்.டி.எம் வானொலி மற்றும் தொலைக்காட்சி அலைவரிசைகளில் இடமளிக்கும்.

தொகுதிகளின் எல்லை மறுசீரமைப்பு முறையில் நம்பிக்கை கூட்டணி அரசாங்கம் நியாயமாகவும் வெளிப்படையாகவும் செயல்படுவதை உறுதிச் செய்யும்.

**வாக்குறுதி 18: அரசியல் நிதியியல் ஒருமைப்பாட்டை நிலைநிறுத்தல்**

கடந்த 13-வது பொதுத் தேர்தலுக்கு முன், அம்னோவின் தலைவரின் சொந்த வங்கிக் கணக்கில் ரிம 2.6 பில்லியன் சேர்க்கப்பட்ட விவகாரம் உலகம் முழுவதும் அதிர்ச்சியை உண்டாக்கியது. இதுநாள் வரை இதற்கான பல கேள்விகள் விடைத் தெரியாமல் கேள்விக்குறியாகவே உள்ளது. இதுவரையிலும் இவ்விவகாரம் தொடர்பில் எந்தவொரு கடும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

மேலும், நம்பிக்கை கூட்டணி அரசாங்கம் அரசியல் நிதி கட்டுப்பாட்டு சட்டத்தை அறிமுகப்படுத்தும். நம்பிக்கை கூட்டணி அரசாங்கத்தின் ஆட்சியில் முதலாம் ஆண்டில், இவ்விவகாரம் தொடர்பில் சிறப்பு விசாரணைக் குழு அமைத்து இன்னும் விடைத் தெரியாமல் புரியாத புதிராக இருக்கும் அனைத்து கேள்விகளுக்கும் விடை கண்டறிய தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**அச்சட்டத்தின் முக்கிய கோட்பாடுகள் என்னவென்றால்:**

- **தகுதிப்பெற்ற அரசியல் கட்சிகள் வருடந்தோறும் அரசாங்கத்திடமிருந்து வெளிப்படையான முறையில் நிதிகளைப் பெற்றுக் கொள்ளலாம்**

- **அனைத்து அரசியல் நிதிகளும் எங்கிருந்து வழங்கப்பட்டவையென அடையாளம் காணப்படும்**

- **ஒவ்வொரு ஆண்டும் தணிக்கை செய்யப்பட்ட நிதி அறிக்கைகளை அரசியல் கட்சிகளும் சமர்ப்பிக்க வேண்டும்**

- **ரிம 1 பில்லியனுக்கு மேற்பட்ட சொத்துக்களை அரசியல் கட்சிகள் கொண்டிருக்கக் கூடாது.**

- **அரசாங்கம் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் அரசியல் நிதியுதவிகளை வழங்கக் கூடாது**

**வாக்குறுதி 19: நீதித்துறை மற்றும் சட்டத்துறையின் மீதுள்ள நம்பகத்தன்மையை மீட்டெடுத்தல்**

நீதித்துறை மற்றும் சட்டத்துறை நிறுவனங்கள் தேசிய சம அளவுகோலிற்கு ஒரு முக்கியமான அம்சம் ஆகும்.மக்களின் நம்பகத்தன்மைக்கு உட்பட்ட இந்த இரு துறைகளும் ஒருமைப்பாட்டுடனும் சுதந்திரத்துடனும் செயல்பட வேண்டும். ஆனால், அம்னோ மற்றும் தேசிய முன்னணி மக்கள் மத்தியில் அந்த நம்பகத்தன்மையைக் கொஞ்சம் கொஞ்சமாக நசுக்கி விட்டது.

அரசியல் நோக்கமில்லாத, தகுதிப் பெற்ற, அனுபவமுள்ள நீதிபதிகளைத் தான் நம்பிக்கை கூட்டணி அரசாங்கம் நியமிக்கும். இந்த இரு நிறுவனங்களும் பிரதமரின் அதிகாரத்திற்கு உட்பட்டதாக இருக்காது.

நாடாளுமன்ற தேர்வுக் குழு தான் நீதிபதி நியமன ஆணையக் குழுவை தீர்மானிக்கும். இந்த முடிவை அரச ஆட்சியாளர்கள் ஏற்றுக் கொண்ட பின் நிறைவேற்றப்படும்.

ஷரியா நீதிமன்ற நீதிபதிகள் உட்பட மற்ற நீதிபதிகளுக்கான தகுந்த சம்பளம் மற்றும் ஊக்கத் தொகை வழங்கப்படுவது உறுதியளிக்கப்படும்.

அம்னோ மற்றும் தேசிய முன்னணியின் தலைமை நீதிபதியின் நியமனம் மற்றும் மேல்முறையீட்டு நீதிமன்றத் தலைவரின் நியமனம் தவறான முறையில் நடந்தது போல், இனியும் இதுபோன்று நடக்காமல் தடுத்து நிறுத்தி வைக்கப்படும்.

**வாக்குறுதி 20: மலேசிய ஆயுதப் படை மற்றும் அரச மலேசிய போலீஸ் படைக்கு மதிப்பளிக்க வேண்டும்**

நாட்டின் பாதுகாப்பிற்கும் குற்றச்செயல்களைக் களைவதற்கும் நவீன மற்றும் திறன் வாய்ந்த மலேசிய ஆயுதப் படை, அரச மலேசிய போலீஸ் படை ஆகியவை முக்கிய பங்களிப்பை வழங்குகின்றன. நாட்டை பாதுகாக்கும் இவ்விரு படைகளுக்கும் நம்பிக்கை கூட்டணி நிதியுதவி வழங்கும்.

அரச மலேசிய போலீஸ் படையையும்,அதில் பணியாற்றும் அடிமட்ட அதிகாரிகளின் வசதிகளை மேம்படுத்தவும் மானியங்கள் வழங்கப்படும். பயிற்சிகள் வழங்குவதற்கும் மானியங்கள் அதிகரிக்கப்படும்.

இவ்விரு படைகளுடன் ஆய்வுகள் மேற்கொண்டு கலந்துரையாடல் நடத்தி இப்படைகளுக்கு தேவையான உபகரணங்கள்,ஆயுதங்கள் மற்றும் தேவையான பயிற்சிகளை வழங்க நம்பிக்கை கூட்டணி அரசாங்கம் வழிவகை செய்யும்.

நம்பிக்கை கூட்டணி அரசாங்கத்தின் முதல் தவணையிலேயே காவல் துறைக்கு எதிரான குற்றச்சாட்டுகள், தவறான நடத்தை பற்றிய சுதந்திர ஆணையம் (IPCMC) அமைக்கப்படும். தடுப்புக் காவல் மரணங்கள் உட்பட அனைத்து விதமான குற்றச்சாட்டுகளும் நியாயமான முறையில் விசாரணை நடத்தப்படும்.

உள்நாட்டுப் பாதுகாப்பு, பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் வன்முறை குற்றங்களைக் களைய சிறப்பு போலீஸ் கிளை (Special Branch), சுத்திகரிக்கப்பட்டு, நவீனமயமாக்கப்பட வேண்டும். பயங்கரவாதத்தையும், தீவிரவாதத்தையும் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ள சிறப்பு போலீஸ் கிளைக்கு பொறுப்புகள் வழங்கப்படும்.

மலேசிய ஆயுதப் படை, அரச மலேசிய போலீஸ் படைகளிலிருந்து பணி ஓய்வுப் பெற்ற அதிகாரிகளின் நலனை மேம்படுத்தவும் தற்போதை வாழ்க்கை செலனங்களுக்கு ஏற்றார்போல் ஓய்வூதியம் வழங்கப்படும். 1970-

ஆம் ஆண்டுக்கு முன்பு மற்றும் 1970-ஆம் ஆண்டுக்குப் பிறகு ஓய்வுப் பெற்ற காவல்துறை அதிகாரிகளுக்கு ஓய்வூதியம் சீராக வழங்கப்படும்.

முன்னாள் மலேசிய ஆயுதப் படை, அரச மலேசிய போலீஸ் படை அதிகாரிகளின் இயக்கத்திற்கு ஆண்டுதோறும் முதல் கட்ட நிதியாக ரிம500,000 ஒவ்வொரு இயக்கத்திற்கும் நம்பிக்கை கூட்டணி அரசாங்கம் வழங்கும்.

**வாக்குறுதி 21: பொதுச் சேவை துறைகளை மேம்படுத்துதல்**

நாட்டின் கொள்கைகளுக்கு முதுகெலும்பாக பொதுச் சேவை துறைகள் விளங்குகின்றன. மக்களின் நலனை கருத்தில் கொண்டு அனைத்து நாடுகளிலும் பொதுச் சேவை துறைகளுக்கு மதிப்பளித்து நன்முறையில் வழிநடத்தி வருகின்றன. பொதுச் சேவை துறைகளில் எந்தவொரு மருட்டலும் இல்லாமலிருந்தால், அதன் பொறுப்புகள் சரிவர நடந்தேறும்.

பொதுச் சேவை துறை அதிகாரிகள் எந்தவொரு அரசியல் நோக்கமுமின்றி பொது மக்களின் நல்வாழ்விற்கு மட்டும் சேவைகள் செய்ய நம்பிக்கை கூட்டணி அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ளும். மேலும், தேசிய கொள்கைகளை அமல்படுத்தும் போது உள்ளூர் மற்றும் தேசிய ஆலோசகர்களைப் போல் பொதுச் சேவை துறை அதிகாரிகளின் தலையீடும் இருத்தல் அவசியம்.

நாட்டையும் மாநிலத்தையும் ஆளுவதற்கான அரசு அதிகாரிகளின் பங்களிப்பு மிக முக்கியமான ஒன்று என்பதால் திறமையான அதிகாரிகளைப் பொதுச் சேவை ஆணையம் அடையாளம் காண ஆணையிடப்படும். இவர்களுக்கு மேலும் பயிற்சிகளை வழங்கி பதவி உயர்வு வழங்கப்படும்.

அதிகாரிகளின் சேவைகளையும் அனுபங்களையும் கொண்டுதான் இப்பதவி உயர்வு வழங்கப்படும். இதன் வழி, பொதுச் சேவை துறைகளில் பணியாற்றும் அதிகாரிகளுக்கு சம ரீதியில் பதவி உயர்வும் சம்பள உயர்வும் கொடுக்கப்படும்.

**வாக்குறுதி 22: அனைத்து அரசு நிறுவனங்களும் (ஜி.எல்.சி) சர்வதேச தரத்திற்கு சமமாக்கப்பட வேண்டும்**

நாட்டின் வளர்ச்சிக்கும், மத்திய மற்றும் மாநில ரீதியில் பொருளாதாரத்தை மேம்படுத்த அனைத்து அரசு நிறுவனங்களும் (ஜி.எல்.சி) முக்கிய அங்கம் வகிக்கின்றது. சில ஜி.எல்.சி-கள் நன்றாக செயல்பட்டு வருகின்றன. குறிப்பாக, “ஜி20” குழுவில் சேர்க்கப்பட்ட நிறுவனங்கள் உயர் செயல்திறன் கொண்டதாகவுள்ளது.

ஆனால், 1எம்டிபி, பெல்டா போன்ற ஊழல்களால் ஜி20 நிறுவனங்களின் நற்பெயரும் களங்கப்பட்டது. இதுவரையிலும் தேசிய ஜி.எல்.சி மற்றும் மாநில ஜி.எல்.சி ஆகியவற்றின் மொத்த எண்ணிக்கையை அம்னோ மற்றும் தேசிய முன்னணி தலைவர்கள் அறிந்துக் கொள்ளாமலிருப்பது வெட்கக்கேடான ஒன்று.

நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கு பூமிப்புத்ராவின் சொத்துக்களை அதிகரிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள ஜி.எல்.சிக்கு உத்தரவிடப்படும். அதிகபட்சமான பூமிப்புத்ரா நிறுவன தலைவர்கள் சமபங்குகளை வாங்குவதன் மூலம் ஜி.எல்.சி நிறுவனத்தை உயர்த்த முயற்சிகளை நம்பிக்கை கூட்டணி அரசாங்கம் மேற்கொள்ளும்.

மத்திய மற்றும் மாநில அளவில் ஜி.எல்.சி-யின் சிறந்த நிர்வாக ஆளுமையின் வழி அதன் பங்களிப்பு அதிகரிக்கப்படும்.

தேசிய ஜி.எல்.சி நிறுவனங்கள் மற்றும் மாநில நிறுவனங்களின் இயக்குனர்களின் நியமனத்தில் அரசியல் நோக்கம் இல்லாத்தை நம்பிக்கை கூட்டணி அரசாங்கம் உறுதிப்படுத்தும்.

அனைத்து ஜி.எல்.சி நிறுவனங்களும் பூமிப்புத்ரா விற்பனையாளர்களின் சிறப்பு வளர்ச்சித் திட்டம் உருவாக்கப்படும். நாட்டின் ஜி.எல்.சி-களின் அடைவுநிலை குறித்து அரசாங்க முதலீட்டுப் பிரிவு அமைச்சு வழங்கும் அறிக்கையைப் பெறுவதற்கு நாடாளுமன்ற சிறப்புச் செயற்குழு அமைக்கப்படும்.

**வாக்குறுதி 23: அரசாங்க நிதி வருவாயின் கையிருப்புக்குக் கூடுமான அளவு அதிக லாப ஈவுக்கு உறுதி செய்யும்**

பல்வேறு திட்டங்களுக்கும் ஒப்பந்தங்களுக்கும் வருடத்திற்கு ரிம100 பில்லியனுக்கு மேல் மலேசிய அரசாங்கம் செலவழிக்கப்படும் தொகை மிகப் பெரியது. இவ்வளவு பெரிய தொகை வீணாமல் போவதை உறுதி செய்வது மிகவும் அவசியமாகும். அரசாங்கம் மக்களின் பணத்தை வைத்து அதனை விவேகத்துடன் செலவழிப்பதை உறுதிப்படுத்துவது அரசாங்கத்தின் கடமையாகும்.

அவ்வகையில் மக்களின் பணத்தை நல்ல வழியில் செலவிடுவதற்கு நம்பிக்கை கூட்டணி அரசாங்கம், பெரிய திட்டங்களில் திறந்த ஒப்பந்த முறையைக் கையாளும்.

நம்பிக்கை கூட்டணி ஆட்சியின் கீழ், வெளிநாடுகளுடன் இருக்கும் உள்கட்டமைப்புத் திட்டங்களை நிதி அமைச்சு மறுபரீசிலனை செய்ய ஆவண செய்வதோடு, இதில் கிடைக்கப்பெறும் லாப ஈவுகள் பழங்குடியினருக்கும் மலேசியர்களுக்கும் நியாயமாக பகிர்ந்தளிக்கப்படும்.

மேலும், பொது மற்றும் தனியார் ஒத்துழைப்பு பிரிவின் கீழ் இயங்கும் லாப ஈவு மற்றும் அரசாங்க ஒப்பந்தங்கள் குறித்து நம்பிக்கை கூட்டணி அரசாங்கம் மறுஆய்வை மேற்கொள்ளும்.

தற்போது, பிரதமர் துறையின் கீழ் செயல்பட்டு வரும் பொது மற்றும் தனியார் ஒத்துழைப்பு பிரிவானது நிதி அமைச்சிற்கு மாற்றப்படும்.

குத்தகைகளில் அரசியல் ஈடுபாட்டை ஒழிக், இது குறித்த விவரங்கள் தகவல் தொழில்நுட்பம் மற்றும் வலைத்தளங்களில் பதிவுச் செய்ய வேண்டும். இதன் மூலம், குத்தகைகள் குறித்த தகவல்களை பொது மக்களும் சிவில் சமூகத்தினரும் நேரடியாக பெற்றுக் கொள்ள முடியும்.

பூமிப்புத்ரா சிறிய மற்றும் நடுத்தர தொழில் துறையினர் உட்பட அரசாங்கத்தின் குத்தகைகளை வலைத்தளங்களில் கண்டு, அவர்களுக்கு ஏற்றார் போல் இருக்கும் குத்தகைகளைப் பயன்படுத்திக் கொள்ள ஒரு வாய்ப்பாக அமையும்.

**வாக்குறுதி 24: உண்மையான மத்திய கூட்டாட்சி முறையைப் புதுப்பித்தல்**

மலேசியா ஒரு கூட்டாட்சி முறையை அமல்படுத்தும் நாடாகும். ஆனால், இந்த ஆட்சி முறை அம்னோ மற்றும் தேசிய முன்னணி ஆட்சியில் சீர்குலைந்துவிட்டது.

நாட்டில் உண்மையான கூட்டாட்சி முறையை நம்பிக்கை கூட்டணி புதுப்பிக்கும். சபா மற்றும் சரவாக் மாநிலத்திற்கும் சிறப்பு வாக்குறுதிகளை நாங்கள் வழங்கியதோடு, எல்லா மாநிலங்களின் கூட்டாட்சி முறையைப் புதுப்பிக்கப்படும்.

மத்திய அரசியலமைப்பின் ஒன்பதாவது அட்டவணையின் படி, சம உரிமைகளும் பொறுப்புகளும் மதிக்கப்படுவதோடு, ஒன்பதாவது அட்டவணையில் கூடுதல் மாற்றங்கள் செய்யப்படும்.

கூடுதலாக வருமான வரி வருவாய் செலுத்துபவர்களுக்கு வரியிலிருந்து 10 சதவிகிதம் அவர்களுக்கே திரும்ப செலுத்தப்படும்.

எங்களின் ஆட்சியில் முதல் 3 வருடத்திற்கு, ஏழ்மையான 5 மாநிலங்களான சபா, சரவாக், கிளாந்தன், திரெங்கானு மற்றும் பெர்லிஸ் மாநிலங்களிற்கு செலவின வளர்ச்சியில் 50 சதவீதம் ஒதுக்கப்படும்.

## வாக்குறுதி 25: உள்ளூர் அதிகாரிகளின் பங்களிப்பு மற்றும் அதிகாரம் பலப்படுத்தப்படும்

ஊராட்சி மன்றங்கள் உட்பட உள்ளூர் அதிகாரிகள் (பிபிதி) மக்களுக்கு நெருக்கமான அதிகாரிகளாவர். உள்ளூர் அதிகாரிகளின் (பிபிதி) பங்களிப்பு மேம்படுத்தப்பட்டால் மக்களுக்கான சேவைகளும் சிறப்பானவையாக அமையும்.

நாட்டிலிருக்கும் அனைத்து உள்ளூர் அதிகாரிகளின் சர்வதேச சேவைகளுக்கு ஒப்பிடும் வகையில் தங்கள் பொறுப்புகளை நம்பிக்கை கூட்டணி அரசாங்கம் உறுதி செய்யும்.

உள்ளூர் ஜனநாயகத்தை வலுப்படுத்த பக்காத்தான் ஹராப்பான் கடமைப்பட்டுள்ளது. உள்ளூர் அரசாங்க சட்டம் 1976 மாற்றப்பட்டு, உள்ளூர் மக்களின் பிரச்சனைகளைக் களைய அதிகாரிகளின் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படும்.

## வாக்குறுதி 26: உலகளாவிய நிலையில் மனித உரிமைக்கு முக்கியத்துவம் வழங்கும் நாடாக மலேசியா உருவெடுக்கும்

மலேசிய மனித உரிமை ஆணையம் (சுஹாகாம்) நாட்டில் மாரியாதைக்குரிய அதிகாரமிக்க ஒரு ஆணையமாக நம்பிக்கை கூட்டணி அரசாங்கம் உருவாக்கும். சுஹாகாமின் அறிக்கைகள் தொடர்பான கருத்துகள் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படும்.

சுஹாகாம் ஆணையாளர்களின் நியமனம் நாடாளுமன்ற செயற்குழுவால் தீர்மானிக்கப்படும்.

தேசிய மனித உரிமை திட்டம் சீர்திருத்தப்பட்டு முழுமையாக அமல்படுத்தப்படும்.உலகமய தனிம மதிப்பீட்டில் (Universal Periodic Review) மலேசியா சிறந்த இடத்தை பிடிக்க வேண்டும் என்பதே எங்களின் உயரிய நோக்கமாகும்.

சுஹாகாம் மற்றும் அது சார்ந்த இயக்கங்கள் வழிநடத்தும் மனித உரிமை நடவடிக்கைகளுக்கான மானியம் அதிகரிக்கப்படும். அரசியல் மற்றும் சிவில் உரிமைகள் மீதான தேசிய மாநாடு உட்பட ஒப்புக் கொள்ளாத தேசிய மாநாடுகளை அமல்படுத்த வழிவகை செய்யப்படும்.

## வாக்குறுதி 27: அநியாயமான சட்டங்களை அழித்தல்

நமது நாட்டின் நீதுத் துறையை அம்னோ மற்றும் தேசிய முன்னணி தலைவர்கள் தங்களின் அரசியல் லாபத்திற்காக தவறான முறையில் கையாளப்படுகின்றது. நாடு சுதந்திரம் அடைந்தப் பிறகும் எந்த மாற்றங்களுமின்றி பிரிட்டிஷ் ஆட்சி காலத்தின் போது அமல்படுத்தப்பட்ட சட்டங்கள் இன்னும் பயன்படுத்தப்படுகின்றன.

**கீழ்கண்ட சட்டங்களை நம்பிக்கை கூட்டணி அரசாங்கம் அழிக்கும்:**

- **தேச நிந்தனை சட்டம் 1948**
- **குற்றத் தடுப்புச் சட்டம் 1959**
- **பல்கலைக்கழங்கள் மற்றும் பல்கலைக்கழக கல்லூரிகள் சட்டம் 1971**
- **அச்சிடுதல் மற்றும் வெளியீடு சட்டம் 1984**
- **தேசிய பாதுகாப்பு மன்ற சட்டம் 2016**
- **அனைத்து சட்டங்களிலிருக்கும் தூக்குத் தண்டனை சட்டம்**

**கீழ்கண்ட சட்டங்களுக்கு ஒதுக்கப்படும் அநியாயத்தை நம்பிக்கை கூட்டணி அரசாங்கம் அழிக்கும்:**

- **குற்றவியல் நடைமுறை சட்டம் 1997 குறிப்பாக அமைதிப் பேரணி விவாகரத்திலும் ஜனநாயகத்திற்கு தீங்கு விளைவிக்கும் நடவடிக்கைகள்**
- **தகவல் தொடர்பு மற்றும் பல்லூடக சட்டம் 1998**
- **பாதுகாப்பு குற்றங்கள் சட்டம் (சிறப்பு நடவடிக்கை) 2012 (சொஸ்மா)**
- **அமைதிப் பேரணி சட்டம் 2012**
- **பயங்கரவாத தடுப்புச் சட்டம் 2015 (போடா)**

மேலும், நம்பிக்கை கூட்டணி அரசாங்கத்தின் ஆட்சியில் ஊடக சுதந்திரம் வழங்குப்படும். மலேசிய வானொலி தொலைக்காட்சி (RTM) மற்றும் தேசிய செய்தி நிறுவனம் (BERNAMA) போன்ற ஊடகங்களின் சுதந்திரத்தையும் தொழில்முறையும் விரிவாக்கப்படுவதை எங்கள் ஆட்சியில் உறுதி செய்யப்படும்.

அதோடு நம்பிக்கை கூட்டணி அரசாங்கம் ஊடக மன்றம் ஒன்றை அமைக்கும். இதன் வழி ஊடகத்தின் மீதுள்ள பொது மக்களின் புகார்களை நிவர்த்தி செய்ய முடியும்.

## வாக்குறுதி 28: அக்கிரமங்களின் பிடியில் சிக்கியிருக்கும் இளைஞர்களை ஆக்கப்பூர்வமாகவும் சுதந்திரமாகவும் உருவாக்குதல்

அம்னோ மற்றும் தேசிய முன்னணி ஆட்சி எந்த தயக்குமுமின்றி தங்களின் அரசியல் நெருக்கடிக்காக பல்வேறு திட்டங்களை தவறாக கையாண்டு இளைஞர்களுக்கு சுமையை ஏற்படுத்தியுள்ளது.

இதுவரைக்கும் அம்னோவின் மலிவான அரசியலை நடத்திய அரச தேசிய புள்ளியல் (BIRO TATA NEGARA), நம்பிக்கை கூட்டணி அரசாங்கத்தல் களை க்கப்படும்.

உண்மையிலேயே தேசிய சேவை பயிற்சித் திட்டத்தின் அமலாக்கம் தோல்வி கண்டதோடு அதன் நோக்கத்தை முழுமைப் பெறவில்லை; முழுமையான பண விரையமாகும். எனவே தேசிய சேவை பயிற்சித் திட்டம் நிறுத்தப்படும்.

கல்விமான்களின் சுதந்திரத்தை முடக்கும் பல்கலைக்கழங்கள் மற்றும் பல்கலைக்கழக கல்லூரிகள் சட்டம் 1971 ஒழிக்கப்படும்.

**வாக்குறுதி 29: வரவு செலவுத் திட்டத்தின் முறையும் வெளிப்படைத்தன்மையும் மேம்படுத்தப்படும்**

நாட்டின் நிர்வாகத்தை வழிநடத்த அரசாங்கம் ஒரு சிறந்த வருடாந்திர வரவு செலவுத் திட்டத்தை கொண்டிருக்க வேண்டும். ஆனால், டத்தோ ஸ்ரீ நஜீப் துன் ரசாக்கின் கீழுள்ள அம்னோ மற்றும் தேசிய முன்னணி அரசாங்கமும் அவரின் வரவு செலவுத் திட்ட உரையில் வெளிப்படைத்தன்மை குறைந்து காணப்படும்.

மாறாக, நாட்டின் உண்மையான பொருளாதாரத்தை பொது மக்களுக்கு தெரியப்படுத்தாமலிருக்க பல்வேறு நிறுவனங்கள் அமைக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக, மிக பெரிய திட்டங்களான எம்ஆர்டி, எல்ஆர்டி நீட்டிப்பு, எல்ஆர்டி 3, விரைவு வேக ரயில் மற்றும் பான் போர்னியோ நெடுஞ்சாலை ஆகிய நிறுவனங்களின் செலவுகள் மறைக்கப்பட்டன. இதுபோன்ற நிறுவனங்கள் கடன் வாங்கும் போது அவர்களின் கடன்களுக்கு அரசாங்கம் உத்தரவாதம் அளிக்கும்.

அதை தவிர்த்து, பள்ளிகள் மற்றும் போலீஸ் குடியிருப்பு கட்டுமானப் பணிகளை அரசு சார்ந்த நிறுவனங்களுக்கு வழங்கப்படும் செலவினங்களை அம்னோ மற்றும் தேசிய முன்னணி மாற்றிக் கொள்கிறது. வரவு செலவுத் திட்ட உரையில் இந்நிறுவனங்களின் மொத்த கடன் தொகைகளை மக்களுக்கு வெளிப்படையாக தெரியவிக்காமல் மூடி மறைக்கப்படுகிறது.

இவை தான் நமது நாட்டை திவாலாக்கும் வெடி குண்டுகளாக கருதப்படுகின்றது. அவற்றை விரைவில் சீர்படுத்த வேண்டும்.

நம்பிக்கை கூட்டணி அரசாங்கம் நாட்டின் நிதி விவகாரங்களில் பொறுப்புணர்வோடும் வெளிப்படைத்தன்மையோடும் செயல்படுவது உறுதி.

நாட்டின் சீரான நிதி நிர்வாகத்தை உறுதிப்படுத்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் மதிப்பீட்டிற்கு நிதி அமைச்சு அறிக்கை வெளியிட நம்பிக்கை கூட்டணி அரசாங்கம் ஆவணம் செய்யும்.

நாட்டின் சீரான நிதி நிர்வாகத் செலவினத்திற்காக இயல்பான கணக்கியல் முறை (accrual accounting) அமல்படுத்தப்படும்.

அம்னோ மற்றும் தேசிய முன்னணி ஆட்சியில் மறைக்கட்ட உண்மைகளை நம்பிக்கை கூட்டணி அரசாங்கம் முதல் ஆட்சிக்கால ஆண்டிலேயே விசாரணை நடத்தி நாட்டின் உண்மையான பொருளாதாரத்தை வெளிச்சம் மக்களுக்கு போட்டுக் காட்டும். மேலும், நாட்டின் பொருளாதார அறிக்கையின் மீது நம்பகத்தன்மையை உருவாக்க அந்த அறிக்கையைச் சரிப்பார்க்க தேசிய புள்ளியியல் துறைக்கு ஆலோசனை வழங்க ஒரு நிபுணர் அமைக்கப்படும்.

## படிநிலை 3: நியாயமான பொதுவான பொருளாதார வளர்ச்சிக்கு வித்திடல்

மலேசியாவின் பொருளாதார வளர்ச்சி ஒரு காலத்தில் 8-9% வரையிலான வளர்ச்சியை நோக்கியிருந்தது. இன்று படிபடியாக குறைந்து, பொருளாதார இடைவெளிக்கு வித்திட்டு, பணக்காரர்கள் மேலும் பணக்காரர்களாக உருவாக சாதாரண மக்களின் நிலை இன்னும் ஏழ்மையிலே இருப்பது நாட்டின் வளர்ச்சிக்கு இடையுறாய் அமைந்துள்ளது. 20% மக்கள் மட்டுமே நல்ல சுகபோக வாழ்க்கை வாழ்கிறார்கள், மற்றவர் எல்லாம் குறிப்பாக பி40 பிரிவினர்கள் தொடர்ந்து வறுமை நிலையிலே வாழ்க்கை சூழலை நகர்த்தி கொண்டிருக்கின்றனர்.

நாடு வளர்ச்சியடைந்திருந்தாலும் பயனடைபவர்கள் ஒரு பிரிவினர் மட்டுமே. மற்றவர் எல்லாம் குறிப்பாக ஒரு சிலர் அரசியல்வாதிகள் அளவுக்கு மீறிய செல்வந்தர்களாக வலம் வருகிறார்கள்.

உயர்வு தாழ்வு மிகுந்த பொருளாதார பகிர்ந்தளிப்பு இடைவெளியினால் இனங்களுக்கிடையிலான ஏற்றத்தாழ்வில் அமைதியின்மை நிலவும். ஆகவே, நாட்டின் பொருளாதார வளர்ச்சி முறையான வளர்ச்சிப் பாதையில் நோக்கி உயர சிறந்த வெளிப்படைத்தன்மை மிக்க நிர்வாகத்தை நிறுவ வேண்டும், அடுத்த தலைமுறைகளின் எதிர்காலத்தை உணர்ந்து.

நாட்டின் பொருளாதார நிலைத்தன்மைக்கு நம்பிக்கை கூட்டணி அரசு சீரமைப்பை மேற்கொள்வதுடன், அனைத்து தரப்பு மக்களும் பொருளாதார வளர்ச்சியில் பயனடையும் வகையில் நிர்வாகத்தை அமைப்போம். மிகச்சிறந்த பொருளாதார வளர்ச்சிக்கு வித்திடும் நோக்கத்தில் மக்களின் செல்வத்தை மக்களுக்கே பகிந்தளிக்கும் முறையை பின்பற்றுவோம். மாறாக தனிநபருக்கோ அல்லது குடும்ப உறுப்பினருக்கு மக்களின் செல்வத்தை பகிர்ந்தளிக்கும் முறையை நிச்சயமாக ஒழிப்போம்.

மக்களிடம் பகிர்ந்தளிக்கப்படும் செல்வம் உள்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுப்பதுடன், புதிய வேலை வாய்ப்புகள் அதிகம் உருவாக்கம் காணப்படுவதுடன், முதலீட்டார்களையும் கவர்ந்திழுக்கும். இதுவே சிறந்த பொருளாதார கொள்கையாக விளங்குவதுடன், நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் அனைவருக்கும் பயனளிக்கும்.

அனைவருக்கும் நியாயமான சமத்துவமான பொருளாதார வளர்ச்சியே மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தும் மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதே நம்பிக்கை கூட்டணியின் முதன்மை கொள்கைத்திட்டம். பொருளாதார பகிர்ந்தளிப்பின் மூலமே அனைவருக்கும் தரமான கல்வி, சிறப்பான பயிற்சித்திட்டங்கள், பெருமை சேர்க்கும் வேலை வாய்ப்புகள், சிறப்பான வீடமைப்பு திட்டங்கள் மற்றும் நியாயமான சுகாதார திட்டங்களை மக்களுக்கு வழங்கிட முடியும் என்பதில் நம்பிக்கை கொள்கிறோம்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சி என்றுமே புதிய பரினாமத்தின் வளர்ச்சிக்கு ஏற்ப சீரமைப்பதுடன், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு முதுகெலும்பாக விளங்கும் சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோர்களுக்கு சிறப்பு ஊக்குவிப்புத் திட்டங்கள் அமைத்துக் கொடுக்கப்படும். இதன் வழி உள்நாட்டு சிறு மற்றும் நடுத்தர தொழில்முனைவோர்களின் மத்தியில் நல்லதொரு ஆரோக்கியமான போட்டியும், உற்பத்தி தயாரிப்பிலும் வளர்ச்சிகள் காணப்படும்.

**வாக்குறுதி 30: பூமிபுத்ரா மற்றும் மக்களின் பொருளாதாரத்தை உயர்த்துதல்.**

சிரான பொருளாதார வளர்ச்சி என்றுமே நிலைக்க நம்பிக்கை கூட்டணி உறுதிப்படுத்துவதுடன், பூமிபுத்ரா மற்றும் மலேசிய மக்கள் அனைவரும் சமரீதியான பொருளாதார நன்மையடைய வழிவகுப்போம். மேலும், மலேசியாவை என்றுமே பொருளாதாரக் கொள்கையிலும், முதலீட்டு கொள்கையிலும் திறந்த ஒரு நிலைப்பாட்டை கையாள்வதுடன், இதன் வழி பன்னாட்டு நிறுவங்கள் நாட்டில் முதலீடுகளை மேற்கொள்வதுடன், மலேசியர்களையும் பிற நாடுகளில் முதலீடுகளை மேற்கொள்ள ஊக்குவிப்போம்.

உள்நாட்டில் 65% வேலை வாய்ப்புகளுக்கு வழிவகுக்கும் உள்நாட்டு சிறு மற்றும் நடுத்தர தொழிற்துறைகளுக்கு மாநிலங்களவை ஆட்சியில் முன்னுரிமைகள் வழங்கப்படும். மேலும், சிறு-நடுத்தர உள்நாட்டு தொழில் துறைகள் ஆசியான் அளவிலும், இன்றைய 4.0 தொழில்துறைப் புரட்சிக்கும் உள்நாட்டுத் தொழில்முனைவோர்களை ஊக்குவிப்போம்.

பூமிபுத்ரா மற்றும் தகுதி வாய்ந்த பிற தொழில்முனைவோர்களின் வர்த்தகத்திற்கு நம்பிக்கை கூட்டணி அரசு தொடர்ந்து பேராதரவை வழங்கி வரும். குறிப்பாக பொருளாதார ரீதியில் அல்லது நவின தொழில்நுட்ப வகையிலும். தொழில்முனைவோர்களின் அனைத்து வர்த்தக நிலைத்தன்மைக்கு அரசின் சார்பில் பாதுகாப்பும் வழங்கப்படும்.

மலாய் மற்றும் பூமிபுத்ரா பிரிவினரின் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியத்துவம் வழங்கப்படுவதுடன், உலகளாவிய நிலையில் பொருளாதாரத் துறையில் சாதனைப் படைக்கும் நோக்கத்தில். மலாய் மற்றும் பூமிபுத்ராக்களின் பொருளாதார உயர்வு அடைவுநிலைகளை திறந்த வெளியில் அறிவிப்பதுடன், நாடாளுமன்றத்திலும் தாக்கல் செய்யப்படும்

ஒவ்வொரு முறையும் நிதி அமைச்சரின் வரவு செலவு திட்டத்தினை தாக்கல் செய்யும் ஒவ்வொரு ஆண்டும்.

நம்பிக்கை கூட்டணி அரசு மலாய் சமூகத்தின் உரிமைகளுக்கு பங்களிக்கும் அரசு சார்பற்ற இயக்கங்களுடன் இணைந்து பணியாற்றும் என்பதனை வலியுறுத்த விரும்புகிறோம். இதன் வழி அனைவருக்கு ஒரு சிறந்த பொருளாதாரக் கொள்கையினை வழங்குவதுடன், 2020 தூரநோக்கு வளர்ச்சித்

திட்டத்தில் அனைத்து தரப்பு மக்களும் சிறந்து விளங்க வேண்டும் என்பதே நம்பிக்கை கூட்டணியின் திட்டம்.

**வாக்குறுதி 31: முதலீட்டை வளப்படுத்தல் மற்றும் வணிக, வர்த்தக செயல்முறைகளை எளிமைப்படுத்தல்.**

ஆசியான், பன்னாட்டு மற்றும் பிராந்திய பொருளாதார பங்களித்துவத்தில் உள்ளூர் மற்றும் பூமிபுத்ரா தொழில்முனைவோர் தொடர்ந்து பங்களித்துவம் பெற வியூகத்துடன் நாட்டின் பொருளாதாரத்துறை கொள்கை வகுக்கப்படும். மேற்கத்திய நாடுகளுடனான பொருளாதாரக் கூட்டமைப்புக்கான இருதரப்பு பேச்சுவார்த்தைகள் வெற்றிக்கரமாக செயல்படுத்தப்படும் தொழில்முனைவோர்களின் வணிக மற்றும் வர்த்தக வளர்ச்சி தகுதிகளின் அடிப்படையில்.

மேற்கொள்ளப்பட்ட அனைத்து மெகா வளர்ச்சித்திட்டங்களும் தொடர்வதுடன், இத்திட்டங்களில் கூடுமானவரை ஊழல் இல்லாது கவனிக்கப்படும். சீனா மற்றும் பிற ஆசியா நாடுகளின் நேரடி முதலீட்டுத் திட்டங்களுக்கு வரவேற்பு அளிக்கப்படும். சீனாவின் அனைத்து மெகா திட்டங்களும் சிறந்த திட்டமாக உறுதிப்படுத்துவதுடன், அனைத்து தரப்பினரும் பயன்டையும் வகையில் அமைந்திருக்கும் என்பதனை

உறுதிப்படுத்துவோம். வளர்ச்சித்திட்டம் என்றப்பெயரில் நாட்டின் கடனை அடைக்கும் திட்டங்களாக அமைந்திருக்குமே தவிர, மாறாக கடன்களை கூட்ட அல்ல.

வர்த்தக சம்மேளனம் மற்றும் அதன் இயக்கங்கள் நேரடியாக அத்துறைகள் சார்ந்த அமைச்சரவை மற்றும் அரச நிறுவனங்களை தொடர்புக்கொள்ள எளிமையான தொடர்புமுறை ஏற்படுத்த வழிவகை செய்யப்படும். மலேசிய உற்பத்தித்திறன் நிறுவனத்திற்கு நிதியும் அதிகாரமும் வழங்கப்படும், உற்பத்தித் துறையில் ஒரு ஒழுங்குமுறை கட்டமைப்பும், தேவையற்ற உற்பத்திகளை கட்டுப்படுத்தவும். மேலும், அதிகமான வேலை வாய்ப்புகளை உருவாக்கி விடவும் முயற்சிகளை மேற்கொள்வோம்.

அவர்களின் திறனை மென்மேலும் வலிமைப்படுத்த மற்றும் திறன் மதிப்பீட்டை அதிகரிக்கவும் வாய்ப்புகள் வழங்கப்படும். இது சார்ந்து ஆய்வுகளை மேற்கொண்டு, தேவையற்ற தேசிய முன்னணி அரசின் காலத்தில் நியாயமற்ற முறையில் அமலுக்கு கொண்டுவரப்பட்ட நடைமுறைகளை அகற்றவும் வழிவகுப்போம்.

நம்பிக்கை கூட்டணி அரசாங்கத்தில் அனைவருக்கும் நியாயமான பொருளாதாரக் கொள்கை ஒன்று வகுக்கப்படும். அவ்வகையில் இப்புதிய கொள்கையின் வழி பொருளாதார பகிர்ந்தளிப்பு, பொருளாதார ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சித்திட்டத்துடன், அறிவுசார் சொத்து பாதுகாப்பை வலிமைப்படுத்தி சீரான முதலீடுகளாக வளப்படுத்த.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வெளிநாட்டு முதலீடுகள் மட்டுமே பிரதானமாக இல்லாமல், நாட்டின் உற்பத்தி வளர்ச்சி உயர்விலும் இருப்பதை நம்பிக்கை கூட்டணி முழுமையாக நம்புகிறது. நஜீப் தலைமைத்துவத்தில் முழுமையான உற்பத்தி துறை வளர்ச்சியே 1.8% குறைந்துள்ளது, மாறாக ஹங்காங், சிங்கப்பூர், கொரியா போன்ற நாடுகள் உற்பத்தி வளர்ச்சியில் 2.2% பதிவுகளை செய்துள்ளன.

தேசிய முன்னணி அரசின் பொருளாதார கொள்கைக்கு மாற்றாக நம்பிக்கை கூட்டணி நாட்டின் உற்பத்தி பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்ப கல்வித்துறை, தனித்திறன் பயிற்சி, ஆக்கத்திறன் ஊக்குவிப்பு, வணிக ரீதியிலான அறிவுசார் சொத்துக்களின் பகிர்ந்தளிப்பு, நவீன தொழில்நுட்ப பயன்பாடுகள், இணைய புரட்சிக்கு நிகரான பயனீட்டு முறை வரையிலான சீரமைப்பை மேற்கொள்ளும்.

பிராந்திய மற்றும் உலகளாவிய நிலையில் உள்ளூர் தொழில்முனைவர்களின் வர்த்தக வழிகாட்டுதலுக்கும், விரிவாக்கத்திற்கும் நாடுகளுக்கிடையிலான ராஜதந்திர உறவை மென்மேலும் வளர்த்து எடுக்க நம்பிக்கை கூட்டணி அரசு உறுதி செய்யும்.

நவீன தொழில்நுட்பங்கள் தேவைப்படும் தொழில் துறைகளுக்கு முழுமையான ஆதரவு அரசின் சார்பில் வழங்கப்படுவதுடன், அதற்கு ஏற்ப நாட்டின் தொழில்துறை சட்டத்திருத்தமும் மாற்றியமைக்கப்படும்.

பெண்களின் பங்களிப்பும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதனை கருத்தில் கொண்டு, குழந்தைகள் உள்ள தாய்மார்களின் வேலை பணி நேரத்தை இணக்கமாக்குதல். பெண்களின் நலனை பேணி காக்கும் நிறுவனங்களுக்கு ஊக்கத்தொகை அளித்தல் போன்றவைகள் உள்ளடங்கும்.

மனிதவள மூலதன தோல்விக்கு மிக முக்கியமானதாக நம்பிக்கை கூட்டணி கருதுவது ஆங்கில மொழி பலவீனமே. அம்னோ தேசிய முன்னணியின் பின்தங்கிய கல்வித்திட்டத்தில் நமது மாணவர்கள் சர்வதேச மாணவ மதிப்பீட்டு திட்டத்தில் வியட்னாமை விட பின் தள்ளப்பட்டுள்ளோம். ஆகவே இதனை உடனடியாக நிவர்த்தி செய்யும் நோக்கத்தில் கல்வி திட்டத்திம் மாபெரும் சீரமைப்பை அமல்படுத்தி, ஆசிரியப்பெருமக்களின் அத்தியாவசிய பணிகளை குறைத்து முழுநேர மாணவர்களுக்கு போதிக்கும் நடைமுறையை பின்பற்றுவோம். இதன் வழி நாட்டிற்கு தரமான அதிக முதலீட்டுக்களை கவரும் சாத்தியங்கள் இருப்பதாக நம்பிக்கை கூட்டணி முழுமையாக நம்புகிறது.

**வாக்குறுதி 32: மக்களுக்கும் தொழில் முனைவர்களுக்கும் வர்த்தக வரியை சாதகமான அறிமுகப்படுத்தல்.**

மக்களின் நல்வழி திட்டங்களுக்கும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் வழிவகுக்கும் வரிகளை மக்களின் சுமைகளை அறிந்து நல்லதொரு இணக்கமான அல்லது சாதகமான வரி திட்டங்களை அமல்படுத்தும்.

தவறான நிதி கொள்கை அமலாக்கத்தால் மக்களிடத்தில் பல்வேறு வரிகளை சுமத்தியிருக்கும் அம்னோ தேசிய முன்னணியின் தேவையற்ற வரிகளை நம்பிக்கை கூட்டணி ஆட்சியில் அகற்றுவோம்.

மற்றப்பிற ஆசியான் நாடுகளுக்கு நிகரான பன்னாட்டு மற்றும் பிற வரிகளை முழுமையாக மறுசீரமைத்து அமலாக்குதலை ஆய்வுக்குட்படுத்தும். மக்களின் வரிப்பணமே மக்களுக்கே என கொள்கை முழக்கத்துடன் நம்பிக்கை கூட்டணி ஆட்சியில் விளங்கும்.

நிறுவனம், சிறுத்தொழில் நிறுவனங்கள் மற்றும் பகுதிநேர பணியாளர்களின் வரி விதிப்பை மறு ஆய்வு செய்து அவர்களின் சுமைகளை குறைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். உள்நாட்டு பொருளாதார வளர்ச்சிக்கு 40% பங்களிப்பை அளிக்கும் 97% உள்ளூர் சிறுதொழில் நிறுவனங்களின் வர்த்தகத்தின் நலனை கருதி அதிமுக்கியத்துவம் அவர்களுக்கு வழங்கப்படும். மலேசியர்களின் வருமானத்தை உயர்த்த பல நல்திட்டங்களை அமலாக்கும் முயற்சிகளில் ஒன்றாக ஒன்லைன் தொலைத்தொடர்பு வணிக சேவைகளையும் நிறுவும்.

40% எம்40 பிரிவினர்களின் தனிநபர் வருமான வரியின் சுமையை குறைக்கும் முயற்சிகளை மேற்கொள்வோம். மேலும், பி40 கீழ் உள்ளவர்களின் தனிநபர் வருமான வரியை செலுத்த தேவையில்லை.

**வாக்குறுதி 33 : அனைவருக்கும் சமத்துவ வேலை வாய்ப்பினை உருவாக்கும் ஆணையத்தை அமைப்போம்.**

புதிய மாதிரி பொருளாதார கொள்கை 2010 ஆம் ஆண்டில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளில் ஒன்றுதான் இந்த சமத்துவ வேலை வாய்ப்புக்கான ஆணையம். இந்த ஆணையத்தின் நோக்கமானது அரசு துறைகளிலும் மற்றும் தனியார் துறைகளிலும் இனப்பாகுபாடுகள் இல்லாமல், சமத்துவமான பணியாளர் சேர்க்கை முறை அமலாக்கத்தை உறுதிப்படுத்த. ஆயினும் இவ்வாணையத்தை அமைத்தவர்களிடமே முரணான கருத்துகள் நிலவியதால் கைவிடப்பட்டது.

பொருளாதார துறை சார்ந்த பணியமர்த்தங்களில் இனரீதியிலான ஆள் சேர்க்கை முறை தொடர்ந்து கடைபிடிக்கப்படுவதை பலரும் ஆய்வு செய்து அறிக்கையும் வெளியிட்டுள்ளனர். மேலும், தனியார் துறைகளில் இந்த இனரீதியிலான ஒடுக்குமுறை அதிகம் இருப்பதாக பல குற்றச்சாட்டுகளும் எழுந்துள்ளன.

ஆகவே பொது சேவை மற்றும் தனியார் துறை சேவைகளில் இனியும் இனரீதியிலான பணியமர்த்தும் முறையை முற்றாக துடைத்தொழிக்க நம்பிக்கை கூட்டணியின் சார்பில் அனைவருக்கும் சமத்துவமான வேலை வாய்ப்புக்கு வழிவகுக்கும் சிறப்பு ஆணையத்தை அமைத்து நிறுவி நடைமுறைப்படுத்துவோம். இதனை நாட்டில் தலைச்சிறந்த சான்றோர் மக்கள் தலைமையில் நிறுவப்படும் என்பதனையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

**வாக்குறுதி 34: மக்களின் வருமானத்தை கூட்டுதல்.**

பொது சேவை அல்லது தனியார் சேவை ஆகிய துறைகளில் சமத்துவம் இல்லாத வருமானம் நிகழ்ந்து வருவதை மறுத்திடல் இயலாது. சேமிக்கும் மக்களின் தொகை மிக மிக குறைவே. சமீபத்திய பெங்க் நெகாரா வெளியிட்ட (2015) ஆய்வில் மலேசியர்களில் 4 பேரில் 3 பேர் அவசர நேர தேவைக்கு ரிம1000 வெள்ளி திரட்டுவதில் தோல்வியடைந்துள்ளனர். மேலும், மொத்த மக்கள் தொகையில் 6% மட்டுமே குறைந்தது 6 மாதங்கள் வருமானம் இல்லாமல் வாழும் நிலையில் உள்ளனர். மற்றவர்களின் நிலை படுமோசமாக கருதப்படுகிறது. அம்னோ தேசிய முன்னணி மக்களின் பொருளாதார மர்றும் வருமான தேவையை உயர்த்த படுதோல்வி கண்டுள்ளது.

அனைத்து தரப்பு மக்களுக்கும் உதவும் நோக்கத்தில் அதிகமான வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தி கொடுத்தலுடன், தொழிலாளர் வர்க்கம் எந்த பாதிப்புக்கும் ஆளாகாத நலத்திட்டத்தினை நம்பிக்கை கூட்டணி வகுக்கும்.

வஞ்சிக்கப்பட்ட சபா மற்றும் சரவா மாநில தொழிலாளர்களின் நன்மையை உணர்ந்து அனைவருக்கும் சமத்துவமான ஊதிய முறையை அமல்படுத்தும் திட்டத்தை அமலுக்கு கொண்டு வருவோம்.

நம்பிக்கை கூட்டணியின் முதற்கட்ட ஆட்சியில் ரிம1500 வெள்ளி குறைந்தப்பட்ச ஊதியமாக தொழிலாளர்களுக்கு உயர்த்தப்படும், அதனுடன் இந்த குரைந்தப்பட்ச ஊதியத்தை ஒவ்வொரு இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை ஆய்வுக்குட்படுத்தப்படும். மேலும், சிரமத்தை எதிர்நோக்கும் முதலாளிகளின் நிதி சுமையை குறைக்க 50% நிதியை நம்பிக்கை கூட்டணி பகிர்ந்து கொள்ளும். அடிப்படை ஊதிய முறை ரிம1000 அல்லது ரிம1500 உயர்த்தப்படுமானால், நம்பிக்கை கூட்டணி அரசின் சார்பில் தலா அல்லது ரிம250 ஏற்றுக்கொள்வதுடன், முதலாளி ரிம250 ஏற்றுக்கொள்ள வேண்டும்.

வெளிநாட்டு தொழிலாளர்களின் கட்டுப்பாடில்லா வருகையே உள்ளூர் தொழிலாளர்களின் ஊதிய உயர்வு இல்லாமல் இருப்பதற்கு மிக முக்கிய காரணங்கள். அம்னோ தேசிய முன்னணி அந்நிய தொழிலாளர்களின் சேவையை கட்டுப்பாடுத்த தவறிவிட்டது. நம்பிக்கை கூட்டணி அரசாங்கத்தில் 6 மில்லியனாக இருக்கும் அந்நிய தொழிலாளர்களின் எண்ணிக்கையை முதல் காலாண்டிலியே 4 மில்லியனாக குறைப்போம் என உறுதியளிக்கிறோம்.

புறநகர் மற்றும் பெல்டா ஆகிய பகுதிகளில் இயங்கும் சிறுதொழில் வணிகர்களுக்கு சிறப்பு பல்வகை ஊக்குவிப்புக்கள் வழங்கப்படும்.

வசதிகுறைந்த அல்லது உனமற்றோருக்கான உடனடி உதவி நடவடிக்கைகளை வழங்க சமூக நல இயக்கம் மற்றும் இஸ்லாமிய இலாக்கா ஆகியோருக்கு துரித உதவிகளை வழங்கும். எந்த பாகுபாடும் இல்லாமல் அனைத்து தரப்பினருக்கும், குறிப்பாக ஏழை எளிய மக்களுக்கு உதவிகள் வழங்கும் விவகாரத்தில் மாநில மற்றும் மத்திய அரசு முழு கவனத்தை செலுத்தும்.

பிரிம் ஊக்குவிப்பு நிதி மற்றும் உதவித்தொகை உடனுக்குடன் வழங்கும் விதத்தில் சிறப்பு குழு ஒன்றை அமைத்து எந்த அர்சியல் தலயீடுகளும் இல்லாமல், அதன் கீழ் சுதந்திரமாக செயல்படும் வகையில் அமைக்கப்படும். இந்த குழு உடனடி உதவிகள் வழங்கும் முறையை அமல்படுத்துவதுடன், இத்திட்டத்தின் வழி சமூக ஆர்வலர்களும், பெரிய பெரிய நிறுவன களும் பங்கெடுக்க வாய்ப்புகள் வழங்கப்படும்.

சமூகநல உதவி இயக்கங்களை அதிகப்படுத்துவதுடன், அதற்கு தேவையான தகுதி வாய்ந்த மேம்பாட்டு நலத்திட்டங்களையும் நம்பிக்கை கூட்டணி அரசின் சார்பில் உருவாக்கப்படும்.

**வாக்குறுதி 35: தொழிலாளர் மாண்பை நிலைநிறுத்துவதுடன், தகுதி மிக்க வேலை வாய்ப்பினை உருவாக்குதல்.**

தெற்கிழக்காசியா முழுவதிலும் மலேசியாவில் மட்டுமே அதிகம் கல்வி கற்றவர்களாக இருக்கின்றனர். ஆயினும் அம்னோ தேசிய முன்னணி ஆட்சியில் நமது கல்வித்தகுதிக்கு இழிவான ஒரு பார்வையை ஏற்படுத்தியிருக்கிறது. மாறாக அம்னோ தேசிய முன்னணி ஒரு சில பன்னாட்டு நிறுவனங்களுக்கு மட்டுமே சாதகமாக செயல்படுகிறது.

மலேசியாவில் பணிபுரிவதற்கு அம்னோ தேசிய முன்னணி 1மில்லியன் வங்காளதேச தொழிலாளர்களை தருவிக்கிறது, இதன் விளைவு உள்ளூர் தொழிலாளர்களின் ஊதிய ரீதியிலாக பாதிப்பு ஏற்படுவதுடன், வேலையில்லா தீண்டாட்டமும் ஏற்பட வாய்ப்புள்ளது.

பள்ளி, கல்லூரி மற்றும் பல்கலைக்கழகம் முடித்த மாணவர்கள் தகுதி வாய்ந்த வேலைக்கு விண்ணப்பதில் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். மேலும், பகுதி நேரமாகவோ அல்லது குத்தகை பணியிலான வேலையை தேடிக்கொள்ளும் அவலநிலைக்குத் தள்ளப்படுகின்றனர் நமது மாணவர்கள். பல மாணவர்கள் நாசி லெமாக் விற்பதையே அம்னோ தேசிய முன்னணி வலியுறுத்துகிறது. பல இளைஞர்கள் இன்று வறுமை கோட்டின் கீழே ஊதியம் பெறுகின்றனர். 1998 இல் பல்கலைக்கழக மாணவர்கள் பெற்ற அடிப்படை ஊதியமான ரிம2000 வெள்ளியானது, இன்றும் தொடர்கிறது.

இளைய சமுதாயத்தின் இன்னல்களையும், பிரச்சனைகளையும் நம்பிக்கை கூட்டணி அரசாங்கம் ஆழமாக அறிந்து புரிந்துள்ளது.

தொழிலாளர்களின் நலனை கருத்தில் கொன்டு அவர்களது பணியிடங்களின் தொழிலாளர் நல தொழிற்சங்கங்கள் அமைக்க ஊக்குவிக்கும். தொழிலாளர்களுக்கு தொழில் நல சங்கங்கள் அமைக்க உரிமைகள் வழங்கப்பட வேண்டுவதுடன், அவர்களின் தனிப்பட்ட உரிமைகளுக்கு மதிப்பளித்து காக்கப்பட வேண்டும். முதலாளிமார்களுடன் நடைபெறும் ஆலோசனை குழுவின் செயல்பாடுகள் பாதுகாக்கப்பட்டு விரிவாக்கப்படும்.

உலக தொழிலாளர் சங்கம் வரையறுத்த தொழிலாலர் உரிமைகளின் வழி மலேசியா தொழிலாலர்களின் நலன்கள் பாதுகாக்கப்படும் நம்பிக்கை கூட்டணி அரசாங்கத்தில்.

நம்பிக்கை கூட்டணி அரசாங்கத்தின் சார்பில் மலேசியாவில் இளைய சமுதாயத்தின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் 1 மில்லியன் தரம்னான வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படுவதுடன், மலேசியர்களை அதிகம் நடுத்தர மக்கள் பட்டியலில் சேர்க்கும் முயற்சிகளில் இறங்கும். மேலும், (ஸ்தெம் – stem) எனப்படும் தொழில்நுட்பத் துறையில் கூடுதல் கவனம் மற்றும் நிதிகளும் வழங்கி நமது தரத்தை உலகளவில் கொண்டு சேர்க்கும்.

உள்ளூர் தொழிலாளர்களுக்கு முன்னுரிமை வழங்கும் வகையில் திட்டங்களும் சட்டங்களும் வகுக்கப்படும், அதே சமயம் தொழிலாளர்களின் அடிப்படை ஊதியமாக ரிம1500 வெள்ளியாக உயர்த்தப்படும். படிப்படியாக தொடர்ந்து அந்நியத் தொழிலாளர்களின் ஆட்குறைப்பு செய்யப்படுவதுடன், எங்களது அமைச்சரின் சார்பில் அந்நியத் தொழிலாளர்களை ஊக்குவிக்கும் எந்த வகையான ஆதரவு கடிதங்களும் வழங்காது எச்சரிக்கையும் வழங்கப்படும்.

4.0 தொழில்நூட்ப புரட்சிக்கு ஏற்ப மலேசியர்களை தயார் செய்வதுடன், வேலையில்லா பட்டதாரிகளுக்கு இலவசமாக தொழில்நூட்பத் துறை மற்றும் புதிய துறைகளில் பயிற்சிகள் வழங்கப்படும்.

மலேசியா ஏறத்தாழ 150,000 அகதிகளின் இருப்பிடமாக இருக்கும் பட்சத்தில், அவர்களது நிலைகளை ஐநா அவையுடன் இணைந்து அகதிகளின் தகுதிக்கு உருமாற்றி, மலேசியாவில் பணிபுரிவதற்கு வாய்ப்புகளும் வழங்கப்படும். அவர்களது உரிமைகளும் சக மலேசிய தொழிலாளர்களின் அளவோடு சமத்துவமாக நிலை நிறுத்தப்படும். இதன் வழி நாட்டின் அந்நிய தொழிலாளர்களின் பங்களிப்பை குறைப்பதுடன், அகதிகளின் நல்வாழ்விற்கும் வழிவகுக்கும் தவறான குற்றவியல் சம்பவங்களும் நாட்டில் நடைபெறாமல்.

பெற்றோர்களின் குழந்தை காப்பாக சுமையை குறைக்க அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் 12 வயது வரையிலான குழந்தைகளை பாதுகாக்கும் காப்பகம் அமைக்கப்படும். தனியார் துறையில் குழந்தை காப்பகத்தை அமைக்கும் நிறுவனங்களுக்கு ஊக்குவிப்பு தொகையும் வழங்கப்படும்.

சிறுதொழில் மற்றும் நிறுவனங்களில் பணியிட குழந்தைகள் காப்பகம் அமைப்பதற்கும் முறையாக ஒருங்கிணைக்க நம்பிக்கை கூட்டணி அரசு முயற்சிகளை வகுக்கும்.

**வாக்குறுதி 36: குடும்ப பெண்களுக்கு சேமநிதி சேமிப்பு திட்டத்தை அமல்படுத்துதல்.**

ஒரு குடும்பத்தின் மிக முக்கிய அடித்தளமாக விளங்குவது குடும்ப பெண்கள். குடும்பத்தை சீராக வழிநடத்தி செல்பவர்களே பெண்கள், எந்த பிரதிபலனும் பாராமல் பிள்ளைகளை வளர்த்து நல்வழியில் வளர்ப்பவர்கள், குறிப்பாக முழுநேர குடும்ப பெண்கள். ஆயினும் இவர்களது சேவைக்கு எந்த அங்கீகாரமும் கிடைக்கப் பெறுவதில்லை.

அம்னோ தேசிய முன்னணியின் ஆட்சியில் இவர்களுக்கு எந்த உதவியும் கிடைக்கமால் புறக்கணிக்கப்படுகிறார்கள். அவர்களது உரிமைக்கு எந்த திட்டமும் வகுக்கப்படவில்லை.

இவர்களது எதிர்காலம் மிகவும் துயரமானவை. முதுமை காலத்தை நெருங்கும் வயதில், கணவரும் இல்லாத நிலையில், இவர்கள் எந்த வகையான சமூக உதவியும் இல்லாமல் தவிக்கின்றனர்.

நம்பிக்கை கூட்டணி இவர்களது துயரத்தை உணர்ந்து, அவர்களுக்கு உரிய உரிமைகளை வழங்கவும் வழி செய்கிறது.

முதன்மை திட்டமாக இவர்களுக்கு உதவுவதற்கு சேமநிதி வாரிய திட்டத்தை அமல்படுத்துகிறதுகிறது. இவர்களது கணவர்களின் சேமநிதியிலிருந்து 2% நிதி மணைவிமார்களுக்கு சேர்க்கப்படுகிறது. குடும்பத்தில் அவர்களது சேவையை அங்கீகரித்து. நம்பிக்கை கூட்டணியின் ஆட்சியிலிருந்து ரிம50 வெள்ளி முழுநேர குடும்ப பெண்களுக்கு வழங்கப்படுகிறது.

நீண்ட நாள் சேமிப்பாகவும் அவர்களது குறிப்பிட்ட வயதுக்கு ஏற்ற வரையில் அப்பணத்தை அவர்கள் மீட்டுக் கொள்ளலாம். மேலும், இதன் பயன்பாடு ரத்த உறவில் உள்ளவர்கள் வரை நீள்வதுடன், குடும்ப பெண்களின் இறுதி காலம் வரை பயன்பெறும் வகையில் இத்திட்டத்தை நம்பிக்கை கூட்டணியின் ஆட்சியில் வழங்கப்படுவதை உறுதி செய்யும்.

**வாக்குறுதி 37: மக்கள் நல்வாழ்வின் சுபீட்சத்தை தொடர்ந்து பேணி காத்தல்.**

நாட்டின் நிஜமான நிறுவனர்கள் வாக்களிக்கும் மக்களே அரசாங்கம் மக்களின் வழி தேர்ந்தெடுக்கப்படு வழிநடத்துனர்களே என்பதனை நம்பிக்கை கூட்டணி அரசு நம்புகிறது. மக்களின் வரிப்பணத்தை மக்களின் அடிப்படை உரிமைகளின் தேவைகள், எதிர்கால நலனை கருத்தில் கொண்டு திட்டங்களை அமைத்திடல் வேண்டும். நிதி நிர்வாக திறமையின்மை அரசினால் மக்களே நட்டத்தை எதிர்கொள்ளும் இக்கட்டான நிலைக்கு தள்ள வேண்டிய சூழ்நிலைக்கு உள்ளாகும்.

அம்னோ தேசிய முன்னணி தலைமையின் கீழ் நிதி நிர்வாகம் முறையற்ற முறையில் நிர்வாகம் செய்யப்பட்டு  நாட்டை அழிவுப்பாதைக்கு ஈட்டு சென்றது. நம்பிக்கை கூட்டணி ஆட்சியின் நிர்வாகத்தில் முந்தைய அரசினால் உத்தரவு வழங்கப்பட்ட நாட்டின் கடன்களை ஆராய்ந்து பட்டியலை மக்களிடத்தில் வெளிப்படுத்தும்.

நம்பிக்கை கூட்டணி அரசாங்கத்தில் மக்களின் ஒய்வுதிய நிதிகளை அரசாங்கம் தன்னிச்சையாக பயன்படுத்தும் கொள்கைக்கு எதிராக ஒரு சட்டம் இயற்றப்படும். மாறாக ஊழியர் சேமநிதி, ஒய்வுதிய நிதி, தாபுங் ஜாஹி மற்றும் இராணுவ நலவாரிய நிதிகள் அனைத்தும் பாதுகாக்கப்படும்.

நாட்டின் தேசிய அறக்கட்டளை நிதி குழுமத்தின் 1988 சட்டத்தை மீண்டும் பரிசீலித்து  சீரமைப்புகள் மேற்கொள்ளப்பட்டு, தலைச்சிறந்த நிர்வாகிகள் கொண்டு நிர்வாகிக்கப்படும் நாட்டின் எதிர்கால நிதி அறக்கட்டளையாகவும் செயல்படும். மேலும், பெட்ரோனாஸ் நிறுவனத்தின் லாபத்தில் குறிப்பிட்ட விழுக்காடும், அல்லது குறைந்தது ரிம10பில்லியன் தொகை ஒரு வருடத்திற்கு. அதனுடன் மற்றப்பிற அரசிற்கு சொந்தமான நிறுவனங்களின் லாபத்தின் தொகையினை தேசிய அறக்கட்டளை நிதியில் சேர்க்கப்படும்.

அம்னோ தேசிய முன்னணி அரசின் கீழ் விடுப்பட்டுள்ள சமூகங்களில் ஒன்றுதான் புறநகர் பகுதிகளில் ஏழ்மை நிலையில் வாழும் ஒரு குறிப்பிட்ட சீன சமூகத்தினர். அவர்களின் வாழ்விலும் நலனிலும் நம்பிக்கை கூட்டணி அரசு நிச்சயமாக பாதுகாக்கும்.

மலேசியா நிலம் மற்றும் கலாச்சார வரலாற்றில் சீனர்களின் புதுக்கிராமங்களும் மீன்பிடி கிராமங்களும் மிக முக்கிய நிலப்பரப்புகளாகும். நகரங்களை கடந்து ஒதுக்குப்புறமாக இக்கிராமங்கள் இருப்பதினால் மக்கள் பெரும்பாலும் வெளியேறி புதிய குடியிறுப்புகளுக்கு இடம்பெயர்ந்தனர். இன்றைய நிலவரப்படி நாட்டில் 600 புதுக்கிராம குடியிருப்புகள் இருக்கின்றனர், அதனில் 450 குடியிருப்புகள் அவசரக்கால பிரகடனத்தில் துவக்கப்பட்டவைகளாகும்.

கிராமப்புறங்களில் செயல்படும் சிறுவியாபரிகளுக்கு குறைந்த கட்டணத்தில் கடன்களை வழங்க வசதிகளை நம்பிக்கை கூட்டணி அரசில் ஏற்படுத்தி தருவோம். குறிப்பாக சரித்திர மற்றும் கலாச்சார நகரங்களையோட்டியுள்ள ஆர்வமுள்ள வியாபரிகளுக்கு இவ்வாய்ப்புகளை அதிகம் வழங்குவோம்.

**வாக்குறுதி 38: தீபகற்ப பூர்வக்குடிகளின் உரிமைகளை நிலைநாட்டுவோம்.**

தீபகற்ப மலேசியாவில் வாழும் பூர்வக்குடிகளின் உரிமைகள் அம்னோ தேசிய முன்னணி அரசின் கீழ் நெடுங்காலமாக புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளன. ஆகவே இம்மண்ணின் மைந்தர்களான அவர்களின் உரிமைகளை நம்பிக்கை கூட்டணி அரசாங்கத்தின் கீழ் தொடர்ந்து நிலைநாட்டுவோம்.

பூர்வக்குடிகளின் வாழ்வாதாரத்தை அவர்களே மாற்றியமைத்துக் கொள்ள முழு உரிமையும் வழங்கப்படும், மாறாக பூர்வக்குடிகளின் மேம்பாட்டு சமூகநல அமைப்பின் அதிகார வரம்பின் கீழ் இல்லாமல் சுதந்திரமாக முடிவெடுக்கும் உரிமை அவர்களுக்கு வழங்கப்படும்.

பூர்வக்குடி சமூகநல மேம்பாட்டு துறையின் தலைமைப் பொறுப்பினை ஏற்க பூர்வக்குடிகளின் மத்தியில் ஒருவரை தேர்ந்தெடுக்க அத்துறையில் மறுசீரமைப்புகள் மேற்கொள்ளப்படும்.

நம்பிக்கை கூட்டணி அரசு பூர்வக்குடி மக்களின் பாரம்பரிய நிலங்களின் மீதான உரிமையை தற்காத்து கொள்ள சுஹாகம் 2013இல் வழங்கிய ஆய்வறிக்கையினை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்து அந்நிலங்கள் தொடர்பாக மறு ஆய்வினை மேற்கொள்ளும். அம்னோ தேசிய முன்னணி காலத்தில் அவர்களது பாரம்பரிய நிலங்கள் தொடர்பான உரிமைகள் மற்றும் சுஹாகாம் வழங்கிய ஆய்வறிக்கையினையும் புறந்தள்ளியது.

பெல்க்ரா மற்றும் ரிஸ்டா திட்டத்தின் வழி பூர்வக்குடிகளுக்கு சிறந்த பொருளாதார திட்டத்தின் கீழ் உரிமைகளைப் பெற தொடர்ந்து பாடுபடுவோம். அவர்களின் உயர்வுக்கு தடைக்கற்களாக இருக்கும் அனைத்து விதிகளுக்கும் மீண்டும் மறுசீரமைப்புக்கு உத்தரவிடுவோம்.

பூர்வக்குடிகளின் பாரம்பரிய நிலங்களை அடையாளம் காண்டு தற்காக்க நம்பிக்கை கூட்டணி அரசாங்கத்தின் சார்பில் ஒரு சிறப்பு நிதி ஒதுக்கப்பட்டு, சிறப்பு கண்காணிப்புக்குழுவை அமர்த்தி அவர்களின் மூததையர்கள் மற்றும் ஈடுகாட்டின் நிலங்களை பாதுகாக்கும்.

பூர்வக்குடி மக்களின் வாழ்வாதரத்தை உயர்த்த 24 மணிநேர தடையில்லா தண்ணீர், மின்சார, தொலைத்தொடர்பு மற்றும் சாலை வசதிகள் படிப்படியாக உருமாற்றம் காணப்படும்.

பூர்வக்குடி பிள்ளைகளின் கல்வித்தரத்தை உயர்த்த எல்லா வகையிலும் பிற மாணவர்களுக்கு ஈடாக கல்வித்தரம் முதல் புறப்பாட நடவடிக்கைகள் முதல் விரிவாக்கம் செய்யப்படு அமல்படுத்தப்படும்.

அனைத்துலக மற்றும் உள்ளூர் ரீதியிலான அளவில் பூர்வக்குடிகளின் மக்களின் வாழ்வியல் கலாச்சாரத்தை பிரபலப்படுத்த சிறப்பு நிதி ஒதுக்கீடுகளும் வழங்கப்படும்.

**வாக்குறுதி 39: சமத்துவமான பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் வளர்ச்சி.**

இயற்கை சுற்றுச்சூழல் வளத்தின் நலனை கருதாமல் மேம்பாட்டு திட்டங்கள் தற்சமயம் நடந்து கொண்டிருக்கிறது. மேம்பாட்டுக்கான நிலங்கள் இருந்தும் கடல் மீது மேம்பாட்டு திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன, கடல் வளமும் மாசுப்படுகின்றன இதன் விளைவு கடலில் உள்ள மீன் உற்பத்தி வளர்ச்சிகளும் குன்றிப்போய் விடுகின்றன. அளவுக்கு மீறிய சுரங்க

தொழிலால் மாசடைந்து காணப்படும் காற்று மற்றும் நீர் வளம், காடுகளின் அழிப்பினால் நீர்ப்பாசன வடிகாலும் காணமால் மறைந்து போக பெருவாரியாக வெள்ளம் சூழ ஆரம்பித்துவிட்டன. பூர்வக்குடிகளின் பாரம்பரிய நிலங்களின் மீது எழுப்படும் ஆனை கட்டுமானப்பணியில் இயற்கை சூழலும், உயிரினங்களும் பாதிப்புக்குள்ளாகி காணப்படுகின்றன.

மலேசியாவுக்கே உரித்த இயற்கை செல்வ வள அருட்கொடையை அம்னோ தேசிய முன்னணி பாதுகாக்காமல், தங்களது பினாமி நிறுவனங்களுக்கு தாரைவார்த்து கொடுத்து அழிக்கும் படலத்தில் இறங்கியுள்ளன.

சுற்றுச்சுழல் மற்றும் இயற்கை வளங்களை பேணி காக்கும் அடிப்படையிலான உயரிய நோக்கத்தில் நம்பிக்கை கூட்டணியின் அரசாங்கத்தின் ஆட்சி நடைபெறும் என்பது உறுதி.

உலக சட்டத்திட்ட விதிப்படி நாட்டில் சுற்றுச்சூழல் அமைப்பின் விதிமுறை முறை மறுசீரமைக்கப்டும்.

அனைத்து மேம்பாட்டு திட்டங்களும் இயற்கை சுற்றுச்சூழலின் விதிமுறைக்கு ஏற்ப அனுமதிகள் வழங்கப்படும். அனுமதியளிக்கப்பட்ட சர்ச்சைக்குரிய மேம்பாட்டு திட்டங்கள் மீண்டும் மறு ஆய்வுகள் செய்யப்படும்.

நாட்டின் தேசிய காடுகளின் பாதுகாப்பை உறுதி செய்ய அனைத்து வகையான மர அழிப்புக்கான ஒதுக்கீடு விதிமுறையை கட்டாயம் நிறுத்த உத்தரவிடப்படும். கடல் வாழ் உயிரினங்கள், வன உயிர்கள் மற்றும் இயற்கை சுற்றுச்சூழல் விதிகளை மறுபடியும் முறையாக மறுசீரமைக்கும். மேலும், சட்டவிரோதமாக கட்டையும் விலங்குகளையும் வேட்டையாடுவோருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் நம்பிக்கை கூட்டணியின் ஆட்சியில்.

ஐ.நா. அவை சட்டவிதிகளுக்குட்பட்ட நிலையான இலக்கை கொண்ட மேம்பாட்டு திட்டங்களுக்கு நம்பிக்கை கூட்டணி ஆதரவளிக்கும். 2020 –க்குள் கரியமில வாயு வெளியேற்றத்தை 40% குறைக்கும் பெருமுயற்சியில் ஒன்றாக நம்பிக்கை கூட்டணியின் முதலாம் ஆண்டின் சாதனையின் அளவுகோலாக நிலைநிறுத்தப்படும்.

உருமாற்று பச்சை மற்றும் சக்தி அடிப்படையிலான தொழில்நுட்பத் திட்டத்திற்கு நம்பிக்கை கூட்டணி அரசாங்கம் முன்னுரிமை வழங்கும். இத்துறையானது இன்று அதிவேகமாக வளர்ந்து வருவதில் ஒன்றாகவும், அதிகமான வேலை வாய்ப்பினையும், உயர்ந்த லாபம் கொண்டவையாகவும் அமையப்பெற்றுள்ளது. 2025-க்குள் இயற்கை வளத்தின் வழியில் கிடைக்கப்பெறும் 2% எரிசக்தியினை மேம்படுத்தி, வளப்படுத்தி 20% உயர்த்தப்படும். நிலக்கரியின் மூலம் பெறப்படும் எரிசக்தி முறை கரியமில வாயுவின் வெளியேற்றத்திற்கு அதிகம் பங்களிப்பதினால், இதன் பயன்பாடு படிப்படியாக குறைக்கப்படும்.

மறுசூழர்ச்சி முறையிலான இயற்கை வளம் சார்ந்த மேம்பாட்டு திட்டங்களை நாட்டின் முதலீட்டு கொள்கையில் அமலாக்கம் காணப்படும்.

நவீன புரட்சி காலக்கட்டத்திற்கு ஏற்ப இயற்கை வள சுற்றுச்சூழலை பாதுகாக்கும் மிகப்பெரிய பொறுப்பினை நம்பிக்கை கூட்டணி அரசு உணர்ந்து செயல்படும். மேலும், பிற நாடுகளின் குப்பைகள் கொட்டும் இடமாக இனி மலேசியாவில் எந்த ஒரு நிறுவனத்திற்கு அனுமதியளிக்க விடமாட்டோம்.

நம்பிக்கை கூட்டணி அரசாங்கத்தில் இயற்கை, சுற்றுச்சூழல் காலநிலை தழுவல் மற்றும் தணிப்பு உயற்குழு ஒருங்கிணைப்பு மன்றத்தை நிறுவி, காலநிலை தட்ப வேட்பத்தின் மாற்றத்தை கட்டுப்படுத்த மத்திய அரசாங்கம், மாநில அரசாங்கம், உள்ளூராட்சியுடன் கூட்டாக இணைந்து இயற்கை பேரிடர் வரும் முன் காக்கும் முயற்சியில் செயல்படும். கடற்கரை மற்றும் நதிகளின் அருகில் அமைந்திருக்கும் குடியிருப்புகளில் வெள்ளம் ஏற்படும் சாத்தியங்களை தவிர்க்க முடியாத ஒன்றாக இன்று அமைந்துவிட்டன. இதனை முழுமையான நிவர்த்திகளை காண உலக சுற்றுச்சூழல் மற்றும் அமைப்புகளுடன் இணைந்து காக்கும் முயற்சிகளில் நம்பிக்கை கூட்டணி அரசு உறுதியளிக்கிறது. மக்களும் எல்லா வகையான கால சூழலுக்கு ஏற்ப தயார்படுத்தும்.

அணுவுலை அமைக்கும் அம்னோ தேசிய முன்னணியின் திட்டத்தை நம்பிக்கை கூட்டணி அரசு நிறுத்தும்.

பல்லுயிர் வழி பெறப்படும் வருவாய் முதலீட்டின் திட்டம் நாட்டின் முதன்மை வருவாய் திட்டங்களில் ஒன்றாக நிலைநிறுத்தபடும். மேலும், நமது நாட்டின் ஏனைய இரண்டு தேசிய காடுகளையும், உலகச்சுற்றுச்சூழல் அமைப்பின் நிறுவனமான யுனெஸ்கோ உலக பாரம்பரிய பகுதிகளாக அங்கீகரிக்க முயற்சிகளை மேற்கொள்ளும்.

**படிநிலை 4: 1963 வாக்குறுதியின் அடிப்படையில் சபா மற்றும் சரவா மாநில உரிமைகளை மீட்டெடுத்தல்.**

1963 மலேசியா ஒப்பந்தத்தின் வழி சபா மற்றும் சரவா மாநில மக்களின் உரிமைகளை நிலைநாட்டாமல் புறக்கணித்து வருகிறது அம்னோ தேசிய முன்னணி. ஒவ்வொரு பொதுத்தேர்தல்களிலும் பொய்யான வாக்குறுதிகளை வழங்கி அம்மக்களை ஏமாற்றி வருகிறது. அம்மாநிலங்களின் வளங்களை தொடர்ந்து ஒரு பிரிவினர் திசைதிருப்புகின்றனர் புத்ராஜெயாவை நோக்கி.

1963 ஒப்பந்த விதிகளுக்கு கட்டுப்பட்டு பின்பற்றி ஒன்றுப்பட்ட மலேசியா உருவாவதற்கான விதிகளை நம்பிக்கை கூட்டணி தொடர்ந்து பின்பற்றும்.

ஒப்பந்த விதிகளின் மாண்பையும் அதனை தோற்றுவித்த தலைவர்களின் சத்தியத்தையும் நம்பிக்கை கூட்டணி தொடர்ந்து நிலைநாட்டும்.

நம்பிக்கை கூட்டணியின் வாக்குறுதிகளாக அறிவிக்கின்றோம்.

**வாக்குறுதி 40: 1963 மலேசியா ஒப்பந்தத்தை அமல்படுத்த அரச ஆணையம் அமைக்கப்படும்.**

மலேசியா ஒப்பந்த சாசனப்படி சபா மற்றும் சரவா ஆகிய இரு மாநிலங்களின் செல்வ வளங்களை சூறையாடியது அம்னோ தேசிய முன்னணி. சபா, சரவா மக்களின் உரிமைகள் தொடர்ந்து நசுக்கப்பட்டு தங்கள் சொந்த உரிமைகளை கூட பெற முடியாத அறியாமையில் வாழும் அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

1963 மலேசியா ஒப்பந்தத்தை மறு ஆய்வுக்குட்படுத்தும் அரச ஆணையம் அமைத்து முதல் 100 நாட்களில் நம்பிக்கை கூட்டணியின் ஆட்சியில் அமல்படுத்தப்படும்.

அரச ஆணையத்தின் உயர்மட்ட குழுவில் சபா மற்றும் சரவா மாநிலத்தை சேர்ந்த அறிஞர் பெருமக்கள் இருப்பதை உறுதி செய்வோம். விரைந்து அமல்படுத்தவும், அரசாங்கத்திற்கு துள்ளியமாக ஆய்வுகளை சமர்ப்பிக்கவும் இக்குழுவுக்கு ஆணை பிறப்பிக்கப்படும்.

**ஒப்பந்தத்தில் முக்கியமானதாக இடம்பெறும் சாசனங்கள் –**

- **இன்றைய சட்டவிதிகளுக்கு ஏற்ப 1963 மலேசியா ஒப்பந்தத்தை ஆய்வு செய்தல்.**
- **நாட்டின் கல்வி முறையில் மலேசியா ஒப்பந்தத்தை விரிவாக்குதல், மலேசியர்களிடையே புரிந்துணர்வு ஏற்பட.**
- **மத்திய கூட்டாட்சி தத்துவத்தை அமல்படுத்துதல்.**
- **மண்ணின் இயற்கை வளங்களின் செல்வங்களை மறு ஆய்வுக்குட்படுத்தல் அம்மாநிலங்களின் உரிமைகளுக்கு ஏற்ப.**
- **மாநில நிர்வாக உரிமைகளை வழங்குதல்.**

· **சபா, சரவா மாநிலங்களின் உரிமைக்கேற்ப நிதி ஒதுக்கீடு.**

**வாக்குறுதி 41: சபா, சரவா மாநிலங்களின் பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்தல்.**

சபா, சரவா மாநிலங்கள் இயற்கையாகவே எரிபொருள், எரிவாயு, இயற்கை வளங்களை கொண்ட மாநிலங்களாகும். ஆயினும் இவ்விரு மாநிலங்களும் தொடந்து ஏழ்மை மாநிலங்களாகவே அம்னோ தேசிய முன்னணி ஆட்சியின் கீழ் திகழ்ந்து வருகின்றன.

பெட்ரோல் ஊக்கத்தொகை 20% வழங்கவோ அல்லது அதற்கு நிகரான தொகையை சபா மற்றும் சரவா மாநிலத்திற்கு வழங்க நம்பிக்கை கூட்டணி அரசு முன் வருவதுடன், இதன் வழி சிறந்த உள்கட்டமைப்பிற்கான வளர்ச்சியை அம்மாநிலங்கள் பெறுவதற்கு வழிவகுக்கும்.

நம்பிக்கை கூட்டணி அரசாங்கத்தில் தனிமனித குத்தகைகள் ஒழிக்கப்படுவதுடன், சிறந்த நிர்வாகத்தின் முறையின் கீழ் அம்மாநிலங்களின் உள்கட்டமைப்பின் வளர்ச்சிக்கு வழிவகுப்போம்.

· **சிறந்த தண்ணீர் மற்றும் மின் இணைப்பு வசதிகளை நகர்புறங்களுக்கு வழங்குவோம்.**

· **சாலை மற்றும் நெடுஞ்சாலைகள் பட்டணங்கள் மற்றும் கிராமங்களை எளிதாக இணைக்க விரிவாக்கம் காணப்படும்.**

· **டிரன்ஸ் போர்னியோ ரயில் சேவை திட்டத்தை மறு ஆய்வு செய்வதுடன், பொது மற்றும் தனியார் நிறுவனங்களின் பொருளாதார முயற்சியில் மேற்கொள்வதுடன், அதன் கட்டுமான பணிகளை உள்நாட்டு குத்தகையாளர்களுக்கு வழங்க முன்னுரிமை வழங்குவோம்.**

· **சபா, சரவா மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த சிறப்பு நேரடி உதவித்திட்டங்கள் அமலாக்கம் காணப்படும்.**

· **அதிகமான பள்ளிகள் மற்றும் மருத்துவம சேவை மையங்களை உருவாக்குதல்**

1974 பெட்ரோலிய சட்டவிதியை மறு ஆய்வு செய்வதுடன், குறிப்பாக தனிமனித லாப நோக்கங்களை முற்றிலும் அகற்றுதல். மேலும், இதன்வழி சபா, சரவா ஆகிய இரு மாநிலங்களும் சொந்த நிறுவனங்களை நிறுவி நிர்வாகிக்கும் பொறுப்பை வழங்குதல்.

நோர்வே, அமெரிக்கா ஆகிய நாடுகள் நிர்வாகிக்கும் வழி முறையின் கீழ் சபா மற்றும் சரவா பெட்ரோலிய நிர்வாகங்களை நிர்வாகிக்க முழு சுதந்திரம் வழங்கப்படுவதுடன், தேசிய அறக்கட்டளை நிதி வாரியத்தை போன்று அம்மாநிலங்களில் துவக்கப்படும்.

**வாக்குறுதி 42: சபா,சரவா மாநில மக்களுக்கு ஊதிய உயர்வுடன் கூடிய வேலை வாய்ப்பை ஏற்படுத்தி கொடுத்தல்.**

சமத்துவம் இல்லாத வளர்ச்சியினால் சபா,சரவா மாநிலங்கள் மிகவும் பின்தங்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன. நியாயமான அடிப்படை ஊதியம் இல்லாத வாய்ப்புகளே காணப்படுகின்றன. நாட்டின் மிகவும் குறைந்த 31% ஊதியம் பெறும் மாநிலமாக சபா மாநிலம் திகழ்கிறது. சரவா 21% குறைந்த ஊதியம் பெறும் மாநிலத்தில் 3வது இடத்தில் இருக்கிறது. இது அநீதியான ஒரு செயலாகும்.

1965 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு பொதுத்தேர்தல் காலங்களிலும் சபா, சரவா ஆகிய மக்களுக்கு பான் போர்னியோ நெடுங்சாலை அமைக்கும் வாக்குறுதியை மட்டுமே தேசிய முன்னணி வழங்கி வருகிறது. தொடர்ந்து 40 ஆண்டுகளாக கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற தவறி வருகிறது தேசிய முன்னணி. மாறாக அம்னோவின் சில குத்தகையாளர்கள் குத்தகைகளை நிறைவேற்றாமலே கொள்ளை லாபம் ஈட்டி வருகிறார்கள்.

நம்பிக்கை கூட்டணி ஆட்சியில் சபா,சரவா மக்களின் கனவை நிறைவேற்றுவோம். அவ்வகையில் இவ்விரு மாநிலங்களையும் இணைக்கும் நெடுங்சாலை அமைத்து கொடுத்தல். மேலும், ஒவ்வொரு ஆண்டு வரவு செலவு பட்ஜெட் தாக்கலில் 30% நெடுஞ்சாலை அமைக்கும் திட்டத்திற்கு ஒதுக்கி நிறைவேற்றுவோம்.

மெகா நெடுஞ்சாலை திட்டத்தின் வழி வரும் குத்தகைகள் சபா,சரவா மக்களுக்கே முன்னுரிமை வழங்கப்படுவதுடன், முறையான ஊதியத்துடன் பணியில் அமர்த்தபடுவார்கள். இதன் வழி 2000 சபா,சரவா இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தி கொடுக்க முடியும் என்பது உறுதி.

சபா,சரவா இளைஞர்களின் திறமையை அம்னோ தேசிய முன்னணி அங்கீகரிக்க மறுக்கிறது என்பதே மறுக்கப்பட முடியாத உண்மை. அவ்வகையில் நம்பிக்கை கூட்டணி ஆட்சியில் தேசியம் முதல் மாநிலங்கள் வரை மிக முக்கிய உயர் பொறுப்புகளுக்கு திறமை வாய்ந்த சபா,சரவாவின் இளைய சமுதாயத்திற்கு முழுமையான வாய்ப்புகள் வழங்கப்படுவது உறுதி.

நவீன தொழில்நுட்பம் மற்றும் தொழில்முனைவோர் துறைக்கான புதிய துறைகள் சபா,சரவா மாநிலத்தில் துவங்கப்படும் நம்பிக்கை கூட்டணி ஆட்சியில்.

கலை,பண்பாடு,வரலாறுடன் இணைந்து சபா,சரவா மாநிலங்களின் சுற்றுலாத்துறை மேம்படுத்தப்படும் நம்பிக்கை கூட்டணி ஆட்சியில்.

**வாக்குறுதி 43: சபா,சரவா மாநிலங்களை நல்லிணக்கம் திகழும் சமுதாயமாக உருவாக்கம் காணப்படும்.**

காலம் காலமாக சபா,சரவா மக்களை தங்களின் சுயநலனிற்காக மதம் மற்றும் இனரீதியாக பிரித்து ஆளும் சூழ்ச்சியை அரங்கேற்றி வந்த அம்னோ தேசிய முன்னணி இதன் வழி தங்களது ஆட்சியினையும் இம்மாநிலங்களில் தக்க வைத்து கொண்டது. ஆயினும் எந்த சூழ்ச்சிக்கும் பலியாகாமல் சபா,சரவா மக்கள் ஒற்றுமையாகவே வாழ்ந்து வருகின்றனர் எந்த பிரிவினையுமின்றி. நாட்டின் அரசியலமைப்பு சட்டம் மற்றும் அதிகாரப்பூர்வ இஸ்லாமிய மதத்தை மதித்து உணர்ந்து சபா,சரவா மக்கள் நல்லிணக்கத்தை வளர்த்து வருகின்றனர்.

நம்பிக்கை கூட்டணி சபா,சரவா மக்களின் பல்வகை மத இன உணர்வை மதித்து பேணி காக்கும். மேலும், சபா, சரவா மக்களின் வாழ்வியல் பண்பாட்டு கலாச்சாரத்தை தீபகற்ப மலேசியர்களும் புரிந்து கொள்வதற்கு மாற்று மாணவர்கள் நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்கும்.

**வாக்குறுதி 44: கல்வி மற்றும் சுகாதாரத்தை சீர்திருத்தம் செய்தல்.**

சிறந்த கல்வி மற்றும் சுகாதாரத்தை அம்மக்களுக்கு கால்நூற்றாண்டாய் வழங்கிட அம்னோ தேசிய முன்னணி தோல்வி கண்டுள்ளது. இத்தனை காலமும் அங்கே பணிப்புரிய அனுபவம் இல்லாத ஆசிரியர்களையும், மருத்துவர்கர்களையும் அனுப்பியது அரசு. இதன் வழி சிறந்த கல்வி முறை அல்லது சுகாதாரத்தை பெறும் முயற்சி அம்மக்களுக்கு தோல்வியில் முடிந்தது.

சபா,சரவாவை சேர்ந்த ஆசிரியர்கள் மற்றும் மருத்துவர்களை சிறப்புத் தேர்ச்சிப் பெற நம்பிக்கை கூட்டணி அரசு உறுதி செய்யும். வேறுமென பயிற்சிகள் அளிக்கும் முகாம்களாக அல்லது மோசமான நடவடிக்கைகள் கொண்ட அரசு அதிகாரிகளை சீர்திருத்த மாற்றம் காணும் இடமாக சபா,சரவாவை கருதாமல், தேவை ஏற்படும் பட்சத்தில் பணி மாற்றங்கள் ஏற்படுத்த வழி வகைகளை ஆராய்வோம்.

மருத்துவம் மற்றும் சுகாதாரம் சார்ந்தவைகளில் சுயமாக முடிவெடுக்கும் உரிமையை வழங்குவோம். கல்வியை பொறுத்த வரை பெற்றோர்களின் முழு உரிமைக்கு நம்பிக்கை கூட்டணி அரசு துணை நிற்கும். அவ்வகையில் தாய்மொழி வழிக்கல்வியில் அல்லது ஆங்கில வழிக்கல்வியில் போதனை முறையை அவர்களின் விருப்பத்திற்கேற்ப சுதந்திரம் வழங்கப்படும். நாட்டின் தேசிய கல்வி வரையறையின் வழி புறப்பாட நடவடிக்கைகள் அம்மாநிலங்களுக்கு வகுக்கப்படும்.

சுகாதாரத் திட்டத்தின் கீழ் பொது மருத்துவமனைகளின் சேவை தரங்களை உயர்த்துவதுடன், அனைவருக்கும் சிறந்த மருத்துவம் குறிப்பாக குறைந்த கட்டணத்தில் பெறுவதற்கு உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மேலும், மருத்துவமனைகளில் அதிநவீன சிகிச்சை இயந்திரங்களின் வழி

இருதயம் மற்றும் புற்றுநோய்க்கான சிகிச்சைக்கு இருப்பதை உறுதி செய்வோம்.

அரசு சார்ந்து துணை நிறுவனங்களின் நன்கொடையின் வழி கல்வி மற்றும் சுகாதாரத்திற்கு உதவிட முயற்சிகளை மேற்கொள்வோம். மேலும், பெடுலீ சிஹாட் என்கிற சிலாங்கூர் மாநில அரசின் சுகாதார உதவித்திட்டத்தை சபா,சரவாக்கிலும் ஆராய்ந்து மேற்கொள்வதற்கு முயற்சிகளை மேற்கொள்வோம்.

**வாக்குறுதி 45: கிராமம் மற்றும் நகர்புற மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.**

எண்ணற்ற சபா, சரவா மக்கள் இன்னும் ஏழ்மையான நிலையில் கிராமப்புறங்களில் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இதன் விளைவு அறியாமையில் வாழும் அம்மக்கள் தங்களது பிறப்பைக்கூட அதிகாரப்பூர்வமாக பதிவிட இயலாத நிலைக்கு தள்ளப்பட்டு, நிறைய குழந்தைகள் நாடற்றவர்களாக இருந்து வருகின்றனர்.

இந்த சிக்கலை நிவர்த்தி செய்ய நம்பிக்கை கூட்டணியின் ஆட்சியில் பிறப்பு பத்திர எடுக்கும் நடைமுறை எளிமைப்படுத்தப்படுவதுடன், பிறப்பு சன்றிதழில் சிக்கலை எதிர்நோக்கியிருக்கும் பிரச்சனைகளை துள்ளியமாக களைந்து பூர்த்தி செய்யப்படும் என்பதை உறுதியளிக்கிறோம்.

இயற்கை வழி எரிவாயு, சூரியசக்தி போன்ற வகைகளில் மின்சாரத்தை வசதிகளை கிராமப்புற மக்களுக்கு வழங்கிட வழி வகை செய்வோம்.

**வாக்குறுதி 46: சபா மாநிலத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் மற்றும் இறையாண்மையை மீட்டெடுத்தல்.**

சபா மாநிலத்தின் எல்லையோர பாதுகாப்பு அம்னோ தேசிய முன்னணி ஆட்சியில் பல காலமாக மருட்டலுக்கு உள்ளாகியிருப்பது என்பது உண்மையே. கடந்த காலங்களின் அளவுக்கு மீறிய வழங்கப்பட்ட அந்நியருக்கான அடையாள அட்டையின் பின் விளைவு இன்று, அம்மக்களின் அன்றாட வாழ்க்கை நிலை பல அச்சுறுத்தலுக்குள்ளாகி வாழ்வாதாரத்தை இழந்து சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.

சபா மாநிலத்தின் சட்டவிரோத அந்நிய ஆவண விவகாரத்தில் நம்பிக்கை கூட்டணி ஆட்சியில் மறு நீதி விசாரணை கோருவதுடன், வாக்காளர் பட்டியலையும் தூய்மைப்படுத்தும் திட்டத்தையும் மத்திய அரசு மற்றும் மாநில அரசுடன் இணைந்து நடவடிக்கையை மேற்கொள்ளும். இதற்கு தலைமை வகிப்பதற்கு சபா மாநிலத்தில் தலைசிறந்த பண்பாளர் மண்ணின் மைந்தன் ஒருவர் நியமிக்கப்படுவார். எல்லையோர பாதுகாப்பின் வளையம் மென்மேலும் வலுப்படுத்தப்படும்.

**வாக்குறுதி 47: பரவலாக்கப்பட்ட சபா, சரவாக் ஆட்சி அதிகாரம்.**

நம்பிக்கை கூட்டணி ஆட்சியில் நிதி நிர்வாக முறை அமைப்பை விரிவுப்படுத்துவதுடன், 50% சபா, சரவாக்கின் வரி கொள்முதலை அம்மாநிலங்களின் பயன்பாட்டிற்க்கே ஒதுக்கீடப்படும்.

வர்த்தகம் மற்றும் வணிகம் தொடர்பான உரிமைகளை மலேசியாவின் திறந்த பொருளாதார கொள்கையின் வழி சபா, சரவா மாநிலத்திற்கு முழுமையாக வழங்கப்படும் நம்பிக்கை கூட்டணியின் ஆட்சியில். அந்நிய தொழிலாளர் தருவிப்பதிலும் அம்மாநிலங்களின் தேவைக்கேற்ப ஒதுக்கீடப்படும்.

அம்மாநிலங்களின் பொருளாதார வளர்ச்சிக்கு தடையாக அனைத்து வகையான விதிகளையும் நீக்கும் அதிகாரம் அம்மாநில அரசுகளுக்கு வழங்கப்படும்.

மிக முக்கிய நீர் வளம் மற்றும் எரிசக்தி சார்ந்த அரசின் துணை நிறுவனங்களை நிர்வாகிக்கும் பொறுப்பை அம்மாநிலங்களுக்கு முன்னுரிமைகள் வழங்கப்படும்.

சபா, சரவாக்கின் நீதிமன்றங்களின் செயற்பாடுகள் மிகவும் நுணுக்கமானவைகள். அம்மக்களின் வாழ்வியலை முன்னிறுத்தி அதற்கேற்ப நீதிமன்றங்களில் மறுசீரமைப்புகள் மேற்கொள்ளப்படும்.

பூர்வீக மண் சார்ந்த உரிமை கோரல்களுக்கு ஒரு சிறப்பு நடுவர் மன்றத்தின் முன்னிலையில் பூர்வீக நிலங்கள் குறித்த ஒதுக்கீடுகளும் சர்ச்சைகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு நிரந்திர தீர்வு வழங்கப்படும்.

**வாக்குறுதி 48: பூர்வீக நிலங்களை வழங்குவதுடன் பாதுகாப்போம்.**

சபா, சரவாக் மக்களின் பூர்வீக நிலங்களை பாதுகாக்க தவறிவிட்டது அம்னோ தேசிய முன்னணி அரசு. மேலும், அவர்களது நிலங்களை மிக குறைந்த விலையில் விற்றதுடன், சந்தைக்கு குறைவான விலையில் குத்தகைக்கும் வழங்கி வந்துள்ளது.

தேசிய விசாரணை அறிக்கை / சுஹாகாம் மனித உரிமை வழங்கியிருக்கும் அறிக்கையினை வழிமொழிந்து பூர்வீக நிலங்கள் தொடர்பான உரிமைகளை மறுசீரமைப்போம்.

முறையற்ற முறையில் அபகரிக்கப்பட்ட பூர்வக்குடி மக்களின் நிலங்களுக்கு மாற்றாக நம்பிக்கை கூட்டணி ஆட்சியில் முறையான இழப்பீடுகள் வழங்கப்படும்.

பூர்வீக நிலங்களை முறையாக அடையாளங் காண்டு ஒதுக்க நில அலுவலகத்திற்கு நிதி ஒதுக்கீடுகளையும், தகுதி வாய்ந்தவர்களையும் நம்பிக்கை கூட்டணி அரசு நியமிக்கும்.

பூர்வீக நிலங்கள் தொடர்பான நீதிமன்ற வழக்குகளும், சர்ச்சைகளுக்கும் முறையாக நடுவர் மன்ற தீர்ப்பாயத்தின் வழி தீர்வுக் காணப்படும்.

பூர்வக்குடி மக்களின் நிலங்கள் மீது எழுப்பப்படும் வளர்ச்சித் திட்டங்கள் முறையாக எந்த இயற்கை வள அழிப்பிற்கும் வழிவகுக்காத திட்டங்களையும், அவர்களின் பண்பாடுடன் சார்ந்த வளர்ச்சித் திட்டங்களுக்கு நம்பிக்கை கூட்டணி ஆட்சியில் முன்னுரிமை வழங்குவோம்.

**வாக்குறுதி 49: அரசாங்க பள்ளிகளை மக்களின் தேர்வாக உருமாற்றுவோம்.**

உயர்தர கல்வியானது சமுதாயத்தை எந்தவொரு பாகுபாடின்றி சமமாக முன்னோக்கி உயர்த்துவதற்கு ஒரு தூண்டுகோளாக விளங்குகின்றது. தரம் வாய்ந்த பள்ளிகள், தேசிய பள்ளிகள், சமய பள்ளிகள், தாய்மொழி பள்ளிகள் இருக்கையில் நமது பிள்ளைகளுக்கு நிச்சயம் ஒரு தரமிக்க கல்வியை வழங்கி வாழ்க்கையில் வெற்றி பெற வைக்க முடியும்.

ஒரு தரமிக்க கல்வியை வழங்குவது அரசாங்கத்தின் முக்கிய கடமையாகும் என்று பக்காதான் ஹராப்பான் கட்சியானது கருதுகிறது. ஆகவே, ஆசிரியர் துறையையும் கல்வியையும் ஒரு முக்கிய தொழிலாகக் கருதப்படுவதோடு தேவையான ஆதரவையும் வழங்க வேண்டும்.

பக்காத்தான் ஹராப்பான் கட்சியானது குறிப்பாக B40 மற்றும் M40 மக்களுக்கு அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று கூறுகின்றது. மேலும், உயர்க்கல்விக் கூடங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்கள் குறிப்பாகக் குறைந்த வருவாய் ஈட்டும் சமுதாயத்திற்கும் நகரப்புறத்தில் வாழ்பவர்களுக்கும் அதிக முன்னுரிமை வழங்கப்படும்.

அதுமட்டுமின்றி, பள்ளி போக்குவரத்துச் சேவையையும் கிராமம் புற சாலைகளையும் சீர்செய்வதோடு பள்ளி பேருந்துகளின் பாதுகாப்பையும் மேம்படுத்துகிறது.

கூட்டுறவு திட்டங்களின் வழி தனியார் மற்றும் அரசாங்க துறைகளானது தனது சேவையைக் குறிப்பாக பள்ளிகளைச் சீர்செய்வது போன்ற திட்டங்களில் ஈடுபடுவதற்குப் பொருத்தமான ஊக்கத்தொகை வழங்கப்படும்.

தற்பொழுது முறையின்றி செயல்பட்டு வரும் சில பள்ளிகளின் நிலையை நிச்சயம் சீர்படுத்துவோம். தற்பொழுது பள்ளிகளுக்கு அதிக ஒதுக்கீடு தேவைப்படுவதால் பல்வேறு நிதிகளிலிருந்து கூடுதல் நிதி சேகரிப்பட நேரிடுகிறது.

இது அமானா பள்ளி பற்றிய கருத்தினைப் புரிதலுக்கு முரணாக உள்ளது, எனவே செலவுகளைக் குறைக்குமே தவிர உயர்த்தாது.

பக்காத்தான் ஹராப்பானால் தற்போதுள்ள அமானா பள்ளியின் நிதிகளைச் சரிசெய்யும், இதனால் கல்வி நிதியின் செலவினம் முழுவதுமாக தனியார்

துறையால் நடைமுறைப்படுத்தவும் செலவைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியும். மிக உயர்ந்த செலவினங்களை உயர்த்தாமல் தரமான தரத்தை உயர்த்தக்கூடிய ஆப்ரேட்டர்கள் தேசிய பள்ளிகளின் தரம், சமய பள்ளிகளின் தரம், தாய்மொழி பள்ளிகளின் தரம் குறிப்பாக நகரப்புறம் மற்றும் உடல் குறைவு பள்ளி (pendidikan khas) தரத்தை மேம்படுத்த உதவுவார்கள்.

பக்காத்தான் ஹராப்பான் கட்சியானது அரசுக்கு சொந்தமான நிறுவனங்கள் குறிப்பாக B40 மற்றும் M40 மக்களுக்கு வழங்கப்பட்ட கல்வி உதவி தொகைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்யும். இந்த உபகாரச் சம்பளமானது ஆசிரியர்கள் தொடர்ந்து கல்வி கற்பதற்கும் பல பயிற்சிகளை மேற்கொள்வதற்கும் வழங்கப்படும்.

ஆசிரியர்களின் சுமையைக் குறைக்க இரண்டு வழிமுறைகள் உள்ளன. முதலாவதாக, ஆசிரியர்களுக்கு உதவி செய்வதற்கும் சில நிர்வாக வேலைகளைச் செய்வதற்கு ஒரு உதவியாளரை நியமிக்கப்படும். இரண்டாவதாக, பள்ளிகளின் தகவல் தொழில்நுட்பத்திறன்களைச் சீர்செய்யப்படும்.

பக்காத்தான் ஹராப்பான் கட்சியானது தேசிய கல்வி ஆலோசனைக் கவுன்சில் நிதியுதவி மற்றும் அவர்களின் கடமைகளை நிறைவேற்றுவதற்காகக் குறிப்பாக நமது நாட்டு தேசிய கல்விக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு கல்வி முறையை மேம்படுத்துவதற்காகப் போதுமான நிதி மற்றும் அதிகாரத்தையும் வழங்கப்படும். மேலும், முதன்மை மற்றும் மேல்நிலை பாடத்திட்டத்தை மேற்பார்வையிடுவதற்கான பொறுப்பை வழங்குவதோடு, அது அரசியல் அல்லது இனவாத அரசியல் கூறுகளால் எந்தவொரு விளைவையும் ஏற்படுத்தாது என்று பக்காத்தான் கூறுகின்றது. அதுமட்டுமின்றி, இந்தச் சபையானது மலாய், தாய்மொழி, ஆங்கிலம் ஆகிய மொழிகளின் தரத்தை அனைத்துப் பள்ளிகளில் உயர்த்துவதற்குப் போதிய அதிகாரத்தை வழங்கப்படும்.

பக்காத்தான் ஹராப்பான் கட்சியானது தொழில்நுட்ப மற்றும் தொழிற்துறை ஆகியவற்றை ஒரு முக்கிய துறையாகக் கருதப்படுவதோடு அத்துறையின் வளர்ச்சியை மேம்படுத்த வல்லது. சிறந்த தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கு இலவச பள்ளிகளில் அனுமதி வழங்கப்படும்.

சமய மற்றும் தேசிய வகை பள்ளிகளின் தரத்தை மேம்படுத்த போதிய ஒதுக்கீடு இருப்பதை உறுதிப்படுத்துவதன் மூலம் மேம்படுத்தப்படும். இந்தப் பள்ளிகளின் எண்ணிக்கைகள் பெற்றோர்களின் கோரிக்கை மற்றும் உள்ளூர் தொடர்பின் அடிப்படையில் திருப்திகரமாக இருக்க உறுதி செய்யும்.

## படிநிலை 5: நல்லிணக்கம், மிதமான நிலைத்தன்மை மிக்க உள்ளடக்கிய நாடாக மலேசியாவை உலக பார்வையில் நிலைநிறுத்துதல்.

### வாக்குறுதி 50: பல்கலைக்கழகம் மற்றும் உயர்கல்வி கூடங்களின் மாண்பை மீட்டெடுத்தல்.

உயர்தரக் கல்வி என்பது நாட்டின் கல்வி முறையைப் பூர்த்தி செய்வதற்கான ஓர் அடிப்படை அம்சமாகும். பல்கலைக்கழகம், உயர் கல்விக் கூடங்களில் கல்வி கற்க இலவசமாக வழங்குவதோடு, இக்கழகங்கள் யாவும் அதற்கான உரிமைகளைக் கொண்டு கடமைகளைச் செய்து முடிக்க வேண்டும்.

எடுத்துக்காட்டாக, பக்காத்தான் ஹராப்பான் ஆட்சியில் அமைந்துள்ள யூனிசெல் (UNISEL) இலவச கல்வியை வழங்கப்பட்டு வருகின்றது. இருப்பினும், நமது தேசிய கட்சியின் பொறுப்பற்ற செயலினால் தற்பொழுது கடன் சுமையைத் தாங்கும் கட்டாயத்தில் உள்ளது.

பக்காத்தான் ஹராப்பான் கட்சியானது நாட்டின் கல்விக் கூடங்களின் விதிமுறைகளை மேம்படுத்துவதோடு மட்டுமல்லாமல் தரமிக்க கல்வி சேவையைத் தரவல்லது. மேலும், அனைத்துக் கல்விக் கூடங்களும் சரியான சுய ஆட்சியைக் கொண்டிருக்க வேண்டும். மாணவர் சங்கங்களுக்கு நிறுவனங்களின் மூலம் ஒரு தனி ஒதுக்கீடு வழங்கப்படுவதோடு, நாட்டின் வளர்ச்சிக்கு ஒற்றுமையாகச் செயல்படுவதற்கும் வழிவகுக்கக் கூடும்.

பல்கலைக்கழக நிர்வாக இயக்குநர்கள் தங்களின் அதிகாரத்தைப் பயன்படுத்தி துணை ஆலோசகர்களைத் தகுதி அடிப்படையில் நியமிக்கப்படுவார்கள். அதுமட்டுமின்றி, செயல்திறன் மதிப்பீடு, சம்பளத்தை நிர்ணயித்தல், வெகுமதி வழங்குதல், நிதி ஒதுக்கீடு மேலாண்மை போன்ற செயல்களை நிர்ணயிக்கும் உரிமைகளைக் பல்கலைக்கழக நிர்வாக இயக்குநனர்களால் மேற்கொள்ளப்படும்.

டிவெட் (TVET) துறையை மேலும் சீர்செய்வதோடு உலகளாவிய முறையில் நடைமுறைப்படுத்தப்படும். இதன்வழி, ஒவ்வொரு நிறுவனங்களும் பயிற்சிகளை மேற்கொள்வதற்கு நிதி ஒதுக்கீடு வழங்கப்படும்.

வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்புச் சேர்க்கைக்கு (UEC) சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்பட்டது. 2004-ஆம் ஆண்டில் இச்சான்றிதழ் தனியார் பல்கலைக்கழக பட்டப்படிப்பிற்கும் அங்கீகரிக்கப்பட்டது. 2010-ஆம் ஆண்டில், மலேசிய கல்வி அமைச்சின் சார்பில் இச்சான்றிதழ் சீன மொழியைக் கொண்டிருக்கும் ஆசிரியர் பயிற்சி கழகத்திலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால், அரசாங்க கல்விக் கூடங்களில் இதுவரை இச்சான்றிதழை ஏற்றுக்கொள்ளவில்லை.

பக்காத்தான் ஹராப்பான் கட்சியானது இச்சான்றிதழை அங்கீகரிப்பதோடு எஸ்.பி.எம் தேர்வில் குறைந்தது மலாய்மொழியில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு வாய்ப்புகள் வழங்கப்படும். அரசாங்க கல்விக் கூடங்களில் இச்சான்றிதழை ஒரு முக்கிய அனுமதி பாரமாக நிர்ணயிக்கப்படும்.

தற்பொழுது கல்விக் கடனுதவி தொகையானது மக்களுக்குச் சுமையை ஏற்படுத்த வல்லது என்று பக்காத்தான் ஹராப்பான் கருதுகின்றது. ஆகவே, பக்காத்தான் ஹராப்பான் கட்சியானது இக்கல்வி கடனுதவி தொகையைச் சீர்செய்யும். அதாவது, வருமானம் நான்காயிரத்துக்குக் குறைவாக ஈட்டும் மக்களின் கல்விக் கடனுதவி தொகையைப் பக்காத்தான் ஹராப்பான் கட்சி ஏற்றுக்கொள்ளும். மேலும், கல்விக் கடனுதவி தொகையை செலுத்த இயலாதவர்களின் கருப்புப் பட்டியலை முறியடிக்கும்.

இலவச உபகார சம்பளத்தையும் கல்விக் கடனுதவி தொகையையும் குறிப்பாக B40 மற்றும் M40 மக்களுக்கு அதிகரிக்கப்படும். இதன்வழி, அவர்களின் சுமையைக் குறைக்க இயலும். அரசாங்க நிறுவனங்கள் இந்த முயற்சியை வெற்றி பெற செய்ய வேண்டும்.

பக்காத்தான் ஹராப்பான் கட்சியானது, தொழில்நுட்பத் திறன்களின் வழி அதாவது இணையம் வழி மாணவர்கள் தங்களின் உயர்கல்வியைத் தொடங்கி பயன்பெறுவதற்கு வாய்ப்பளிக்கின்றது.

**வாக்குறுதி 51: உடற்பேறு குறைந்தவர்களின் சமூக நலனை காக்குதல்**

நாட்டின் வளர்ச்சிக்கு அனைத்துக் குடிமக்களுக்கும் சமமாக இருப்பதை உறுதி செய்வதற்காக, ஊனமுற்றோருக்கு உதவும் பொறுப்பு அரசாங்கத்திற்கு உள்ளது. ஊனமுற்றோர்களுக்குச் சேவை செய்வதற்கு UMNO மற்றும் தேசிய கட்சியும் முன்நிர்கவில்லை. மேலும், நாட்டின் முன்னேற்றத்திற்கும் ஊனமுற்றோர்களை அரசாங்கத்தால் தள்ளி வைக்கப்பட்டது.

பக்காத்தான் ஹராப்பான் கட்சியானது ஊனமுற்றோர்களுக்கான ஓர் ஆய்வு மையம் ஒன்று உருவாக்கப்படும். ஊனமுற்றோர்களுக்கான சிறப்பு மையம் ஒன்று அனைத்து நிறுவனங்களின் ஒற்றுமையின் கீழ் அமைக்கப்படும்.

பக்காத்தான் ஹராப்பான் கட்சியானது, சிறப்பு கல்விக்கு அதிக ஒதுக்கீடு, ஆசிரியர் பயிற்சிக்கு நிதி ஒதுக்கீடு, வகுப்பிற்குத் தேவைப்படும் பொருள்கள் வாங்குதல், தேவைப்படும் இடங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க போன்றவைக்கு அதிக ஒதுக்கீடுகள் வழங்கப்படும். இதற்கான நோக்கம் என்னவென்றால், ஒரு சிறந்த கற்றல் சூழலை உருவாக்குவதே ஆகும்.

பக்காத்தான் ஹராப்பான் கட்சியானது தனியார் மற்றும் சமூக தொழில் முனைவோரிடம் ஒன்றாக இணைந்து பல தொழில்நுட்ப மற்றும் தொழில்சார் பயிற்சிகளை வழங்கவுள்ளது.

தனியார் நிறுவனங்கள் மக்களுக்குப் பல வசதிகளைச் செய்து தருவதற்குச் சிறந்த முறையில் ஊக்கம் வழங்கப்படும். மேலும், அனைத்து அரசாங்க நிறுவனங்கள் நிச்சயம் பல வசதிகளைக் கொண்டிருக்க வேண்டும்.

ஊனமுற்ற பராமரிப்பு மையங்கள் யாவும் தொண்டு நிறுவனங்களின் மேற்பார்வையில் பராமரிக்கப்படும். ஊனமுற்றோர்களுக்குத் தேவைப்படும் ஆதரவு நிச்சயம் வழங்கப்படும்.

**வாக்குறுதி 52: குற்றச்செயல் மற்றும் சமூக அவலங்களை ஒழித்தல்**

அம்னோ மற்றும் தேசிய முன்னனி கட்சியானது, மலேசியாவில் நிகழும் ஊழல்களைத் தடுப்பதற்கு முயற்சி செய்கின்றது. ஆனாலும், இச்செயலானது மக்களின் நம்பிக்கைக்கு முரணாக உள்ளது. ஏனென்றால், மக்கள் தினமும் பல ஊழல் சார்ந்த தகவல்களைப் படித்துக் கொண்டுதான் வருகின்றனர். பல ஊடகங்களின் வழி மக்கள் நாட்டின் ஊழல்களைக் கண்டு வருகின்றனர். மக்களின் அனுபவங்கள் யாவும் அம்னோ மற்றும் தேசிய முன்னனி கட்சியின் திட்டங்களுக்கு எதிராக உள்ளது.

மலேசியா ஒரு நலமிக்க நாடாகவும், நல்ல அதிகாரிகளுடன் அதாவது காவல் துறையினர், போதுமான உறுப்பினர்கள் கொண்ட நாடாக விளங்க வேண்டும் என்று பக்காத்தான் ஹராப்பான் கருதுகின்றது. இதன்வழி, நாட்டில் நிகழும் ஊழல்களைத் தவிர்த்து மலேசியா ஒரு சிறந்த முன்னுதாரண நாடாக விளங்கும் என்பது உறுதி.

பக்காத்தான் ஹராப்பான் கட்சியானது அரச காவல் படையினருக்குப் போதிய நிதி ஒதுக்கீடு வழங்குவதோடு மட்டுமின்றி காவல் துறையில் பணி ஆற்றுபவர்களுக்குச் சம்பளம் உயர்வு மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு இக்கட்சி தொடர்ந்து பங்காற்றும்.

அரச காவல் துறையானது தொழிலாளர்கள் தங்கள் தொழில் சார்ந்த பல பயிற்சிகளை மேற்கொள்வதற்குக் குறிப்பாக கொலை, கொள்ளை, கற்பழிப்புப் போன்ற ஊழல்களை முறியடிக்கும் பயிற்சிகளுக்கு அனுப்பப்படுவர்.

அரச காவல் துறையும் சம்பந்தப்பட்ட கட்சி உறுப்பினர்களும் ஒன்றிணைந்து ஊழல்களைத் தடுக்க முயல வேண்டும்.

அமலாக்க உறுப்பினர்கள் முடிந்தவரை சாராயம், வெண்சுருட்டு போன்றவற்றை ஒழிக்க

வயது குறைந்தவர்களுக்கு அல்லது புறநகர் பகுதிகளில் மலிவு விலை மது விற்போர் அல்லது தயாரிப்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இளையோர்கள் மத்தியிலான பகடி துன்புறுத்தல் அல்லது குற்றச்செயல்கள் குறித்து நம்பிக்கை கூட்டணி அரசாங்கத்தில் கடுமையாக கருதுவதுடன், அரசின் துணை நிறுவனங்கள் மற்றும் பிற சமூக நல இயக்கங்களுடன் இணைந்து இதற்கு முற்றுப்புள்ளி வைக்கம்.

போதை பித்தர்களின் மறுவாழ்விற்கு அரசு சார்பற்ற இயக்கங்களுடன் ஈணைந்து அவர்களின் நல்வாழ்விற்கு பல திட்டங்களை மேற்கொள்ளும்.

போதைப்பொருளுக்கு அடிமையானவர்களை அடையாளம் கண்டு துரித நிவாரணி அளிக்கும் செயல்முறையை செயல்படுத்தும்.

**வாக்குறுதி 53: குடும்பம் மற்றும் சமூக உறவை வலுப்படுத்தல்**

குடும்பம் மற்றும் சமூகங்களுக்கிடையிலான நல்லிணக்கமே சிறந்த மக்கள் கொண்ட நாடாக கருதப்படுகிறது. இஸ்லாம் மற்றும் பிற மதங்கள் அனைத்தும் குடும்ப உறவு மற்றும் சமூக நல்லிணக்கத்தை வலியுறுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. நாட்டின் இன்றைய விகித கணக்கெடுப்பில் 15 நிமிடங்களுக்கு ஒரு விவாகரத்து நடைபெறுவதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. நம்பிக்கை கூட்டணியின் ஆட்சியில் குடும்பம் மற்றும் சமூக நல்லிணக்கத்திற்கு மேலும் வலு சேர்க்க முயற்சிகள் மேற்கொள்வோம்.

தேசிய முன்னணியின் ஆட்சியின் கீழ் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம் நாளுக்கு நாள் மோசம் அடைந்து வருகிறது பெரும் ஆபத்திற்கு வழிவகுத்து கொண்டிருக்கின்றன. அதனை சீர்செய்யும் வகையில் நம்பிக்கை கூட்டணியின் ஆட்சியில் பலவேறு நலத்திட்டங்கள் மேற்கொள்ளப்படும். மலேசியா பல்வகை பண்பாடு, கலாச்சாரம், இனங்கள் அமைதியாக வாழும் முன்னுதாரன நாடாக திகழும் நம்பிக்கை கூட்டணியின் ஆட்சியில்.

திருமணமான தம்பதிகள் மற்றும் திருமணமாக தயாராக இருக்கும் தம்பதிகளுக்கு நாட்டின் வரி விதி அமைப்பில் கூட்டு வரி விலக்கு செயல்முறை திட்டத்தை அமல்படுத்தும்.

குடும்பஙக்ளை பிரிந்து வெளி மாநிலங்களில் வேலை தேடி போகும் நிலைமை மாற்றியமைத்து, அனைத்து பகுதிகளில் சமநிலை பொருளாதாரம் மற்றும் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தி கொடுக்க நம்பிக்கை கூட்டணியின் ஆட்சியில் திட்டங்கள் வகுக்கப்படும்.

குடும்பங்கள் மற்றும் அண்டை வீட்டார் உறவுகளிடையே நல்லுறவு மலர சமூக நல நடவடிக்கைகள் மற்றும் அதிகமாக ஒருவருடன் ஒருவர் தொடர்பு கொள்ள பொது திடல்கள் மற்றும் பூங்காக்கள் உருவாக்கப்படும் நம்பிக்கை கூட்டணியின் ஆட்சியில்.

குடும்ப நல்லுறவை பேணி காத்து முன்னுரிமை வழங்கும் பெரும் நிறுவனங்களுக்கு நம்பிக்கை கூட்டணியின் ஆட்சியின் வரி விலக்கு அளிக்கப்படும்.

**வாக்குறுதி 54: சமுதாய கட்டமைப்பு, சிவில் சமூக மற்றும் சமூக தொழில்முனைவோர் ஆகியவற்றை மேம்படுத்துதல்.**

சமூக தொழில்முனைவோர், சமூக அமைப்புகள் மற்றும் சிவில் சமூகங்கள் நவீன நாட்டின் மிக முக்கிய அமைப்புகளாக விளங்குகின்றன. ஆசியாவின் வரலாற்றில் இப்பிரிவினர்களுக்கு நீண்ட வரலாறுகள் உண்டு.

அரசாங்கத்துக்கும் மக்களுக்கும் இடையே நல்லுறவு பாலத்தை வளர்க்கும் அமைப்புகளாக இவர்கள் உதவி புரிந்து வந்துள்ளனர்.

மேர்குறிப்பிட்ட இந்த அமைப்புகளின் வளர்ச்சிக்கு நம்பிக்கை கூட்டணியின் ஆட்சியில் முன்னுரிமை வழங்கப்படுவதோடு, ஆசியாவில் சிறந்த நாடாக மலேசியாவை நிலைநிறுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

சமூக நல்லிணக்கத்தை வளர்க்கும் அரசு சார்பற்ற அமைப்புகளின் பதிவுகளை எளிமைப்படுத்த நம்பிக்கை கூட்டணியின் ஆட்சியில் வழிவகுக்கப்படும்.

அரசியல் தலையீடுகள் இல்லாமலும், எந்த வரி விதிப்பும் விதிக்காமல் அரசு சார்பற்ற இயக்கங்கள் சுதந்திரமாக பணியற்ற வாய்ப்புகள் வழங்கப்படும்.

அரசு சார்பற்ற இயக்கங்களின் கண்காணிக்கும் நடவடிக்கை குழுவை தனி பதிவு துறையை உருவாக்கும், அதன் கீழ் செய்லபடவும் நம்பிக்கை கூட்டணியின் ஆட்சியில் வழிவகை செய்யப்படும்.

**வாக்குறுதி 55: இளையோருக்கான பல்வகை நடவடிக்கைகள்**

இளைஞர்கள் மத்தியில் சமூகம் சார்ந்த நலத்திட்டங்களில் கவனம் செலுத்தும் மனப்பாண்மையை வளர்த்தெடுக்கும் முயற்சியில் மென்மேலும் திட்டங்கள் வகுக்கப்படும்.

விளையாட்டு மற்றும் சமூக நலத்தை காக்கும் நடவடிக்கைகளுக்கு முதன்மை ஆதரவு அளிக்கும்.

அதிகமான நூல் நிலையங்கள் மற்றும் சமூக மண்டபங்கள் இளைய சமுதாயத்தின் பயன்பாட்டிற்கு தங்களை வளர்த்துக் கொள்ளும் தளமாக வாய்ப்புகள் வழங்கப்படும் நம்பிக்கை கூட்டணியின் ஆட்சியில்.

அரசுக்கு சொந்தமான மைதானங்களை குறைந்த விலையில் வாடகைக்கு கிடைக்கும் வகையில் இளைஞர்களுக்கு வாய்ப்புகள் ஏற்படுத்தி கொடுக்கப்படும். அரசின் அனைத்து நிறுவனங்களும் அதற்கு ஆதரவு அளிக்க வழி வகை செய்யப்படும்.

இளைய சமுதாயத்தினரிடையே தொழில்முனைவோர்கள் அதிகம் உருவாக அரசு நிறுவனங்கள் மற்றும் அமைச்சரவையின் ஒத்துழைப்போடு நல்திட்டங்கள் அமல்படுத்தப்படும்.

வாக்குறுதி 56: மக்கள் நல்லிணக்க ஆலோசனை மன்றம் துவக்கப்படும்.

உலகத்தின் பார்வையில் சிறந்த நல்லிணக்க சமூகத்தை உருவாக்கும் முயற்சியில் நம்பிக்கை கூட்டணியின் ஆட்சியில் தேசிய ரீதியில் மக்கள் நல்லிணக்க ஆலோசனை மன்றம் ஒன்று துவக்கப்படும்.

**இம்மன்றத்தின் நோக்கம் :**

**·	இனங்களுக்கு மத்தியிலான நல்லுறவை மேம்படுத்துதல் மற்றும் பிரிவினையை களைத்தல்**

**·	இனங்களுக்கிடையிலான மத நல்லிணக்கத்தை வலியுறுத்தும் வகையில் ஆரம்ப கால நிலையிலே கல்வி முறையில் சீரமைப்பு மேற்கொள்லுதல்.**

**·	மத நல்லிணக்கம், கருத்து பரிமாற்றம், சிந்தனை மாற்றங்கள் ஏற்படுத்தும் தளமாக செயல்படுத்தல்.**

**·	மத, இன ரீதியிலான அரசியல் பிரிவினைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் தளமாக இயங்கவும்.**

**·	நல்லிணக்கத்தை காத்து, மிதமான நம்பிக்கையின் வழி மக்களை தயார்படுத்துதல், மாறாக தீவிர மனப்பாண்மையை ஒழிக்கும் தளமாகவும் செயல்படுதல்.**

**·	தேசிய நல்லிணக்க சட்டத்தை அமல்படுத்தி இனங்கள் மற்றும் மதங்கள் மத்தியில் நல்லிணக்கத்தை வளர்க்கும் முயற்சியாக இத்தளம் செயல்படும்.**

இம்மன்றத்தின் ஆலோசனையின் வழி நடத்தப்பட்ட கலந்துரையாடல்கள் மற்றும் ஆலோசனைகள் தேசிய அமைச்சரவையில் இணைக்கப்பட்டு விவாதிக்கப்பட்டு, திட்டங்களாக அமலாக்கம் செய்யப்படும்.

இம்மன்றத்தில் உறுப்பினர்களானவர்கள் இத்துறையில் பண்டித்துவம் மற்றும் சமூகத்தில் மதிக்கப்படும் நிலையில் உள்ளவர்களாக அங்கம் வகிப்பார்கள்.

**வாக்குறுதி 57: மலேசியாவை அதன் நேர்மை அடையாளத்தின் வழி அடையாளம் காணுதல், மாறாக ஊழலின் வழியல்ல.**

ஊழலுக்கு எதிராக மாபெரும் போரை நம்பிக்கை கூட்டணியின் ஆட்சியில் மேற்கொள்ளப்படும், ஊழல் குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனைக்கு உட்படுவார்கள். உலக ஊழல் அமைப்பின் கீழ் மலேசியா ¨ விற்கு சிறந்த நற்பெயரை ஏற்படுத்தும் முயற்சியில், நாட்டின் ஊழல் தடுப்பு நடவடிக்கைகளுக்கு நம்பிக்கை கூட்டணியின் ஆட்சியில் முன்னுரிமை வழங்கப்படும்.

2030 ஆம் ஆன்டுக்குள் மலேசியா ஊழலற்ற நாடுகளின் பட்டியலில் முதல் பத்தாவது இடத்தில் இடம்பெறும் கடுமையான முயற்சிகளை ஊழலுக்கு எதிராக எடுக்கப்படும்.

மலேசியா நேர்மை நிறுவனத்துக்கு கூடுதல் நிதி ஒதுக்கப்படுவதுடன் நாட்டின் நேர்மைமிகு திட்டத்திற்கு மென்மேலும் நடவடிக்கைகளை மேற்கொள்ள திட்டங்கள் வகுக்கப்படுவதோடு, நாடாளுமன்றத்தில் அத்திட்டத்தினை நம்பிக்கை கூட்டணியின் ஆட்சியில். விவாதிக்கப்படும்

நாட்டின் நற்பெயருக்கு நல்லபெயரை ஈட்டுவதற்கும் அரச நிறுவனங்கள் நேர்மையுடன் செயல்படவும், மலேசிய நேர்மை ஆணையத்திற்கு கூடுதல் அதிகாரம் வழங்கப்படும் நம்பிக்கை கூட்டணியின் ஆட்சியில். இவ்வாணையத்திற்கு துணைப்பிரதமர் தலைமையில் சிறப்புடன் செயல்படவும் அமலாக்கம் காணப்படும்.

**வாக்குறுதி 58: எல்லை அச்சுறுத்தல், அத்துமீறல், பொருட்கள் மற்றும் மனித கடத்தலுக்கு எதிராக நம்பிக்கை கூட்டணி**

தரை மற்றும் கடல் வழியிலான எல்லை பகுதிகளில் காணப்படும் அச்சுறுத்தலுக்கு அம்னோ தேசிய முன்னணி கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை, சபா மற்றும் சரவாக் உட்பட.

சீன கடற்கரையில் நாம் நாட்டின் மீனவர்களுக்கு பெறும் அச்சுறுத்தல் ஏற்படுகின்றன. நமது சொந்த நாட்டின் மீனவர்களின் படகுகள் அபகரிக்கப்படுகிறது. இதனை தடுத்து நிறுத்த உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள கடற்படைக்கு அதிகாரத்தை விரிவாக்கும். ஆசியா பிரந்தியத்தில் கடல் எல்லையோர பிரச்சனைகளுக்கு வெளியுறவுத்துறையின் கீழ் பிரச்சனைகளுக்கு நல்லத்தீர்விற்கு வழிவகுக்கும்.

அந்நிய கப்பல்களின் நடமாட்டத்தால் லாஹட் டத்து பிரச்சனை மீண்டும் தலைதூக்கும் அச்சத்தில் சபா மற்றும் சரவாக் மாநிலத்தில். சமீபத்திய பெர்லிஸ் எல்லையோரத்தில் வாங் கெலியான் மனிதக்கடத்தல் அவலமும் உற்றுநோக்கத்தக்கது. மேலும், நாடு முழுவதிலும் சட்டவிரோத பொருள் கடத்தல் தீவிரமாக நடந்து கொண்டிருக்கின்றன அம்னோ தேசிய முன்னணியின் ஆட்சியின் தோல்வியை பிரதிபலிக்கின்றன.

நாட்டின் எல்லையோர இறையாண்மைக்கு எதிராக துளிக்கூட சமராசம் கொள்வதில்லை என்பதில் நம்பிக்கை கூட்டணி உறுதியாக இருக்கின்றன. எல்லையோர பாதுகாப்பு பிரச்சனைகளுக்கு முன்னுரிமை வழங்குவதுடன், இந்தோநேசியா, பிலிப்பின்ஸ் ஆகிய நாடுகளுடன் பேச்சு வார்த்தைகளை நடத்தி எல்லைப் பிரச்சனைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும்.

அமலாக்க துறையின் நேர்மை விவகாரத்தில் நம்பிக்கை கூட்டணி அரசு துளிக்கூட சமரசம் கொள்ளாது. நாட்டின் இறையாண்மை மக்களின் பாதுகாப்பு ஆகியவற்றை கடுமையாக கருதி நாட்டின் ஊழல் தடுப்பு ஆணையம் பாதுகாப்பு அமலாக்க பிரிவில் கடுமையான கண்காணிப்பை மேற்கொள்ளும். கீழ் நிலை அதிகாரி முதல் மேல் நிலை அதிகாரி வரை எந்த

பாகுபாடும் இல்லாமல் நடவடிக்கை எடுக்கப்படும் நம்பிக்கை கூட்டணியின் ஆட்சியில்.

**வாக்குறுதி 59: ரோஹிங்கிய மற்றும் பாலஸ்தீன பிரச்சனைகளை களைய முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.**

ரோஹிங்கிய மற்றும் பாலஸ்தீன விவகாரங்களில் அம்னோ தேசிய முன்னணி நல்ல நாடகமாடுகிறது. அவர்களின் உரிமைக்கு ஆதரவாக எந்த முயற்சிகளையும் மேற்கொள்ள மறுக்கிறது. அனைத்துலக ரீதியில் நடவடிக்கைகளை மேற்கொள்ள துளியளவும் நடவடிக்கைகளை எடுக்க மறுக்கிறது.

பொய்யான போராட்டத்தை மேற்கொண்டு துளியும் பயனளிக்காத அம்னோ தேசிய முன்னணியின் நடவடிக்கைகளுக்கு மத்தியில், நம்பிக்கை கூட்டணியின் ஆட்சியில் அனைத்துலக ரீதியில் இவ்விவகாரங்களுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அனைத்துல இஸ்லாமிய மன்றம் மற்றும் உலக நாடுகளின் சபை ஆகியவற்றுக்கு பாலஸ்தீன பிரச்சனைகளை கொண்டு செல்வோம்.

1951 ஐநா அகதிகள் சட்டவிதிப்படி மலேசியாவில் தஞ்சமடைந்த அகதிகளுக்கு உரிய உதவிகளை கிடைக்க நம்பிக்கை கூட்டணியின் ஆட்சியில் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

வாக்குறுதி 60: அனைத்துலக கட்டமைப்பின் செயல்பாட்டின் மாண்பை நிலைநிறுத்துவோம்.

சிறந்த நிர்வாக அரசாங்க ஒருங்கிணைப்பின் கீழ் நம்பிக்கை கூட்டணி அரசு செயல்படுவதுடன், திறந்த வெளி நிர்வாகம் மற்றும் கொள்கை என்ற வகையில் பிற நாடுகளுடன் இணைந்து கூட்டாக செயல்படும்.

அனைத்துலக பன்னாட்டு நிறுவனங்களுடன் கூட்டாக இணைந்து மலேசியாவின் பெரு நிறுவனங்களும் இணைந்து பணியாற்ற திட்டங்கள் மேற்கொள்ளப்படும் நம்பிக்கை கூட்டணியின் ஆட்சியில்.

அனைத்துல பன்னாட்டு சமூக இயக்கங்கள், உலக வங்கி மற்றும் சிவில் சமூக இயக்கங்களுடன் இணைந்து நாட்டின் வளர்ச்சியை கருத்தில் கொண்டு கூட்டாக இயங்கும் நம்பிக்கை கூட்டணி அரசாங்கம்.

மலேசிய வளர்ந்து வரும் நாடுகளுக்கு நல்ல முன்னுதாரனமாக திகழும் என்பதை வலியுறுத்தி, உலக நாடுகளுடன் இணைந்து குறிப்பாக அனைத்துலக இஸ்லாமிய மன்றத்திற்கு தலைமை தாங்கும் பொறுப்பை மீண்டும் வகிக்க முயற்சிகளை மேற்கொள்ளும், நாட்டின் தேசத்தந்தை துங்கு அப்துல் ராஹ்மான் வகித்தைப் போன்று.

ஆசியானில் மலேசியாவின் பங்களிப்பை ஊக்கப்படுத்த, ஆசிய நாடுகளுடன் இணைந்து பல வகைகளில் கூட்டாக திட்டங்களை மேற்கொள்ளும் முயற்சிகளை வழிவகுப்போம். மேலும், ஆசிய ரீதியில் வலுவான பொருளாதார நிலையை அடைந்துள்ள மலேசியா, ஆசியான் பொருளாதார ஆய்வுக்குழுவில் முதன்மை பங்காற்றி பங்களிப்பை வழங்கும்.

விஸ்மா புத்ராவின் செயல்பாட்டுக்கு கூடுதல் நிதி ஒதுக்கப்படும் மேலும், ஆசியான் ரீதியில் மனித உரிமைகள் குறித்த ஆணையத்திற்கு கூடுதல் பிரதிநிதியை கோரும் நம்பிக்கை கூட்டணியின் ஆட்சியில்.

அனைத்துலக ரீதியில் வெளியுறவுத்துறையில் சிறந்து விளங்க நாட்டின் தகுதி வாய்ந்த வெளியுறவுக் கொள்கையில் சிறப்புத்தேர்ச்சிப் பெற்றவர்களை நியமித்து நாட்டின் நற்பெயருக்கு புகழை ஈட்டுவோம். நம்பிக்கை கூட்டணியின் முதலாம் ஆண்டு ஆட்சியில் மலேசியர்கள் மிக முக்கிய பொறுப்புகளை ஆசியான் ரீதியிலும், காமன்வேல்த் செயலாலர் பொறுப்பிலும் அங்கம் வகிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

ஆசியாவின் மறுமலர்ச்சிக்கு வித்திடும் வகையில் உலகளாவிய ரீதியில் சீரமைக்கப்பட்ட நாடுகளுடன் இணைந்து மலேசியா தொடர்ந்து பணியாற்றும் நம்பிக்கை கூட்டணியின் ஆட்சியில்.

2030 நிலையான வளர்ச்சியை இலாக்காக கொண்ட நாடுகளுடன் இணைந்து முதன்மை பங்களிப்பை மலேசிய வழங்குவதுடன், வலிமை வாய்ந்த மத்தியஸ்தர் நாடாக மலேசிய திகழுவதை உறுதி செய்வோம். மேலும், நடுநிலையை விரும்பும் நாடாக மலேசியாவின் தனித்துவத்தை நிலைநிறுத்துவோம்.

**ஃபெல்டா குடியேற்றவாசிகளுக்கான சிறப்பு திட்டங்கள்**

1956-இல், தேசத்தந்தை துங்கு அப்துல் ரஹ்மான் காலத்தில் ஃபெல்டாவின் சரித்திரம் தொடங்கியது. அத்திட்டத்தை மேம்படுத்தி, மலாய்க்காரர்களின் பொருளாதார நிலையை உயர்த்த வேண்டும் என்ற வேட்கை கொண்டவர், துன் ராசாக். ஃபெல்டா நில குடியேற்றத்தின்வழி, மலாய்க்காரர்களுக்கு நிலம் வழங்கி, அவர்களுடைய வாழ்வுக்கு புத்துயிர் கொடுக்க முனைந்தார், துன் ராசாக். துன் ராசாக்கின் கனவு திட்டத்தின் வழி, பல்லாயிரக்கணக்கான மலாய்க்காரர்களும், அவர்களுடைய சந்ததியினரும் பலனடைந்தனர்.

ஆனால், இன்று பேராசை பிடித்த அம்னோ-தேசிய முன்னணி தலைவர்களால் ஃபெல்டா கொள்ளையடிக்கப்படுகின்றது. ஃபெல்டாவுக்கு சொந்தமான நிலங்கள், கண்டபடி பெயர் மாற்றப்படுகின்றன. ஒரு அரசாங்க நிறுவனமான ஃபெல்டாவின் நிர்வாக வாரியம், தங்களுக்கு என்ன நடக்கின்றது என்று தெரியவில்லை என்று கூறுமளவுக்கு மிக மோசமாக இருக்கின்றது.

ஃபெல்டாவின் கோடிக்கணக்கான சொத்துக்களை ஒரு குறிப்பிட்ட தரப்பினர் சுருட்டிக்கொள்ள முனையும் வேளையில், ஃபெல்டா நில குடியேற்றவாசிகள் அவர்தம் குடும்பத்தினரின் நிலை கேட்க நாதியற்றவர்களை போல உள்ளது. குடியேற்றவாசிகளின் கடன், இலட்ச கணக்கில் ஆவதற்கு காரணம், ஃபெல்டா நிர்வாகத்தினரின் முறைகேடாகும். இரண்டாவது, மூன்றாவது தலைமுறை ஃபெல்டா குடியேற்றவாசிகள், வேலையில்லா திண்டாட்டம், முறையில்லாத கட்டமைப்புகளால் பாதிக்கப்பட்டுள்ளனர். இளம் தலைமுறையினரே சமூக சீர்கேடுகளால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**வாக்குறுதி 1 : ஃபெல்டாவில் நிகழும் முறைகேடுகளை நிறுத்துதல்**

பக்காத்தான் ஹாராப்பான் அரசாங்கம், ஃபெல்டா குடியேற்றவாசிகள் அவர்தம் சந்ததியினர் பாதிக்கப்படாமலிருப்பதை உறுதிசெய்யும். முறைகேடுகளில் ஈடுபட்ட அரசியல்வாதிகள், அவர்தம் சுற்றத்தினரை, அவர்கள் புரிந்த முறைகேட்டுக்காக நீதிமன்றத்தில் நிறுத்துவோம்.

ஃபெல்டாவை முழுமையாக விசாரணை செய்யும் வண்ணம், ஒரு அரச விசாரணை ஆணையம் அமைக்கப்படும். அந்த அரச விசாரணை ஆணையம் ஃபெல்டாவை மீண்டும் அதன் பொற்காலத்துக்கு கொண்டு செல்லும் வழிமுறைகளை ஆரய்ந்து அரசாங்கத்தின் பார்வைக்கு முன்வைக்கும். இந்த அரச விசாரணை ஆணையமானது, ஃபெல்டா கையெழுத்திட்டுள்ள அனைத்து ஒப்பந்தங்களையும், குறிப்பாக அம்னோ-தேசிய முன்னணியை சார்ந்த பினாமி நிறுவனங்களுடனான ஒப்பந்தங்களை மறுபரிசீலனைக்கு உட்படுத்தும்.

அரச விசாரணை ஆணையத்தின் பரிந்துரைகளை செயல்படுத்த ஒரு சிறப்பு அமைச்சரவை குழு அமைக்கப்படும். இந்த சிறப்பு அமைச்சரவை குழுவானது, ஃபெல்டா குடியேற்றவாசிகளின் பிரச்சனைகளை கேட்டறிந்து, தீர்வுகளை முன்வைக்கவும் கடப்பாடு கொண்டிருக்கும்.

ஃபெல்டாவிடமிருந்து கையாடப்பட்டிருக்கும் நிலங்கள், சொத்துக்கள், சட்டப்படி மீட்டுக்கொள்ளப்படும்.

தற்பொழுதுள்ள நில சட்டம் (நில குடியேற்றவாசிகள்) 1960, ஃபெல்டா குடியேற்றவாசிகள் நிலம் குறித்த பிரச்சனைகளை விவாதிக்க, பஞ்சாயத்து வாரியத்துக்கு மட்டுமே அதிகாரம் அளிக்கின்றது. இந்த முறையானது, ஃபெல்டா குடியிருப்புவாசிகளுக்கு நியாயத்தை தராது. ஆகையால், குடியேற்றவாசிகள் தங்களுடைய வழக்குகளை நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லும் வண்ணம், சட்டத்திருத்தத்தை பக்காத்தான் ஹாராப்பான் அரசாங்கம் கொண்டுவரும்.

**வாக்குறுதி 2 : ஃபெல்டா நிர்வாகத்தை சீர்படுத்துதல்**

ஃபெல்டா, தனது அடிப்படை நடவடிக்கையான தோட்டப்புற மேம்பாட்டை முன்னிறுத்தும் வகையில் நிர்வாகம் நடைமுறைப்படுத்தப்படும். ஃபெல்டா நில உரிமைத்துவமும், குடியேற்றவாசிகளுக்கும் நீதியளிக்கும் வண்ணம் மறுபரிசீலனை செய்யப்படும்.

நில குடியிருப்பாளர்களின் குரலும் நிர்வாகத்தில் இருக்கும் வண்ணம், ஃபெல்டா நிர்வாகம் சீர்படுத்தப்படும். ஃபெல்டா மற்றும் அதன் துணை நிறுவனங்களில், அரசியல் நியமனங்கள் செய்யப்படும் முறை நிறுத்தப்படும்.

ஃபெல்டா தோட்டங்களை நிர்வாகிக்கும் துணை நிறுவனங்கள், அவற்றை முறையாக நிர்வாகிக்காமல் இருப்பதால்தான், குடியேற்றவாசிகள் நட்டமடைகின்றனர். அதற்கு தீர்வாக, உடனடியாக தோட்டப்புற நிர்வாகம் குறித்த ஒரு வரைமுறையை பக்காத்தான் ஹாராப்பான் அரசாங்கம் முன்வைக்கும்.

ஃபெல்டா தலைவர் பதவிக்கு, ஆக்கமும், பரந்த அனுபவமும், நேர்மையும் மிகுந்த நபர் நியமிக்கப்படுவார்.

**வாக்குறுதி3: ஃபெல்டா நிலகுடியேற்றவாசிகளி கடன்சுமையை குறைத்தல்**

ஃபெல்டா குடியேற்றவாசிகளின் பிள்ளைகள், ஃபெல்டா நிர்வாகம், அதன் துணை நிறுவனங்களில் பணிபுரிய முன்னுரிமை அளிக்கப்படும்.

ஃபெல்டா குடியேற்றத்திட்டம் விரிவுப்படுத்தப்படுமானால், குறைந்த வருமானம் பெறும் தரப்பினர் மட்டுமே அத்திட்டத்தில் பங்கெடுப்பதை உறுதிசெய்வோம்.

மறுபயிரீட்டு காலத்தில் வாழ்வு செலவீன கடனுதவி, மாதத்துக்கு 2000 ரிங்கிட் வரை உயர்த்தப்படும். அதேவேளையில், அளவுக்கு மீறிய கடன்சுமையால் குடியேற்றவாசிகள் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதிசெய்ய, நிதிநிர்வாக ஆலோசனைகள் வழங்கப்படும்.

அம்னோ-தேசிய முன்னணி காலத்தில் போல் அல்லாமல், அறுவடை முடிந்த 45 நாட்களுக்குள், பணத்தை குடியேற்றவாசிகளுக்கு வழங்குவதை, பக்காத்தான் ஹாராப்பான் அரசாங்கம் உறுதிசெய்யும்.

ஃபெல்டாவின் முதலீடுகளில் வரும் இலாப ஈவுகள், குடியேற்றவாசிகளின் கடனை அடைப்பதற்கு பயன்படுத்தப்படும். இதன்வழி, குடியேற்றவாசிகள் கடன்சுமையில் தத்தளிக்காமல் இருப்பதை உறுதி செய்ய முடியும். அதேப்போல, கடன்சுமையிலிருந்து 50% தள்ளுபடி, வட்டியில்லா கடன் வழங்கும் முறைகள் குறித்தும் ஆய்வு செய்யப்படும்.

ஃபெல்டா குடியேற்றவாசிகளின் இரண்டாம், மூன்றாம் தலைமுறையினர், நாடு முழுவதுமுள்ள வாங்கும் சக்திக்குட்பட்ட வீடுகளை வாங்குவதற்கு முன்னுரிமை வழங்கப்படும். இது, அவர்கள் பரந்த பொருளாதார வாய்ப்புகளால் பலனடைய செய்யும்.

**வாக்குறுதி 4 : ஃபெல்டா பகுதிகளை நவீனமயப்படுத்துதல்**

ஃபெல்டாவின் முதலீடுகளில் இருந்து வரும் இலாபங்களை, ஃபெல்டா குடியேற்றப்பகுதிகளை மேம்படுத்தவும், நவீனமயப்படுத்தவும் பயன்படுத்தப்படும். அடிப்படை வசதிகள், இணைய தொடர்பு ஆகியவற்றைக் கொண்ட ஃபெல்டா நகர்ப்புறங்கள் உருவாக்கப்படும்.

ஃபெல்டா குடியிருப்புக்கள், நகர்ப்புறங்களுக்கு இடையேயான தொடர்பு கட்டமைப்புக்கள் ஒழுங்கப்படுத்தப்பட்டு நிர்மாணிக்கப்படும். இது ஃபெல்டா குடியிருப்புவாசி இளைஞர்களுக்கு அதிகமான வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தும்.

**வாக்குறுதி 5 : ஃபெல்டா குடியேற்றவாசிகளின் பிள்ளைகளுக்கு சிறந்த கல்வி வாய்ப்பு**

ஃபெல்டா நிர்வாகம், கல்வியமைச்சுடன் இணைந்த செயல்படுவதின் வழி, ஃபெல்டா நிலத்திட்டங்களில் உள்ள பள்ளிகளின் கட்டமைப்பு முறையாக இருப்பது உறுதிசெய்யப்படும்.

முழு விடுதி பள்ளிகள், மாரா இடைநிலை கல்லூரிகள், தொழில்திறன் பயிற்சி கல்லூரிகள், பொது பல்கலைகழகங்களில் பயில ஃபெல்டா குடியேற்றவாசிகளின் பிள்ளைகளுக்கு இடஒதுக்கீடு ஆவண செய்யப்படும்.

ஃபெல்டா குடியேற்றவாசிகளின் பிள்ளைகளுக்கு கல்வி உதவிநிதிகள் அதிகரிக்கப்படும். இந்த கல்வி உதவிநிதியானது, ஃபெல்டாவில் இருந்து மட்டுமல்லாமல், தனியார் நிறுவனங்களிடம் இருந்தும் பெறப்படும்.

ஃபெல்டா குடியேற்றவாசிகளின் பிள்ளைகளுக்கு தொழில்திறன் பயிற்சிகள் வழங்கப்பட்டு, அவர்களின் பொருளாதாரத்தை பல்வகைப்படுத்தும் விதமாக விவசாய-சுற்றுலா மேம்படுத்தப்படும்.

இவையனைத்தும், ஃபெல்டா இளம் தலைமுறையினருக்கு புதிய வாய்ப்புகளை ஏற்படுத்தி, சமூக சீர்கேடுகளில் இருந்து ஃபெல்டா இளம் தலைமுறையினர் விடுபடுவதை உறுதி செய்யும்.

**இந்திய சமுதாயத்துக்கான சிறப்பு திட்டங்கள்**

சுதந்திரத்திற்கு முன்பிலிருந்து, இந்நாட்டின் மேம்பாட்டிற்கு தங்களை அர்ப்பணித்து கொண்டுள்ள இந்திய சமுதாயம் பல தசாப்தங்களாக, அம்னோ-தேசிய முன்னணியால் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளது. தொடர்ந்த புறக்கணிப்பினால், இந்திய சமுதாயத்தில் பெரும்பான்மையினர் இன்னும் ஏழ்மையின் பிடியிலே சிக்கியுள்ளனர். அம்னோ-தேசிய முன்னணி ஆட்சியில் இந்திய சமுதாயம் புறந்தள்ளப்பட்டுள்ளதையும், வருவாய் இடைவெளி அதிகமாக இருப்பதையும் இன்றும் கண்கூடாக காண முடிகின்றது.

தேசிய முன்னணியின் உறுப்புக்கட்சிகள் இந்திய சமுதாயத்திற்காக போராடவில்லை.  அம்னோ தேசிய முன்னணி அரசாங்கம், இந்திய சமுதாயத்தை தங்களது விருப்பம் போல நடத்தும் மூன்றாம்தர மக்களை போல நடத்தி வந்துள்ளது.

மலேசியாவின் குடிமக்கள் என்ற அடிப்படையில், புறக்கணிப்புக்கு உள்ளாகமால், அனைத்து மலேசியர்களை போலவே வாழ்வதற்கு மலேசிய இந்தியர்களுக்கு உரிமையுள்ளது; இந்தியர்களுக்கு எதிரான புறக்கணிப்புகளை ஒழிக்கும் நேரம் வந்துவிட்டது. இந்திய சமுதாயத்தின் குரலுக்கும், கோரிக்கைகளும் மதிக்கப்பட வேண்டும்.

பக்காத்தான் ஹாராப்பான், இந்திய சமுதாயம் உட்பட அனைத்து இன மக்களும் சமூகநீதி, சமத்துவம் பெற்று ஒற்றுமையுடன் வாழ தீர்வு ஏற்படுத்துவதே பக்காத்தான் ஹராப்பானின் நிலைப்பாடாகும்.

தற்பொழுது நிலவும் பொருளாதார இடைவெளியை கலைய வேண்டுமெனில், இந்திய சமுதாயத்தின் தேவைகளை கவனத்துடன் கையாள வேண்டும் என்பதை பக்காத்தான் ஹாராப்பான் உணர்ந்துள்ளது.

நாட்டில் மற்ற இன மக்களுடன் சரிசமமாக நிற்க இந்திய சமுதாயத்தின் சமூக, பொருளாதார நிலையை மேம்படுத்த வேண்டும் என்பதே பக்காத்தான் ஹாராப்பானின் எண்ணமாகும். நாட்டின் வளங்கள் சரிசமமான முறையில் பங்களிக்கப்பட வேண்டும். இந்தியர்களுக்கு எதிரான பொருளாதார புறக்கணிப்பு நிறுத்தப்பட வேண்டும்,

மலேசிய இந்தியர்களுக்கு என்று சிறப்பான உறுதிப்பாடுகளை பக்காத்தான் ஹாராப்பான் முன்வைக்கின்றது. இந்திய சமுதாயத்திற்கு எங்களின் உறுதிமொழிகள், பின்வருமாறு :-

1. புதிய மத்திய அரசாங்கத்தை அமைத்த 100 நாட்களுக்குள் நாடடற்ற மலேசிய இந்தியர்களின் பிரச்சனை தீர்க்கப்படும்;

2. இந்திய சமுதாயத்தை சேர்ந்த குறைந்த வருமானம் பெறும் குழுவினரின் வீட்டுடமை தேவைக்கு முக்கியத்துவம் வழங்கப்படும். நல்ல வாழும் முறையிலான வீடு, நியாய விலையில் அவர்களுக்கு வழங்கப்பட

வேண்டும். அதேவேளையில், வீடு வாங்குவதற்கான கடன் வசதி பிரச்சனைகளை களைய, வாடகை-கடன் போன்ற சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்படுவது குறித்தும் ஆராயப்படும்;

3. முன்னாள் தோட்டப்புற நிலங்களில் மேம்பாட்டு திட்டங்களை மேற்கொள்ளும் மேம்பாட்டாளார்கள், முன்னாள் தோட்ட தொழிலாளர்கள் தேவையை நிறைவேற்றும் வண்ணம், மலிவு வீடு திட்டங்களை செயல்படுத்துமாறு, உள்ளூராட்சி மன்றங்கள், மாநில அரசாங்கங்கள் நிபந்தனையிடுமாறு அறிவுறுத்தப்படும்.

4. இந்திய சமுதாய பிள்ளைகள் சிறப்பான கல்வியை பெற, அனைத்து தமிழ்ப்பள்ளிகளும், முழு உதவிப்பெறும் பள்ளிகளாக மாற்றப்படும். தமிழ்ப்பள்ளிகளின் கட்டமைப்பு, தேசிய பள்ளி கட்டடங்களைப் போல, சிறப்பாக இருப்பதும் உறுதி செய்யப்படும்.

5. பக்காத்தான் ஹாராப்பான் அரசாங்கம், அரசினால் நிர்வகிக்கப்படும் தமிழ் இடைநிலைப்பள்ளியை அமைக்கும்.

6. பக்காத்தான் ஹாராப்பான் அரசாங்கம், நாடு முழுவதுமுள்ள மாரா இடைநிலை கல்லூரி, முழுவிடுதி பள்ளிகளில் இந்திய மாணவர்களின் சேர்க்கையை அதிகரிக்கும். இந்த சேர்க்கையில், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள், முன்னாள் தோட்ட தொழிலாளர்களின் குடும்பங்கள், நகர்ப்புற ஏழ்மையில் சிக்கி தவிக்கும் குடும்பங்கள் ஆகியவற்ற சேர்ந்த பிள்ளைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்;

7. முழுவிடுதி பள்ளிகள், மாரா இடைநிலை கல்லூரிகளை தவிர்த்து, அன்றாட விடுதி பள்ளிகளிலும் இந்திய மாணவர்களின் சேர்க்கை அதிகரிக்கப்படும். அந்த தேவைக்கேற்ப அன்றாட விடுதி பள்ளிகளின் விடுதிகள் அதிகரிக்கப்படும்;

8. பக்காத்தான் ஹாராப்பான் முன்வைக்கும் வளர்ச்சி செயல்திட்டத்தில், இந்திய சமூகம் பின்தங்கி விடாமல் இருக்க, தொழில்திறன், கைத்திறன் கல்வி திட்டங்களில் இந்திய இளைஞர்கள் பங்கெடுப்பது உறுதிசெய்யப்படும். அவ்வாறு, திறன்பெற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு திட்டங்களும் செயல்படுத்தப்படும்;

9. இந்திய சமுதாய இளைஞர்கள், போதைப்பொருள், மதுப்பழக்கம் ஆகியவற்றுக்கு அடிமையாகி, குண்டர் கும்பல் நடவடிக்கைகள் ஆகியவற்றில் சிக்கி சீரழியாமல் இருக்க, அனைத்து தரப்பினருக்கும் தேவையான சமூகநல திட்டங்கள் பக்காத்தான் ஹாராப்பான் அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்படும். சமூகநல திட்டங்கள் சரியாக இருக்கும் வேளையில், இந்திய இளைஞர் இத்தீச்செயல்களில் ஈடுபடாமல் இருப்பதை உறுதி செய்ய முடியும்.

10. பக்காத்தான் ஹாராப்பான் அரசாங்கம், ஆட்சியின் முதல் தவணையில், மாத சம்பளத்தை 1500 ரிங்கிட்டாக நிர்ணயிக்கும். அதன்வழி, இந்த வருமான கோட்டில் இருக்கும் இந்தியர்கள் நேரடி பயனடைவார்கள்;

11. அனைத்து மத்திய அரசாங்க துறைகள், மாநில அரசு துறைகள், அரசு நிறுவனங்கள், உள்ளூராட்சி மன்றங்கள் ஆகியவற்றில், புதிய வேலைகளுக்கான சேர்க்கையில், குறைந்தது 10% இந்தியர்கள் இருப்பதை உறுதி செய்யுமாறு அறிவுறுத்தப்படுவார்கள்;

12. இந்திய சமுதாய மேம்பாட்டுக்காக, முதல் பத்து ஆண்டுகளுக்கு 4 பில்லியன் ரிங்கிட் என்ற அடிப்படையில், ஒரு சிறப்பு நிதி அமைக்கப்படும். இந்த நிதி, இந்திய சமுதாயத்தை சமநீதியுடன் மேம்படுத்த உதவும். அந்த நிதியை, மத்திய அரசு நிறுவனங்கள், மற்றும் தனியார் துறை நிறுவனங்களிடமிருந்து சேர்க்கப்படும். இந்த நிதி உடனடியாக செயல்படுத்தப்படுவதை உறுதிசெய்ய, எங்களது அரசாங்கத்தின் முதலாவது வரவு செலவு அறிக்கையில், 100 மில்லியன் ரிங்கிட் ஒதுக்கீடு செய்யப்படும். இந்த நிதியானது, சிங்கப்பூரின் “சிண்டா” நிறுவனத்தின் செயல்பாடுகளை ஒத்திருக்கும்.

13. பினாங்கு இந்து அறப்பணி வாரியத்தை அடிப்படையாகக் கொண்டு, இந்து அறப்பணி வாரியம் அமைக்கப்படும். தொடக்க கட்டமாக, கெடா, பேராக், சிலாங்கூர், பஹாங், நெகிரி செம்பிலான், மலாக்கா மற்றும் ஜொகூர் ஆகிய மாநிலங்களில், பக்கத்தான் ஹாராப்பான் அரசாங்கம், இந்து அறப்பணி வாரியங்களை அமைக்கும்.

14. இந்திய சமூகத்தை சேர்ந்த தனித்துவாழும் தாய்மார்களுக்கு திறன் பயிற்சி அளிக்கப்படும். தனித்துவாழும் தாய்மார்களை பொருளாதார ரீதியில் பலப்படுத்த, திறன்பயிற்சி வழங்க, “வழிகாட்டி” திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும்;

15. இந்திய சமூகத்தை சேர்ந்த பெண்கள், இளையோர், வீட்டிலிருந்து தொழில்புரியும் தரப்பினருக்கு, உதவும் வண்ணம், சிறுதொழில், வணிக கடனுதவிகள் ஏற்பாடு செய்து தரப்படும்;

16. அரசுத்துறைகள், தனியார் துறைகளின் பணி நியமனங்களில், இந்திய சமுதாயத்தினர் புறக்கணிக்கப்படாமல் இருப்பதை உறுதிசெய்ய, “சரிசம வேலைவாய்ப்பு ஆணையம்” அமைக்கப்படும்;

17. ஃபெல்டா, ஃபெல்க்ரா, போன்ற அடிப்படைகளை கொண்ட நிலத்திட்டங்களில் பங்கெடுக்க இந்திய சமுதாயத்தினருக்கு வாய்ப்புகள் ஏற்படுத்தி தருவதை பக்காத்தான் ஹாராப்பான் அரசு உறுதி செய்யும். அதேவேளையில், காய்கறி பயிரிடுதல், மாடு வளர்த்தல் போன்ற விவசாயம் சார்ந்த தொழில்களில் ஈடுபட, கடனுதவி மற்றும் ஒழுங்குபடுத்துதல் உதவிகளும் செய்யப்படும்;

18. இந்திய சமுதாயத்தினர் அதிகம் ஈடுபடும் தொழில்துறைகளி, குறிப்பாக போக்குவரத்து, மற்றும் மறுசுழற்சி தொழில்களுக்கான உரிமங்கள் பெறுவது எளிதாக்கப்படும்;

19. இந்து சமய மக்களுக்கு, அவர்களின் மத நம்பிக்கையை நடைமுறைப்படுத்த ஆலயங்களுக்கும், இடுகாடுகளுக்கும் நில தேவை இருக்கின்றது. பக்காத்தான் ஹாராப்பான் அரசாங்கம், இந்து ஆலயங்கள், இடுகாடுகளுக்கு தேவையான் நில வசதிகளை ஏற்பாடு செய்து தரும்;

20. ஒரு ஆலயம் அல்லது இடுகாடு மாற்றப்பட வேண்டிய தேவை இருந்தால், குறிப்பிட்ட ஆலயத்தை சார்ந்த மக்களிடம் பேச்சுவார்த்தை நடத்திய பிறகே, அவ்வாறான மாற்றங்கள் செய்வதையும், அவ்வாறு மாற்றம் செய்யப்படும் பொழுது, அதே அளவிலான மாற்று நிலம் வழங்கப்படுவதையும் பக்காத்தான் ஹாராப்பான் அரசாங்கம் உறுதி செய்யும்;

21. பக்காத்தான் ஹாராப்பான் ஆட்சியின் முதல் தவணையில், காவல்துறை குற்ற, புகார் சுயேட்சை ஆணையம் அமைக்கப்படும். இந்திய சமூகத்தை சார்ந்த காவல் நிலைய மரணங்கள் குறித்த விசாரணைகள் முடுக்கி விடப்படும்;

22. இந்திய சமுதாயத்தில் நிலவும் நகர்ப்புற ஏழ்மை, மற்றும் சமூக பிரச்சனைகளை களைய, நகர்ப்புற, புறநகர் மேம்பாட்டு அமைச்சு போன்ற அரசுத்துறைகள் ஆய்வுகள் நடத்தி தீர்வை முன்வைக்க பணிக்கப்படும். அம்னோ-தேசிய முன்னணி ஆட்சியில் நடப்பது போல் அல்லாமல், இந்திய சமுதாயம் புறக்கணிப்புக்கு ஆளாகாமல், சமூகநல திட்டங்களை நடைமுறைப்படுத்த கட்டளையிடப்படும்;

23. பக்காத்தான் ஹாராப்பான் அரசாங்கம் அன்னிய தொழிலாளர்களின் எண்ணிக்கையை குறைக்கும். இதன்வழி, இந்தியர்கள் உட்பட அதிகமான மலேசியர்களுக்கு, வேலை வாய்ப்பு ஏற்படுத்தப்படும். இதன்வழி, பக்காத்தான் ஹாராப்பன் முதல்தவணையில் செயல்படுத்தும் 15000 ரிங்கிட் குறைந்த வருமான செயல்பாட்டின் கீழ்,அதிகமான குறைந்த வருமானம் பெறும் இந்தியர்கள் பயனடைவார்கள்;

24. நாட்டின் அனைத்து பகுதிகளிலும் சுகாதார சேவையை மேம்படுத்த பக்காத்தான் ஹாராப்பான் கடப்பாடு கொண்டுள்ளது. இந்தியர்கள் அதிகமாக வசிக்கும் தோட்டப்புறங்களிலும் இந்த சுகாதார சேவை மேம்பாடு முன்வைக்கபடும். இந்த இலவச சுகாதார சேவை, இந்திய சமுதாயத்தினருக்கு தேவைக்கேற்ப கிடைப்பதை பக்காத்தான் ஹாராப்பான் உறுதிசெய்யும்;

25. குழந்தைகளை ஒரு பெற்றொருக்கு தெரியாமல் மதம் மாற்றும் நடவடிக்கைகளில் இந்தியர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த விவகாரத்தை சுமூகமாக தீர்க்க பக்காத்தான் ஹாராப்பான் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

**மகளிருக்கான சிறப்பு திட்டங்கள்**

நமது வாழ்வில், பெண்களுடைய பங்கு மறுக்க முடியாதது. மகளிருடைய பங்கை அங்கீகரிக்கும் வண்ணம், பக்காத்தான் ஹாராப்பான் அரசாங்கம், அவர்களுடைய உரிமையை வலுப்படுத்தும் திட்டங்களை செயல்படுத்தும். மகளிருக்கென்று, பக்காத்தான் ஹாராப்பை ஐந்து சிறப்பு திட்டங்களை வரைந்துள்ளது :

1. மகளிருடைய தேவைகளை உணர்ந்த நாட்டின் பொருளாதாரம்
2. மகளிர் சமூக பாதுகாப்பு, சுகாதார பேணலை உறுதிபடுத்துதல்
3. நாட்டின் கல்வித்துறையில் மகளிரின் மேம்பாட்டை முன்னிறுத்துதல்
4. பெண்களின் உரிமைகளை, உணர்வுகளை மதிக்கும் சட்டங்கள்
5. அரசியல் அரங்கில் அதிகமான மகளிர் ஈடுபட வாய்ப்புக்கள்

**வாக்குறுதி 1 :மகளிருடைய தேவைகளை உணர்ந்த நாட்டின் பொருளாதாரம்**

1. ஆண், பெண் என பாலின வேறுபாடுகள் இன்றி, வேலைவாய்ப்புகள், பதவி உயர்வு மற்றும் ஊதிய நடைமுறை செயல்படுத்தப்பட, சட்டம் ஒன்று இயற்றப்படும்,

2. நாட்டின் வரவுசெலவு திட்டமானது, பாலின தேவைகள் அறிந்த வரவுசெலவு திட்டமாக இருப்பது உறுதி செய்யப்படும்.

3. அனைத்து தொழில்துறைகளிலும் பெண்களின் ஈடுபாடு அதிகரிக்க, திட்டங்களை வகுத்து செயல்படுத்துதல்.

4. பரந்த தொழிற்சந்தையில் போட்டியிட, பெண்களுக்கான சிறுதொழில் கடனுதவி திட்டங்களை ஏற்படுத்துதல்

5. பெண்களின் சொத்துடமை, முதலீடு, சேமிப்புகளை அதிகரிக்க சிறப்பு திட்டங்களை அறிமுகப்படுத்துதல்

6. வேலையிடங்களிலேயோ, அல்லது அதற்கு அருகாமையிலேயோ, குழந்தைகள் பராமரிப்பு மையங்கள் அமைக்க நிறுவனங்களுக்கு நிதியுதவி.

7. வயது முதிர்ந்தோர், குழந்தை பெற்ற மாதர் போன்றோரை பராமிக்கும் பராமரிப்பு சேவை மைய தொழில்துறையை ஊக்கப்படுத்துதல்

8. பிரசவ விடுமுறையை 60 நாட்களிலிருந்து, 90 நாட்களாக அதிகரித்தல்

வாக்குறுதி 2 : மகளிர் சமூக பாதுகாப்பு, சுகாதார பேணலை உறுதிபடுத்துதல்

1. பெண்கள் எதிர்நோக்கும் மனநல பிரச்சனைகள், மன அழுத்த பிரச்சனைகளை கலைய சிறப்ப் பயிற்சிகள், தன்முனைப்பு பயிற்சிகளை நடத்துதல்

2. பெண்களின் சுகாதார பேணல்கள் குறித்து விழிப்புணர்வு திட்டங்களை அதிகரித்தல்

3. பெண்கள் தங்களையும், தத்தம் குடும்பத்தினரையும் காத்துக்கொள்ள கர்ப்ப சுகாதரம் குறித்த விழிப்புணர்வு திட்டங்களை செயல்படுத்துதல்.

4. கர்ப்பப்பை புற்றுநோய், மார்பக புற்றுநோய் குறித்த ஆரம்பக்கட்ட விழிப்புணர்வை, பெண்கள் மத்தியில் அதிகரிப்பதோடு, மார்பக புற்றுநோய் சோதனையான “மம்மோகிராம்” , மற்றும் கர்ப்பப்பை புற்றுநோய் சோதனையான “பேப்ஸ்மியர்” ஆகியவற்றை பொது மருத்துவமனைகளில் பெண்கள் செய்துக்கொள்ள ஆவண செய்யப்படும்

5. பெண்கள் தங்களது பிரச்சனைகளுக்கு உதவியை நாட, ஒவ்வொரு தொகுதியிலும் பெண்களுக்கான சிறப்பு சேவை மையங்கள் அமைக்கப்படும்

6. நகர்ப்புற, புறநகர் மேம்பாடுகள், பெண்களுக்கான பாதுகாப்பு உறுதி செய்யப்பட்ட மேம்பாடாக இருப்பது கட்டாயமாக்கப்படும்

7. வேலைக்கு செல்லாத குடும்ப மாதர்களுக்கான ஊழியர் சேமநிதி (KWSP) அறிமுகம் செய்யப்படும். இந்த சேமநிதிக்கு, கணவனின், ஊதியத்திலிருந்து வெறும் 2% மட்டுமே பிடித்தம் செய்யப்படும். குடும்ப மாதர்களின் சேவையை மதிக்கும் வண்ணம், பக்காத்தான் ஹாராப்பான் அரசாங்கம் மாதம் ஒன்றுக்கு, 50 ரிங்கிட்டை அந்த சேமநிதிக்கு வழங்கும்.

8. வேலையிடங்களில் நடக்கும் பாலியல் தொல்லைகளை கலைய, சிறப்பு பயிற்சி கட்டாயமாக்கப்படும்.

**வாக்குறுதி 3 : நாட்டின் கல்வித்துறையில் மகளிரின் மேம்பாட்டை முன்னிறுத்துதல்**

1. “பெண்களை மதித்தல்” என்ற கருப்பொருளை அனைத்து நிலை கல்விகளிலும் பாடத்திட்டமாக அறிமுகப்படுத்துதல்.

2. குடும்பத்தை பார்த்துக்கொள்வதற்காக, தங்களது கல்வியை நிறுத்திய பெண்கள், எப்பொழுது வேண்டுமானாலும், கல்வியை தொடரலாம் என்ற நிலையை ஏற்படுத்து “வாழ்நாள் முழுக்க கல்வி” திட்டத்தை அறிமுகப்படுத்துதல்.

3. பாலின புரிதல் குறித்த கல்வியினை, இடைநிலைப்பள்ளிகளிலிருந்து தொடங்குதல்.

4. பாலர்ப்பள்ளியில் பயிலும் பிள்ளைகளை கொண்டுள்ள தாய்மார்களுக்கு உதவும் வண்ணம், தற்பொழுது பல்வேறு தரப்புக்களாலும் நிர்வாகிக்கப்படும், கண்காணிக்கப்படு பாலர் கல்வி நிலையங்களை, ஒரு “பாலர் மேம்பாட்டு நிலையம்” என்ற ஒரு துறையின் கீழ் ஒன்றிணைக்கப்படும். குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு முறையான நிதியுதவியும் வழங்கப்படும்.

**வாக்குறுதி 4 : பெண்களின் உரிமைகளை, உணர்வுகளை மதிக்கும் சட்டங்கள்**

1. மணமுறிவு, ஜீவனாம்சம், மற்றும் குழந்தைகள் பராமரிப்பு உரிமை ஆகியவற்றில் பெண்களின் உரிமைகளை தற்காக்கும் வண்ணம், குடும்ப சட்டம் மற்றும் சம்பந்தப்பட்ட சட்டங்களை திருத்துவதற்கு, குடும்ப சட்டத்திருத்த சிறப்புக்குழு ஒன்றை அமைத்தல்.

2. குறைந்தபட்ச திருமண வயது 18 என்று நிலைப்படுத்த, சட்டம் ஒன்றை இயற்றுதல்.

3. பாலின வேற்றுமைகளை கலைந்து, பெண்களுக்கு சட்டரீதியில் அநீதி நிகழாமல் இருக்கும் வண்ணம் அனைத்து சட்டங்களையும் ஆய்வு செய்தல்.

4. அனைத்து நிலைகளிலும், பாலியல் தொல்லைகளை நிறுத்துவதற்கு, பாலியல் தொல்லை சட்ட மசோதாவை அறிமுகப்படுத்துதல்.

**வாக்குறுதி 5 : அரசியல் அரங்கில் அதிகமான மகளிர் ஈடுபட வாய்ப்புக்கள்**

1. வருங்கால பெண் தலைவர்களை உருவாக்குவதற்கு, மகளிர் தலைமைத்துவ, அரசியல் பயிற்சி மையங்களை உருவாக்குதல்.

2. அனைத்து நிலைகளிலும், குறைந்தபட்சம் 30% கொள்கை வகுப்பாளர்கள், பெண்களாக இருப்பது உறுதி செய்யப்படும்.

3. பெண்களின் பங்களிப்பை அதிகரிக்கும் வண்ணம், அரசியல் கட்சி தேர்வுகள், மற்றும் பொதுத்தேர்தல் முறைகளில் மாற்றம் கொண்டுவரப்படும்.

4. பெண்கள் பங்களிப்பை உறுதிசெய்ய அனைத்து நிலைகளிலும் கணக்காய்வு செய்யப்படும்.

5. நாட்டின் எதிர்காலத்தில், சமூகம் முற்போக்கான சிந்தனையுடன் திகழ, “இளம்பெண்கள் நாட்டின் எதிர்காலம்” என்ற சிந்தனை மக்களிடம் விதைக்கப்படும்.

**இளையோருக்கான சிறப்பு திட்டங்கள்**

மலேசிய இளையோர், ஆண், பெண் வேறுபாடுகளை கடந்து, தேசிய, பிராந்திய, அனைத்துலக மட்டங்களில் தங்களது தடங்களை பதித்துள்ளனர். நமது இளையோர், விளையாட்டு, கலை, நடிப்பு, தொழில்த்துறை, அறிவியல், தொழில்நுட்பம், சமூகசேவை என அனைத்து துறைகளிலும் தமது ஆற்றலை வெளிப்படுத்தியுள்ளனர். அவர்களே, நமது நாட்டின் இலட்சியத்தை சுமக்கும், நாளைய நம்பிக்கை.

இளையோர்கள், தங்களது ஆற்றலை வெளிப்படுத்த, அவர்கள் மீது திணிக்கப்பட்டிருக்கும் பல்வேறு விதமான கட்டுப்பாடுகளை தகர்க்க வேண்டும் என்பது பக்காத்தான் ஹாராப்பானின் நிலைப்பாடு. இளையோர்கள் தமது ஆற்றலை தடையின்றி வெளிப்படுத்த, பக்காத்தான் ஹாராப்பான் அரசாங்கம் கீழ்காணும் 5 செயல்திட்டங்களை நடைமுறைப்படுத்தும்.

1. நியாயமான ஊதியத்தைக் கொண்ட அதிகமான வேலைவாய்ப்புகளை உருவாக்குதல்

2. வாழ்க்கைச்சுமை செலவீனத்தை குறைத்தல்

3. இளையோர் வாங்கும் சக்திக்குட்பட்ட, தங்குவதற்கு வசதியான வீடமைப்பு திட்டங்களை செயல்படுத்துதல்

4. தரமான இலவச கல்வியை வழங்குதல்

5. தொழில் மற்றும் வாழ்க்கைத்தரன் ஆகியவற்றை மிதமாக்க, விளையாட்டு, கேளிக்கைகளுக்கான வாய்ப்புகளை அதிகரித்தல்

செயல்திட்டம் 1 : நியாயமான ஊதியத்தைக் கொண்ட அதிகமான வேலைவாய்ப்புகளை உருவாக்குதல்

1. பக்காத்தான் ஹாராப்பான் ஆட்சியமைத்த 5 ஆண்டுகளில், குறைந்தபட்சம் 2500 ரிங்கிட் மாத வருமானத்தைக் கொண்ட 1 மில்லியன் வேலைவாய்ப்புகளை உருவாக்குதல்

2. அந்த வேலைவாய்ப்புகளில் 200,000 வேலைவாய்ப்புகள் சபா மற்றும் சரவா மாநிலங்களில் உருவாக்கப்படும்

3. இளையோர் தொழில்முனைவர், மற்றும் பொருளாதார வலுவாக்க திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் 1 பில்லியன் ரிங்கிட் இளையோர் மேம்பாட்டுக்காக ஒதுக்கப்படும். இந்த நிதியின் வழி, இளையோர் கீழ்காணும் துறைகளில் தங்களது திறமையை வளர்க்கலாம் :-

a. புத்தாக்க விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு

b. புறநகர் பகுதிகளில் பசுமை சுற்றுலாவை மேம்படுத்துதல்

c. கலை மற்றும் நுண்கலை தொழில்துறை

d. மின்விளையாட்டு, குறிப்பாக வீடியோ விளையாட்டு உருவாக்கம், மற்ற தொழில்நுட்ப துறைகள்

e. சமூக ஊடக தொழில்துறை

4. ஒவ்வொரு இளையோரும் தமது ஆற்றலை வெளிப்படுத்த ஏதுவாக, நிர்வாக கொள்கைகளை வகுத்தல்

5. அதிகமான இளையோர், மோட்டார்சைக்கிளை பயன்படுத்தும் காரணத்தால், பக்காத்தான் ஹாராப்பான் அரசாங்கம், மோட்டார்சைக்கிள்களுக்கென தனி வழிகளை அமைப்பதுடன், மழைக்கு ஒதுங்குமிடம் போன்ற கட்டமைப்புகளை அதிகரிக்கும்

**செயல்திட்டம் 2 : வாழ்க்கைச்சுமை செலவீனத்தை குறைத்தல்**

1. இளையோரின் தினச்சுமையை குறைக்கும் வண்ணம் ஜிஎஸ்டி வரி மற்றும் டோல் கட்டணங்களை ஒழித்தல்

2. இளையோரின் பொருளாதார சுமையை குறைக்க, பெட்ரோல் விலையை சீர்படுத்துதல்

3. தற்பொழுது சிலாங்கூர் மாநிலத்தில் செயல்படுத்தப்படும், மருத்துவ உதவி திட்டத்தை நாடு முழுவதும் அறிமுகப்படுத்துதல்

4. 3000 ரிங்கிட்டுக்கும் குறைந்த வருமானம் பெறும் இளையோர் குடும்பங்களுக்கு, 500 ரிங்கிட் மருத்துவ உதவித்தொகை

5. தற்பொழுது இணைய சேவை வேகத்தை இரண்டு மடங்கு அதிகரிப்பதுடன், அதன் விலையை குறைக்கவும் ஆவண செய்யப்படும்

6. வேகமான இணைய சேவை, அனைத்து சிறுநகர் மற்றும் புறநகர்களிலும் கிடைப்பது உறுதி செய்யப்படும்

7. இளையோரின் மோட்டார்சைக்கிள் உரிம புதுப்பித்தல் கட்டணம் இலவசமாக்கப்படும்

8. போக்குவரத்து தொடர்பை மேம்படுத்த, சுமார் 10,000 பேருந்துகளை பொதுபோக்குவரத்துக்காக அதிகப்படுத்தப்படும்

9. கிள்ளான் பள்ளத்தாக்கு மற்றும் மலேசிய முழுவதுமுள்ள அனைத்து நகரங்களிலும், அனைத்து பொது போக்குவரத்துகளிலும், அளவில்லாமல் பயன்படுத்தக்கூடிய, மாதம் 100 ரிங்கிட் மட்டுமே செலுத்தும் பொதுப்போக்குவரத்து அட்டை அறிமுகப்படுத்தப்படும்.

10. தற்பொழுது சிலாங்கூர் மாநிலத்தில் நடைமுறைப்படுத்தப்படுவதைப் போல, 35 வயதுக்கும் குறைவான இளையோர் திருமணம் புரியும் பொழுது உதவித்தொகையாக 500 ரிங்கிட் வழங்கப்படும்

**செயல்திட்டம் 3 : இளையோர் வாங்கும் சக்திக்குட்பட்ட, தங்குவதற்கு வசதியான வீடமைப்பு திட்டங்களை செயல்படுத்துதல்**

1. பக்காத்தான் ஹாராப்பான் ஆட்சியமைத்த இரண்டு தவணைகளில், 1 மில்லியன் வாங்கும் சக்திக்குட்பட்ட வீடுகள் நிர்மாணிக்கப்படும்

2. வாடகை-விற்பனை வீட்டுடமை திட்டம், தனியார் மேம்பாட்டு திட்டங்கள் உட்பட நாடு முழுவது விரிவுப்படுத்தப்படும்.

3. இளையோர் முதல் வீடு வாங்குவதை சுலபமாக்க, வீட்டுக்கடன் பெறுவது எளிதாக்கப்படும்.

4. மக்களின் சுமையை குறைக்கும் வண்ணம், மலிவுவிலை வீட்டுடமை திட்டங்களில் கட்டட பராமரிப்பை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும்.

**செயல்திட்டம் 4 : தரமான இலவச கல்வியை வழங்குதல்**

1. பாலர் கல்வி, ஆரம்ப கல்வி, இடைநிலைக்கல்வி மற்றும் உயர்கல்வி ஆகிய அனைத்து நிலையிலான கல்வியும் இலவசமாக்கப்படும்

2. உயர்க்கல்வி கூடங்களில் பயிலும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை சேர்ந்த மாணவர்களுக்கு, வாழ்க்கை செலவுத்தொகை வழங்கப்படும்

3. கல்லூரி மற்றும் பல்கலைக்கழக சட்டம் மீட்டுக்கொள்ளப்படும்

4. இளையோர் மத்தியில் தலைமைத்துவத்தை வளர்க்க, புத்தாக்க சிந்தனைகள் ஊக்குவிக்கப்படும்.

5. மாணவர்களுக்கு சிறப்பான கல்வியை போதிக்கும் வண்ணம், ஆசிரியர்கள் மீது திணிக்கப்படும் தேவையாற்ற அதிகார வரம்புகள் ஒழிக்கப்படும்

6. மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு ஆரம்ப கட்டத்திலேயே, மாற்றுக்கல்வி திட்டம் அறிமுகப்படுத்தப்படும்

7. ஃபெல்டா குடியிருப்புவாசிகளின் பிள்ளைகளுக்கு, இடைநிலை, மற்றும் உயர்நிலை கல்விக்காக உதவிநிதி வழங்கப்படும்

8. 4000 ரிங்கிட்டுக்கும் குறைவான வருமானம் பெறும் இளையோரின் PTPTN கடன் ஒத்திவைக்கப்படும். இளையோரை கருப்புப்பட்டியலிடும் நடைமுறை நிறுத்தப்படும்

9. இளையோருக்கான தொழில்திறன், கைத்திறன் பயிற்சிகள் ஒழுங்குப்படுத்தப்படு, ஜெர்மனிய இரட்டை தொழில்திறன் பயிற்சிமுறை நாடு முழுவதும் விரிவுப்படுத்தப்படும். இத்திட்டத்தின் வழி, வேலையில்-பயிற்சி வழங்குவதற்கு, தனியார் நிறுவனங்களுக்கு ஊக்குவிப்பு தொகை அளிக்கப்படும்.

**செயல்திட்டம் 5 : தொழில் மற்றும் வாழ்க்கைத்தரன் ஆகியவற்றை மிதமாக்க, விளையாட்டு, கேளிக்கைகளுக்கான வாய்ப்புகளை அதிகரித்தல்**

1. இங்கிலாந்து பிரிமியர் லீக் போன்ற உலகத்தின் தலைசிறந்த விளையாட்டு போட்டிகள் ஆர்டிஎம் தொலைகாட்சி அலைவரிசைகளில் இலவசமாக ஒளியேற்றப்படும்

2. நகராட்சி மன்றங்களின் ஒத்துழைப்பின் வழி, நாடு முழுவதுமுள்ள நகரங்களில் மிதிவண்டி பாதைகள் அமைக்கப்படும்

3. நாடு முழுவதும் 100 பசுமையான கேளிக்கை பூங்காக்கள் அமைக்கப்படும்; அவற்றில் குறைந்தது 10 பூங்காக்கள், நீர் மற்றும் கடுமையான விளையாட்டுகளுக்கான பூங்காக்களாக அமையும்

4. மோட்டார் வாகன போட்டிகளில் ஆர்வமுள்ள இளைஞர்களின் பாதுகாப்பான உபயோகத்துக்காக, குறிப்பிட்ட பகுதிகளில் மோட்டார் வாகன போட்டி அரங்கங்கள் அமைக்கப்படும்

5. மின்விளையாட்டு துறையில் ஆர்வமுள்ள இளைஞர்கள் தங்களது திறமையை மேம்படுத்திக்கொள்ள மின்விளையாட்டு அரங்கங்களை அமைத்தல்.

6. மலையேறுதல், கரடுமுரடான பகுதிகளில் சைக்கிளோட்டம், தடைப்போட்டிகள் போன்றவற்றை நாடு முழுவதும் மேம்படுத்த, ஊக்குவிப்பு வழங்கப்படும்.

7. பினாங்கு மாநிலத்தில் வெற்றிகரமாக நடத்தப்படும் ஜோர்ஜ்டவுன் திருவிழாவை போன்று, இளையோரின் கலை ஆர்வத்தை வளர்க்க, பல்வேறு கலைத்திருவிழாக்கள் நடத்த ஆதரவு நல்கப்படும்.

**மூத்த குடிமக்களுக்கான சிறப்பு திட்டங்கள்**

மலேசியாவை இன்றைய நிலைக்கு கொண்டுவர, மூத்த குடிமக்கள் செய்த அர்ப்பணங்கள் பல. மூத்த குடிமக்களின் சேவைகளை மதித்து அங்கீகரிக்க வேண்டும் என்பது, பக்காத்தான் ஹாராப்பான் அரசாங்கத்தின் கடப்பாடாகும்.

அந்த கடப்பாட்டின் அடிப்படையில், மூத்த குடிமக்களின் சேவைகளை அங்கீகரிக்கும் விதமாக், பக்காத்தான் ஹாராப்பான் அரசாங்கம் கீழ்காணும் சிறப்பு செயல்திட்டங்களை மூத்த குடிமக்களுக்காக அர்ப்பணிக்கின்றது :-

1. தொடர்ந்து வேலை செய்துவரும் மூத்த குடிமக்களுக்கும், ஓய்விலிருந்து திரும்பி வேலை செய்ய விரும்பும் மூத்த குடிமக்களுக்கான, வருமான வரியில், கழிப்பீடு வழங்கப்படும்.

2. ஒருவரின் வயதை அடிப்படையாகக் கொண்டு மூத்த குடிமக்களை பாகுபாட்டோடு நடத்தும் முதலாளிகளை தண்டிக்க, வயது வரம்பு பாகுபாட்டு ஒழிப்பு சட்டத்தை பக்காத்தான் ஹாராப்பான் அரசாங்கம் இயற்றும்.

3. பணிஓய்வு பெற்ற மூத்த குடிமக்கள் ஓய்வுக்கொள்ள வாங்கும் ஓய்வு வீடுகள் தரமாக இருப்பதை உறுதி செய்ய சிறப்பு ஊக்குவிப்பு தொகை வழங்கப்படும்.

4. மூத்த குடிமக்களின் சுகாதாரத்தை பேண, அரசு மருத்துவமனைகளுக்கான் மானிய ஒதுக்கீடு அதிகரிக்கப்படும்

5. பராமரிப்பு சேவை துறையை மேம்படுத்த நடவடிக்கைகள் எடுத்தல். குறிப்பாக மூத்த குடிமக்கள் பராமரிப்பு, குறித்து உயர்கல்விக்கூடங்களில் குறிப்பிட்ட பாடத்திட்டத்தையும் அறிமுகப்படுத்தலாம்.

6. மூத்த குடிமக்கள் நடவடிக்கை மையங்களை அதிகரித்தல்

7. பினாங்கு மாநிலத்தில் செயல்படுத்தப்படுவதைப்போல, மூத்த குடிமக்களுக்கு 150 ரிங்கிட் நன்றி தொகையாக வழங்கப்படும்.